நூலகம்
நாவாந்துறை படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்

பக்கங்கள்:பதின்நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 சித்திரை 07 திங்கட்கிழமை (20.04.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:145

# இலங்கை குறித்து ஐ.நாவுடன் ஆராய

# பிரிட்டிஷ் பிரதிநிதி நியூயோர்க் விரைவு

## நம்பியாரின் விஜயம் குறித்துப் பாதுகாப்புச் சபைக்கு அறிக்கை சமர்ப்பிக்கக் கோருவார்



பிறவுனி



மிலிபான்ட்

கொழும்பு, ஏப்ரல் 20

இலங்கை நிலைவரம் தொடர்பாக ஐ.நா. பிரதிநிதிகளுடன் ஆராய்வதற்காக பிரிட்டன் தனது இலங்கைக்கான விசேட பிரதிநிதி டெஸ் பிறவுனியை நியூயோர்க்கிற்கு அனுப்பிவைத்துள்ளது என்று பிரிட்டனின் வெளிவிவகார அமைச்சர் தெரிவித்திருக்கின்றார்.

இலங்கை வந்து திரும்பிய ஐக்கிய நாடுகள் சபையின் உயர்அதிகாரி விஜய் நம்பியார் தமது விஜயம் குறித்துபாதுகாப்புச் சபைக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு விசேட பிரதிநிதி பிறவுனி கோருவார் என்றும் வெளிவிவகார அமைச்சர் கூறினார். (14 ஆம் பக்கம் பார்க்க)

## பிரிட்டன் தனது பிரதிநிதியை ஐ.நாவுக்கு அனுப்புவதைக் கண்டிக்கிறது இலங்கை அரசு

கொழும்பு, ஏப்.20

இலங்கை விவகாரம் குறித்து கலந்துரையாட ஐ.நாவுக்கு பிரிட்டன் தனது பிரதிநிதியை அனுப்பி வைத்துள்ளதை இலங்கை கண்டித்துள்ளது.

பாதுகாப்பு விவகாரங்களுக்கான பேச்சாளரும் அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல அரசின் கண்டனத்தை வெளிப்படுத்தினார்.

செய்தியாளர்களிடம் ரம்புக்வெல இது குறித்துத் தெரிவித்ததாவது:-

தனது பிரதிநிதி ஒருவரை ஐ.நா. பேச்சுக்களில் கலந்துகொள்ள பிரிட்டிஷ் அரசு அனுப்பியிருக்கிறது. தனது பிரதிநிதி ஒருவரை இவ்வாறு அனுப்பிவைப்ப



(14 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியில் காயமடையும் பொதுமக்களை கப்பலில் அழைத்துச் செல்வதில் பெரும் சிக்கல்

### செஞ்சிலுவைக் குழுவின் தலைவர் சொல்கிறார்

கொழும்பு, ஏப். 20

வன்னியில் மேற்கொள்ளப்படும் ஷெல் தாக்குதல்களால் காயமடையும் மக்களை சாலைக் கடற்கரை ஊடாகக் கப்பல் மூலம் புல்மோட்டை வைத்தியசாலைக்கு அழைத்து வருவது இன்றைய சூழ்நிலையில் சாத்தியமற்றதாகி வருகிறது.

இலங்கைக்கான செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் தலைவர் போல் ஹஸ்ரலா பி.பி.ஸிக்கு இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் இது குறித்து பி.பி.ஸிக்குத் தெரிவித்தவை வருமாறு -

தரைப்பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரச படைகளுக்கும் இடையில் கடுஞ்சண்டை இடம்பெற்று வருகின்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேசத்தின் அழுத்தங்களுக்கு அரசு இன்று சபையில் பதில்அளிக்கும்

கொழும்பு, ஏப். 20

யுத்தநிறுத்தத்தை மேற்கொள்ளுமாறு சர்வதேச நாடுகள் இலங்கை அரசுக்கு விடுத்துவரும் அழுத்தங்கள் தொடர்பாகவும் நோர்வேயுடனான இராஜதந்திர உறவைத் துண்டித்துக்கொள்ளுமாறு இலங்கை அரசுக்குள்ளிருந்து பிரயோகிக்கப்படும் அழுத்தங்கள் தொடர்பாகவும் இலங்கை அரசின் நிலைப்பாட்டை வெளிவிவகார அமைச்சர் றோஹித போகொல்லாகம இன்று நாடாளுமன்றில் தெரிவிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் அமைந்துள்ள இலங்கைத் தூதரகம் தாக்கப்பட்டமையைத் தொடர்ந்து அந்நாட்டுடனான இராஜதந்திர உறவைத் துண்டித்துவிடுமாறு அரசுடன் இணைந்துள்ள

(14 ஆம் பக்கம் பார்க்க)

## பிரபாகரன் பயங்கரவாதி அல்லர்; அவர் எனது நண்பர்

சொல்பவர் கருணாநிதி

சென்னை, ஏப்.20

புலிகளின் தலைவர் பிரபாகரன் எனது நண்பர். அவர் பயங்கரவாதி அல்லர்.

இப்படி நேற்று அதிரடியாகத் தெரிவித்திருக்கிறார் தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி. இந்தியாவின் என்.டி.ரி.வி. தொலைக்காட்சிக்கு வழங்கிய செவ்வி ஒன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

"புலிகளின் தலைவர் பிரபாகரன் ஒரு பயங்கரவாதியா?" என்று அவரிடம் கேட்கப்பட்டபோது, "இல்லை... இல்லை.... அவர் ஒரு பயங்கரவாதி அல்லர். அவர் எனது நெருங்கிய நண்பர். அப்படியென்றால் நானும் ஒரு பயங்கரவாதியா? இல்லையே" என்று பதிலளித்தார் கருணாநிதி.

"தமிழீழம் என்ற ஓர் அற்புதமான கொள்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## கடும் மழையின் மத்தியிலும் 36 மணிநேரத் தாக்குதல்களில் பாதுகாப்பு வலயத்தில் 310 பேர் பலி! 542 பேர் காயம்!!

கொழும்பு, ஏப். 20

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு மக்கள் பாதுகாப்பு வலயப்பகுதி மீது கடும் மழையின் மத்தியிலும் சனிக்கிழமை இரவு தொடக்கம் ஞாயிற்றுக்கிழமை நண்பல் வரையான 36 மணி நேரத்தில் படையினர் மேற்கொண்ட தாக்குதல்களில் 310 பேர் பலியாகினர்; 510 பேர் காயமடைந்தனர் என்று இணையத்தளங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இச்சம்பவம் தொடர்பாக இணையத் தளங்களில் தெரிவிக்கப்பட்டுள்ள விவரங்கள் வருமாறு:-

மக்கள் பாதுகாப்பு வலயப் பகுதிகளான முள்ளிவாய்க்கால், இரட்டைவாய்க்கால், அம்பலவன்பொக்கணை, இடைக்காடு, மாத்தளன் மற்றும் வலைஞர்மடம் ஆகிய பகுதிகளில் உள்ள மக்கள் வாழ்விடங்கள் மீது படையினர் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நள்ளிரவு தொடக்கம் நேற்று ஞாயிற்றுக்கிழமை இரவு வரை தொடர்ச்சியாக கொத்துக்குண்டு ஆட்லெறி ஷெல், பல்குழல் வெடிகணை, மோட்டார், பீரங்கி மற்றும் கனரக துப்பாக்கிச் சூட்டுத் தாக்குதல்களை நடத்தினர்.

(14 ஆம் பக்கம் பார்க்க)

## புதுமாத்தளனுக்கு இன்று கப்பலில் அத்தியாவசியப் பொருள்கள்

கொழும்பு, ஏப்.2

முல்லைத்தீவு, புதுமாத்தளன் பிரதேசத்திற்கு ஒருதொகுதி அத்தியாவசியப் பொருள்கள் இன்று அனுப்பி வைக்கப்படும் என்று அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் என்.திவாரட்ண தெரிவித்துள்ளார்.

இப்பொருள்கள் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பலின் மூலம் அனுப்பி வைக்கப்படவுள்ளன.

(14 ஆம் பக்கம் பார்க்க)

# போர் இடைநிறுத்தத்தை நீடிக்குமாறு அரசைக் கோரும் சர்வதேசம் ஒரு மணி நேர நடமாடும் சுதந்திரம் வழங்குமாறு புலிகளிடம் கேட்பார்களா?

## சவால் விடுகிறார் ஜனாதிபதி

கொழும்பு, ஏப். 20

புத்தாண்டை முன்னிட்டு அரசாங்கம் அறிவித்த மனிதாபிமான இடைவெளியை அல்லது போர் நிறுத்தத்தை நீடிக்குமாறு சர்வதேச மட்டத்திலும், உள்நாட்டு மட்டத்திலும் அரசாங்கத்தின் மீது அழுத்தம் கொடுத்துவருபவர்கள் அதற்குப் பதிலாக-

வடக்கின் பாதுகாப்பு வலயத்தில் சிக்குண்டுள்ள மக்களுக்கு ஒரு மணி நேரத்திற்கு மட்டும் நடமாடும் சுதந்திரத்தை வழங்குமாறு விடுதலைப் புலிகளிடம் கேட்டு கொள்ளட்டும்.

இவ்வாறு சவால் விடும் தொனியில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த சுமார் 30 வருடங்களாக மக்களைப் பிடித்து வைத்திருக்கும் விடுதலைப் புலிகள் மக்களுக்கு நடமாடும் சுதந்திரத்தை வழங்குவார்களாயின் அவர்கள் தமது சொந்த விருப்பத்தின் பேரில் அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வந்து சேர்வர் - என்றார் ஜனாதிபதி.



நேற்று முன்தினம்சனிக்

(14 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# நோர்வே வழங்கும் நஷ்டஈட்டை ஏற்க இலங்கை அரசு மறுப்பு

கொழும்பு, ஏப்.20

நோர்வேயில் இலங்கைத் தூதரகம் தாக்கப்பட்டமைக்காக நோர்வே அரசு வழங்கவிருக்கும் நட்டஈட்டை ஏற்றுக்கொள்வதில்லை என்று இலங்கை அரசு தீர்மானித்திருக்கிறது.

''தூதரகம் தாக்கப்பட்டமையால் ஏற்பட்ட இழப்பை நாங்களே பொறுப்பேற்றுக்கொள்வோம். இதற்காக நோர்வே வழங்கும் நஷ்டஈட்டை ஏற்றுக்கொள்ளமாட்டோம்'' என்று இலங்கை வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

மேற்படி சம்பவம் தொடர்பாக நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் இலங்கை வெளிவிவகார அமைச்சருடன் நேரடியாகத் தொர்டர்புகொண்டு வருத்தம் தெரிவிக்காதமை குறித்தும் அவர்கள் விசனம் தெரிவித்தனர்.

''நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் நடேசனுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு பேச முடியுமென்றால், இலங்கையின் வெளிவிவ கார அமைச்சருடன் தொடர்புகொண்டு தூதரகம் தாக்கப்பட்டமை குறித்துப் பேசுவதற்கு என்னதான் சிரமம் இருக்கிறது'' என்று வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகள் விசனத்துடன் கேள்வி எழுப்பினர்.

''ஒஸ்லோவிலுள்ள இலங்கைத் தூதரகத்துக்குத் தேவையான பொலிஸ் பாதுகாப்பை வழங்காதமையாலேயே தூதரகம் தாக்கப்பட்டது. புலிகளின் ஆதரவாளர்களான கும்பல் ஒன்று இந்தத் தூதரகத்தை தாக்கியமையானது வீடியோ மூலம் பதிவு செய்யப்பட்டிருக்கின்றது. எனவே, இது குறித்த விசாரணைகளை இலகுவாக மேற்கொண்டு குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கலாம். அதைச் செய்யாமல் விட்டுவிட்டு நஷ்டஈடு தருவதில் அர்த்தமில்லை'' என்றும் அவர்கள் கூறினர். (சி)

## மரண அறிவித்தல்

### திருமதி ஐயாத்துரை மகாலட்சுமி



அரியாலை, கலைமகள் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஐயாத்துரை மகாலட்சுமி காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிர்காமு - சின்னம்மா தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - மாணிக்கம் தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவரான மூதறிஞர் கவிஞர் வே.ஐயாத்துரையின் அன்பு மனைவியும் வரதராஜா (NEHRP செயலகம், யாழ்ப்பாணம்), ஜெயபாரதி, ஜீவதாசன் (தொல்பொருள் திணைக்களம், யாழ்ப்பாணம்), அபிராமி, வாணிதாசன் (ஜேர்மனி), முருகதாசன் (பரிசாரகர் - யாழ். போதனா வைத்தியசாலை), குமரதாசன் (ஆசிரியர், நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை, நல்லூர், அரியாலை சயன்ஸ் அக்கடமி), காலஞ்சென்ற குகதாசன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் இந்திராணி (சுகாதாரத் திணைக்களம், யாழ்ப்பாணம்), சி.சிவதாசன் (J.P., ஓய்வுபெற்ற முகாமையாளர், விற்பனைத் திணைக்களம்), ரஜனி, ந.மகேந்திரராஜன் (தாதியர் பயிற்சிப் பாடசாலை), றமணி (ஜேர்மனி), ஜெயகௌரி, விஜயா ஆகியோரின் அன்பு மாமியாரும் அமரர் கலாபூசணம் V.K.இரத்தினம், சிவபாக்கியம், மதுரவேணி, அமரர்களான தங்கம்மா, நாகலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற நடராசா, செல்வமணி, நாகமணி, சிவபஞ்சாட்சரம், புஸ்பமணி ஆகியோரின் அன்பு மைத்துனியும் சிவகுமார் (போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்), சத்தியகுமார் (யாழ்.தபாலகம்), திருமதி சுபாசினி செந்தில்நேசன், திருக்குமார் (வீரகேசரி நிறுவனம்), வராகினி, வரதாபரன் (IOM), வித்தியாபரன் (ஆசிரியர், வேலணை மேற்கு நடராஜா வித்தியாலயம்), காயத்திரி, பிரதாபரன் (பொறியியல் பீடம், மட்டக்குளி), அஜந்தன், அஜந்தா, அனோஜா, அர்ச்சனா, அச்சுதன் (IOM), சோபிதன், சுவேதன், சுகிர்தன், ராகுலன், சாருகி, ஆரபி, பிரசாந்தி, தீப்திகா, அட்சரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல.59, கலைமகள் வீதி, அரியாலையில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இன்று (20.04.2009) திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*இல.59, கலைமகள் வீதி,*
*அரியாலை மேற்கு,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
ஐ.வரதராஜா (மகன்)
(NEHRP, செயலகம், யாழ்ப்பாணம்).


**Personal Class**

தரம் 1-12 வரையான மாணவர்களுக்கு English Personal Class உம் Spoken with Grammar கற்கவிரும்புவர்களுக்கு வீடுகளில் வந்து கற்பிக்கப்படும். (மேலதிக விவரங்களுக்கு ஆசிரியரைத் தொடர்பு கொள்ளவும்).
தொ.இல: கொக்குவில் கிழக்கு, கொக்குவில். T.P. 0771372280



**வணிகக் கல்வி**

**<= A/L - 2010 =>**

மீட்டல் வினாவிடை வகுப்பு
ஆரம்பம்:- 22.04.2009 (புதன் மாலை 3.30 p.m)
V.முரளி B.B.A. (F.M. Spl.)

**பொருளியற்கல்லூரி**
யாழ்ப்பாணம்.


### தவறிவிட்டது

மாணிக்கவாசகர் பகீரதன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை இல (921562799V) கடந்த 18 ஆம் திகதி சனிக்கிழமை மானிப்பாய்க்கும் மாவடிச் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் சின்னப்பா வீதி, நவாலி கிழக்கு, மானிப்பாய் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும்.

தொ.பே.இல. 0778056252
அல்லது0778051870

### கைதடி நலன்புரி நிலையத்திற்கு அரச களஞ்சியத்திலிருந்து தண்ணீர்

கைதடியில் உள்ள நலன்புரி நிலையத்திற்கு நாவற்குழி அரச களஞ்சியத்தின் பொதுக்கிணற்றிலிருந்து தண்ணீர் விநியோகிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதற்கான ஏற்பாடுகளை தேசிய குடிதண்ணீர் வழங்கல் அபிவிருத்தி அதிகார சபையினர் மேற்கொண்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கைதடி நலன்புரி நிலையத்தில் உள்ள மக்களின் தண்ணீர்த் தேவை அதிகரித்து காணப்படுவதால் இத்தகைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாவற்குழி அரச உணவுக் களஞ்சியத்தில் உள்ள பொதுக்கிணற்றிலிருந்து குழாய் மூலம் நீர்விநியோகிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன - என்று தெரிவிக்கப்பட்டது.(9-224)

### தொழில் சார் உபகரணங்கள் வழங்கப்பட்டன

தென்மராட்சி பிரதேசத்தில் வடக்கு கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாணத் திட்ட நிறுவனத்தினரால் (நியாப்) நடத்தப்பட்ட தச்சுத் தொழில் பயிற்சி பெற்ற பயனாளிகளுக்கு தொழில் உபகரணங்களும் பயிற்சிச் சான்றிதழும் வழங்கப்பட்டன.

பிரதேச செயலக கூட்டப்போர் கூடத்தில் பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நிறுவன பிரதிநிதிகளும் பங்குபற்றியதாகத் தெரிவிக்கப்பட்டது. (1-207)


**CAD & BS**

Computer Aided Drafting and Building Studies

To Complete a prestigious courses in Jaffna

Full of Job Opportunities Everywhere



**Modules**

1.Building Technology
2.Construction Materials
3.Building Services
4.Building Drawings
5.Quantity Surveying
6.Basic Theory of Structures
7.Computer Aided Drafting

விசேடமாக வடிவமைக்கப்பட்ட இக்கற்கை நெறியானது கட்டடத் தொழில்நுட்பவியலாளர்கள், கட்டடத் தொழில்நுட்ப மாணவர்களுக்காக நவீன தொழில்நுட்ப யுக்திகளை உங்கள் துறையில் பிரயோகிக்கதக்க வகையில் வடிவமைக்கப்பட்ட விசேட கற்கைநெறியாகும். இக்கற்கைநெறி இத்துறையில் நீங்கள் உயர்கல்வியை தொடரவோ அல்லது வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொள்ளவோ ஓர் சிறந்த அத்திவாரமாகும்.

வெகு வேகமாக வளர்ந்து வரும் கட்டட நிர்மாணத்துறையில் CAD வடிவமைப்பாளர்கள், தலமேற்பார்வையாளர்கள் போன்ற வேலைவாய்ப்புகளுக்கு அடிப்படையான நவீனதொழில் சார் நுட்ப அறிவினை உள்ளடக்கியுள்ள கற்கைநெறியாக அமைத்துள்ளது

Duration : 6 Months
Commences : 26th April 2009
Registration now on...

For Information | Neergi 077 9865559 | Bahee 077 9853727

**IIS CITY CAMPUS**
#200,Sivan Pannai Road,Jaffna.
Tel:021 222 8060 Fax:021 222 6935
Web: www.iiscitycampus.com



**BARATHY**

சித்தன்கேணி

**O/L DAY CLASS**

புதிய பிரிவுகள் நடைபெறுகின்றன.
திங்கள் முதல் வெள்ளி வரை
காலை 8.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை
எமது தனித்துவமும் அதிதிறமையும் கொண்ட ஆசிரியகுழுவினால்,

| | |
|---|---|
| விஞ்ஞானம்:- தேவா | கணிதம்:- சிவரூபன் |
| தமிழ்:- குகபரன், தமிழ்மாறன் | வரலாறு:- சுதன், R.S.சந்திரன் |
| ஆங்கிலம்:- விஜயபாஸ்கரன், வாசவன் | சமயம்:- தரன் |
| வணிகக் கல்வி முயற்சியாண்மை:- லோகேஸ்வரன் | |

Note:- மேற்குறிப்பிட்ட ஆசிரியர்கள் இப்பிரதேசத்தில் எமது நிறுவனத்தில் மட்டும் தான் கற்பிப்பார்கள்.
* சென்ற ஆண்டு போல் இவ்வாண்டும் 100 மாணவர்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படும். அனுமதிக்கு முந்திக்கொள்ளுங்கள்.


## மரண அறிவித்தல்கள்

### மயில்வாகனம் வைத்திலிங்கம்

(ஓய்வுபெற்ற கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்)



சரசாலையைப் பிறப்பிடமாகவும் மீசாலை மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் வைத்திலிங்கம் நேற்று (19.04.2009) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மயில்வாகனம் - அன்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற இளையதம்பி - சின்னம்மா தம்பதியினரின் மருமகனும் காலஞ்சென்ற இராசலட்சுமியின் அன்புக் கணவருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (19.04.2009) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிணமுருங்கை இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கேரதீவு வீதி,*
*நாவற்குழி.*

தகவல்:
பொ.பாலச்சந்திரன் (பெறாமகன்).

### திருமதி இளையதம்பி சரஸ்வதி



மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தற்போது கோண்டாவிலில் வசித்தவருமாகிய திருமதி இளையதம்பி சரஸ்வதி 18.04.2009 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் அமரர் சின்னட்டி இளையதம்பியின் மனைவியும் மகேஸ்வரி, செல்லத்தம்பி, வியஜரட்ணம், மகாதேவன் (யதாஸ் ஹொட்டல், அச்சுவேலி), தவமணிதேவி, வண்ணக்கிளி, பத்மாவதி, அன்னலட்சுமி ஆகியோரின் தாயாரும் அமரர் தவத்துரை, இராஜேஸ்வரி, மஞ்சுளா, நித்தியானந்தன் (நீர் வழங்கல் பகுதி, திருநெல்வேலி), சர்வேந்திரன், கந்தசாமி, மதியழகன் ஆகியோரின் மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.04.2009) திங்கட்கிழமை மு.ப. 10 மணியளவில் கலைவாணி வீதி, கோண்டாவில் வடக்கிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொட்டைக்காடு மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கலைவாணி வீதி,*
*கோண்டாவில்.*

தகவல்:
இ.செல்லத்தம்பி (மகன்).

### செல்வி நன்னித்தம்பி புவனேஸ்வரி



நவாலி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி நன்னித்தம்பி புவனேஸ்வரி நேற்று (19.04.2009) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நன்னித்தம்பி - இராசம்மா தம்பதியினரின் மகளும் காலஞ்சென்ற இராஜேஸ்வரியின் சகோதரியும் சோதிரத்தினத்தின் (இளைப்பாறிய தபாலதிபர்) மைத்துனியும் தமயந்தி, வசந்தரா (உப அதிபர், மானி.இந்துக் கல்லூரி), வசுமதி, சர்வானந்தன் (tigo - கொழும்பு), அனுஷியா (மானிப்பாய் ப.நோ.கூ.ச.), நந்தினி (கனடா), கிருபானந்தன் (மானிப்பாய் ப.நோ.கூ.ச.), மஞ்சுளா (Supper Accounting Branch, கொழும்பு) ஆகியோரின் சிறிய தாயாரும் லயன் சிவராஜீஸ்வரன் (அபிவிருத்தி திணைக்களம், அபிவிருத்திச்சபை ஒப்பந்தகாரர்), சிவபுண்ணியம் (கனடா), ஜெசிந்தா (கொழும்பு), லதா (ஆசிரியை, மயிலிட்டி றோ.க.) ஆகியோரின் மாமியாரும் கலா, நிரோஜன் (கொழும்பு), சர்மிளா (கொழும்பு), சர்மிஸ்த்தா (கனடா), சனோஜ் (கனடா), கஜலக்ஷி ஆகியோரின் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.04.2009) திங்கட்கிழமை மு.ப. 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஆரியம்பிட்டி மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அரசடிச் சந்தி,*
*நவாலி வடக்கு, மானிப்பாய்.*

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# தட்டிப் பார்த்தால் தானே தெரியும் கதவு திறக்கப்படுகிறதா என்று....!

வவுனியாவில் உள்ள நலன்புரி நிலையங்களில் தங்கியிருக்கும் தனது உள்ளூர்ப் பணியாளர்களைச் சுதந்திரமாக நடமாட அனுமதிக்குமாறு ஐக்கிய நாடுகள் சபை, இலங்கை அரசாங்கத்திடம் கேட்டிருப்பதாகத் தகவல்கள் வெளியாகி உள்ளன.

இதற்கான கோரிக்கைக் கடிதம் ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான பிரதிநிதி நீல் புஹூனேயிடம் இருந்து மீள்குடியமர்வு புனர்வாழ்வுத்துறை அமைச்சர் ரிச்சார்ட் பதியூதீனுக்குக் கிடைத்திருக்கிறது.

ஐக்கிய நாடுகள் சபையின் கோரிக்கை குறித்து, தமது அமைச்சு அதிகாரிகள், படை அதிகாரிகளுடன் கலந்தாலோசனை நடத்தி வருவதாக அமைச்சர் பதியூதீன் தெரிவித்திருக்கிறார்.

வவுனியாவில் உள்ள நலன்புரி நிலையங்களில் - தடுப்பு முகாம்களில் - ஐக்கிய நாடுகள் சபையின் உள்ளூர் பணியாளர்கள் பதினொரு பேர் தமது குடும்பங்களுடன் தங்கியிருப்பதாக ஐ.நா.வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தமது உள்ளூர் பணியாளர்களை, சுதந்திரமாக நடமாடுவதற்கு அனுமதிக்குமாறு ஐக்கிய நாடுகள்சபை ஏற்கனவே பல தடவைகள் இலங்கை அரசாங்கத்தைக் கேட்டிருந்ததாகவும், ஆனால் அதற்கான நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் நியுயோர்க்கில் உள்ள ஐ.நாவின் பேச்சாளர் பார்ஹன் ஹக் கூறியிருக்கின்றார். ஐக்கிய நாடுகள் சபைக்கே இத்தகைய பரிதாப நிலை என்றால்... ஏனையோருக்கு...? ...தமிழர்களுக்கு?

தமிழர்கள் என்றால், அதுவும் வன்னியில் இருந்து வந்தவர்கள் என்றால் அவர்கள் எல்லோருமே விடுதலைப் புலிகள் தான் என்ற கண்ணோடு பார்க்கும் படை அதிகாரிகளும் அரச சிவில் அதிகாரிகளும் ஐக்கிய நாடுகள் சபையின் பணியாளர்கள் என்றதும் அவர்களை புறநீங்கலாக்கிவிட மாட்டார்கள். இது அரசின் பொது விதியின் கீழ் விதி விலக்குக்கு உரியதல்ல என்பது இலங்கையர்களுக்குத் தெரிந்த சங்கதி தான்!

ஆனால், அகதிகளாயினும் சரி, இடம்பெயர்ந்தவர்களாயினும் சரி, அவர்களின் நடமாடும் சுதந்திரம் கட்டுப்படுத்தப்படுவது மனிதாபிமான விதிகளுக்கு முரணானது. இது அரசாங்க அதிகாரிகளுக்கும் அமைச்சர்களுக்கும் தெரியாத விடயமும் அன்று.

ஏனெனில், தமிழர்களை எந்த விதமாக நடத்தினாலும் அவசரகால நிலை, பயங்கரவாதத் தடைச்சட்டம் என்ற பல வகையறாக்களுக்கு உள்ளே செருகி அவற்றில் தமக்கு வாய்ப்பாக உள்ள ஏதோ ஒன்றோடு பொருத்திவிடுவது தான் இங்குள்ள 'ஒழுங்குவிதி'.

வவுனியா நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ள வன்னி மக்களை வவுனியாவில் நிரந்தரமாக வாழும் அவர்களது இரத்த உறவினர்களே சந்திப்பதற்கோ, தூர நின்று சுகம் விசாரிப்பதற்கோ ஆரம்பத்தில் தடைவிதிக்கப்பட்டிருந்தது ஒன்றும் இரகசியம் அல்ல.

தமது உறவுகளில் எவரும் அராங்கத்திடம் தஞ்சம் கோரி வன்னியில் இருந்து வவுனியா வந்துள்ளார்களா என்பதனை அறியமுடியாது வவுனியா வாழ் தமிழ் மக்கள் மனவேதனையுற்றதும் அங்கலாய்த்ததும் அவதி உற்றதும் மறந்துவிடக் கூடியவையல்ல. உயிரைக் காப்பாற்று வதற்காக வன்னியில் இருந்து வவுனியா வந்துவிட்டோம், இங்குள்ள எமது உறவுகள் தேடிவந்து உதவ மாட்டார்களா, மன ஆறுதல் தரமாட்டார்களா? எங்கள் துயரத்தை, சோகத்தை அவர்களோடு பகிர்ந்து மனதில் ஏறியுள்ள அந்த பாரத்தை இறக்க முடியாத என்று இடம் பெயர்ந்த மக்கள் பல வாரங்கள் ஏக்கப் பெருமூச்சு விட்ட கவலை தரும் கதைகள் பல அத்தியாயங்களாக அப்போது விரிந்தது இப்போது பரகசியம்.

இவை யாவும் நலன்புரி நிலையங்களை வந்து பார்வையிட்ட ஐ.நா. மற்றும் சர்வதேச மனிதாபிமான அதிகாரிகளுக்கு தெரிந்திருக்க வசதி இல்லை.எனினும் நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளவர்கள் இராணுவ தடுப்பு முகாம்க ளில் தரித்திருக்கும் கண்றாவியே உண்மையான காட்சி என்று ஒரு சில சர்வதேச அதிகாரிகள் கூறியதையும் மறப்பதற்கில்லை.

இத்தகைய, பின்புலத்தில் தமிழர்கள் என்றால் அவர்களுக்குள்ள அடிப்படை மனித உரிமைகளையும்கூட தேவையின் பிரகாரம் மதிக்காமல் உதாசீனம் செய்யலாம் என்ற எழுதப்படாத விதி இந்த நாட்டில் நடைமுறையில் உள்ளதை ஐக்கிய நாடுகள் சபை அதிகாரிகள் இப்போதாவது உணர்ந்து கொள்வார்கள், தெரிந்துகொள்வார்கள் என்று நம்பலாம்.

தமது உள்ளூர் பணியாளர்களைச் சுதந்திரமாக நடமாட அனுமதிக்க வேண்டும் என்ற ஐ.நா. அதிகாரிகளின் கோரிக்கை - தனக்குத் தனக்கு என்றால் சுளகு படக் குப் படக்கு என்றுஅடிக்கும் என்ற பேச்சு வழக்கு வாசகத்தை ஞாபகம் ஊட்டுகிறது.

. தட்டிப் பார்ததால் தானே தெரியும் உள்ளே இருப்பவர் கதவைத் திறக்க வருகிறாரா.... என்று....!

# புலிகளின் தலைவர் பிரபாவின் ஜாதகக் குறிப்பு
# முன்னேறும் படைகளிடம் சிக்கியுள்ளதாம்

**நேற்று 19ஆம் திகதி 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகையில் வெளியான அரசியல் விமர்சனத்திலிருந்து ஒருபகுதி இங்கு தரப்படுகின்றது.**

இருநாள் போர் ஓய்வும் அதைத் தொடர்ந்து ஏற்பட்ட அமைதியும் இலங்கை மீதான உலக கவனத்தை மாற்றிவிடவில்லை.

சில மேற்குலகத் தலைவர்களும் சில உயர் அதிகாரிகளும் கொழும்பிலுள்ள சில இலங்கைத் தலைவர்களுடன்தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசுவதற்கு முயற்சிகள் எடுத்தார்கள். புதுவருட கொண்டாட்ட காலத்தில் மேற் கொள்ளப்பட்ட போர் ஓய்வினை நீடிக்கச் செய்யும்படி கேட்பதற்காகவே மேற்குலகத் தலைவர்கள் இவ்வாறு தொடர்புகள் கொள்ள முயற்சி எடுத்தனராம். ஆனால் அந்த தொலைபேசி அழைப்புக்களுக்கு செவிமடுக்க இலங்கைத் தலைவர்கள் எவரும் இருக்கவில்லை. அவர்கள் எல்லாம் விடுமுறைகளைக் கழிப்பதற்குச் சென்றுவிட்டார்கள் என்று கூறப்பட்டதாம்.

எதுவானாலும் போர்நிறுத்தத்தை நீடிக்கும் எண்ணத்தில் இலங்கை அரசாங்கம் இருக்கவில்லை.

### உயர்மட்டத்தில் விவாதம்

உயர்மட்டத்தில் இந்தக் கோரிக்கைகள் பற்றி விரிவாக ஆலோசிக்கப்பட்டுள்ளது. பெரும்பான்மையானவர்கள் போர் ஓய்வை நீடிப்பதற்கு எதிராகவே இருந்துள்ளனர். அவ்வாறு

# தமிழ்நாட்டின் அரசியல் நிலையால் மத்தியில் தலைவர்கள் சங்கடத்தில்

செய்தால் எஞ்சியுள்ள புலித் தலைவர்கள் மீண்டும் தலைதூக்குவதற்கு உதவியதாகவே முடியும் என்று அவர்கள் கருதினார்கள். எஞ்சியுள்ளவர்களில் புலிகளின் மிக உயர்மட்டத் தலைவர்களும் இருப்பதாகக் கருதப்படுகின்றது. எனவே அரசு எதுவித அழுத்தத்திற்கும் விட்டுக்கொடுக்கப் போவதில்லையென்று அறிவிக்கப்பட்டது.

### வடக்கிற்கு கிழக்கு முன்மாதிரியில்லை

வன்னியில் போர் முடிவுக்கு வந்ததன் பின்னர் இணைத்தலைமை நாடுகளும் இலங்கை அரசாங்கமும் கிழக்கு மாகாணத்தில் செய்த தவறுகளை மீளவும் செய்யக்கூடாது என்று சர்வதேச நெருக்கடிகள் தொடர்பான அமைப்பு (ICG) தெரிவித்துள்ளது. கிழக்கு மாகாணத்தில் தொடர்ந்தும் வன்செயல்கள் இடம்பெற்று வருவதைஅவ்வமைப்பு சுட்டிக் காட்டியுள்ளது.

கிழக்கின் இன்றைய நிலைமை வடக்கிற்கு முன்மாதிரியாக அரசு எடுத்துக் காட்டக்கூடியதாக இல்லையென்று அவர்கள் கூறியுள்ளார்கள்.

இலங்கைக்கு மேற்கொண்டும் வெளிநாட்டு உதவிகள் எதிர்பார்க்கப்படும் நிலையில் இந்த அறிவுறுத்தல் வந்துள்ளது.

### இந்தியத் தரப்பில் புது நெருக்குதல்

இந்தியத் தரப்பிலிருந்து சமீப காலமாக வழக்கத்துக்கு மாறான நெருக்குதல் இப்போது வர ஆரம்பித்துள்ளது. இது உள்நாட்டில் எழுந்துள்ள நிலைமைகளால் ஏற்பட்ட சிக்கலாகும். குறிப்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கும் நாடாளுமன்றத் தேர்தல் பிரசாரங்களாகும். முன்னாள் தமிழ்நாடு முதலமைச்சர் ஜெயலலித்தா ஜெயராம் மற்றும் இலங்கைத் தமிழர் தொடர்பாக நெருப்பு கக்கிக் கொண்டிருக்கும் வைகோ முதலானவர்கள் இந்திய மத்திய அரசு இலங்கைத் தமிழர்கள் படும் துயரங்கள் பற்றி கவலையுறாமல் அமெரிக்காவுடனான உறவுகளைப் பலப்படுத்துவதில் தீவிரம் காட்டுவதாக குற்றஞ் சாட்டுகிறார்கள். கம்யூனிஸ்ட் கட்சிகளும் இதேவித குற்றச்சாட்டுகளை இந்திய மத்திய அரசின் மீது சுமத்தி வருகிறார்கள்.

### சம உரிமை அல்லது தமிழ் ஈழம்

ஜெயலலிதா விடுத்துள்ள தேர்தல் அறிக்கையில் இலங்கைத் தமிழர்களுக்கு தெற்கில் வாழ்கின்றவர்கள் போன்று சம உரிமை வழங்கப்பட

# பேர்போன சோதிடர்கள் அதனை ஆராய்ந்து வருகிறார்கள்

வேண்டும். இல்லையென்றால் தமிழ் ஈழக் கோரிக் கையைத் தாம் ஆதரிக்கப் போவதாக அறிவித்துள்ளார். இது புதுடில்லியில் ஓரளவு ஆச்சரியத்தை ஏற்படுத்தியி ருந்தாலும் வன்னியில் புலிகள் மீது நடத் தப்பட்டுவரும் தீவிர தாக்குதல்கள் குறித்து எதுவித கருத்தும் வெளியிடாமல் மௌனமா கவே இருந்து வருகின்றார்.

மிகுந்த அழுத்தங்களையடுத்து இந்திய வெளியுறவு அமைச்சின் அறிக்கையொன்று இலங்கை அரசைக் கண்டிப்பதாக விடுக்கப்பட்டிருந்தது.

என்றாலும் இடைத்தரகர் பணி எதனையும் இந்தியா செய்யப் போவதில்லையென்று தெளிவுபடுத்தப்பட்டிருந்தது. இராணுவ நடவடிக்கை தொடர்வதானது மேற்கொண்டும் பொதுமக்கள் உயிர் இழப்பதையே குறிக்கும். பொதுமக்களுக்கு ஏற்படும் துன்பங்கள் குறித்து இலங்கை இந்திய அரசுகள் கண்ணை மூடிக் கொண்டிருக்க முடியாது.

இந்திய அரசின் கோரிக்கை போர்நிறுத்தம் என்று மோதலை கொஞ்சம் நிறுத்தி வைக்க வேண்டும் என்பது போன்ற கோரிக்கைதான்.

### ஜனாதிபதிக்கு ஏற்பட்டுள்ள மகிழ்ச்சி

ஜனாதிபதி ராஜபக்ஷவைப் பொறுத்தவரை இராணுவத்தினரின் நடவடிக்கைகளை மிக நெருக் கமாக இருந்து அவதானித்து வருகிறார். புலிகள் வசமிருந்த சிறுபகுதியைத் தவிர ஏனைய பகுதிகளையெல்லாம் இராணுவத்தினர் கைப்பற்றிவிட்டார்கள் என்பது அவருக்கு பெரும் மகிழ்ச்சியளிக்கும் விடயமாகும். அத்துடன் இராணுவம் புலிகளின் பெரும் பகுதி ஆயுதங்களையும் இராணுவ கனரக பொருள்களையும் கைப்பற்றி யிருப்பது அவருக்கு மகிழ்ச்சியளிப்பதாகும். இவைகளில் 130 mm ஆட்டிலறி பீரங்கிகள் புலிகளிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளன. இவைகளை வைத்தே பூநகரி, கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு போன்ற இடங்களிலிருந்து புலிகள் பலாலி மீது ஆட்டிலறி தாக்குதல்களை நடத்தி வந்துள்ளார்கள் என்று கூறப்படுகின்றது.

### பிரபாகரனின் ஜாதகம்

லிபியாவிலிருந்து திரும்பிய பின்னர் ஜனாதிபதிக்கு ஒரு தகவல் கிடைத்ததாம். புலிகளின் தலைவர் பிரபாகரனின் ஜாதகக்குறிப்பு கிடைத்துள்ளது என்று ஜனாதிபதிக்கு அறிவிக்கப்பட்டதாம்.

இராணுவத் தளபாடங்கள் பிடிபட்டது போலவே பிரபாகரனின் ஜாதகக் குறிப்பு கிடைத்ததும் முக்கிய விடயமாகக் கருதப்பட்டது.

பிரபாகரனின் ஜாதகக் குறிப்பினை நாட்டின் மிகப் பிரபலமான ஜோதிடர்கள் ஆராய்ந்து வருவதாகக் கூறப்படுகின்றது.

எதைத்தான் அவர்களால் ஆராய்ந்து கூறமுடியாமல் போனாலும் ஒரு விடயம் மட்டும் மறுக்க முடியாது என்பது உண்மையாகும். அதாவது இந்தக் காலகட்டம் பிரபாகரனுக்கும் அவரைச் சார்ந்துள்ள முக்கிய தலைவர்களுக்கும் மிக மோசமான காலம் என்பதாகும் அது.

பொதுமக்கள் கொல்லப்படுவது ஐ.நா. மட்டத்தில் கவனத்தை ஈர்த்துள்ள ஒரு விடயமாகும்.

இன்னர் சிற்றிபிரஸ்ஸின் மெத்யு லீ இது விடயமாக பின்வரும் தகவலைத் தந்துள்ளார்.

வட இலங்கையில் ஜனவரி 20 இல் இருந்து இறந்தவர்களின் எண்ணிக்கை 2682 இலிருந்து 4,500 ஆக அதிகரித்துள்ளது என்று ஐ.நா. அதிகாரிகள் தெரிவித்துள்ளார்கள். ஆனால் ஐ.நா.பேச்சாளர் பார்ஹான் ஹாக் இந்த எண்ணிக்கையை ஊர்ஜிதம் செய்ய மறுத்துவிட்டார்.

கொழும்பில் இலங்கை ஜனாதிபதியையும் அவரது சகோதரரையும் சந்தித்த ஐ.நா. விசேஷப் பிரதிநிதி விஜய் நம்பியார் போர்நிறுத்தம் ஒன்றினை வலியுறுத்தினாரா என்று இன்னர் சிற்றி பிரஸ்ஸின் மெத்யு லீ ஐ.நா. பேச்சாளர் ஹக்கிடம் கேட்டார். அதற்குப் பதிலளிக்கையில் கனரக ஆட்டிலறி ஆயுதங்களைப் பிரயோகிக்க வேண்டாம் என்றுதான் ஐ.நா.கேட்டுக் கொள்கிறது என்று அவர் கூறினார்.

நம்பியார் கொழும்பில் நடத்திய பேச்சுக்களின் விவரம் இந்த வாரம் செயலாளர்நாயகம் பாதுகாப்புச் சபை உறுப்பினர்களுடன் நடத்தவிருக்கும் மதியபோசன வேளையில் வெளியிடப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அமைதிக்கான அனுசரணையாளர் அந்தஸ்திலிருந்து நோர்வேயை அகற்



ஒஸ்லோவில் உள்ள இலங்கைத் தூதகம் சேதமடைந்து இருப்பதை தூதுவர் விக்கோன் பார்வையிடுகிறார்.

றிவிட்டதாக இலங்கை அரசு கடந்த வாரம் அறிவித்தது. ஒஸ்லோவிலுள்ள இலங்கைத் தூதரகம் தாக்கப்பட்டதையடுத்து இந்த நடவடிக்கையை இலங்கை அரசு எடுத்தது.

இலங்கை அரசின் விருப்பத்துக்கு மாறாக நோர்வே பல தடவைகள் நடந்து கொண்டிருப்பதால் இலங்கை அவ்வாறான ஒரு நடவடிக்கையை எடுக்க நேர்ந்தது. புலிகளுக்கு வெளிநாடுகளிலிருந்து ஆயுதங்களைத் தருவிப்பவர் என்று கருதப்படும் எஸ்.பத்மநாதன் என்பவரை இலங்கையிலுள்ள நோர்வே தூதுவர் டோறேஹேட்ரம் ஆஸிய தலைநகர் ஒன்றில் வைத்து சந்தித்திருந்தமை இலங்கைக்கு ஆத்திரத்தைக் கொடுத்திருந்தது.

மேலும் இலங்கைப் பிரச்சினையை ஐ.நா. பாதுகாப்புச்சபையில் வீவாதிக்கச் செய்வதற்கு முன்னின்று ராஜதந்திர மட்டத்தில் உழைத்த நாடுகளில் முக்கியமானது நோர்வே என்பதும் ஒரு காரணம் என்று கூறப்படுகின்றது. ஆனால் இந்த மாதிரியான குற்றச் சாட்டுக்களையெல்லாம் நோர்வே மறுத்தே வந்துள்ளது.

(ப)

## நாளை

| | |
|---|---|
| சித்திரை 08 | 21.04.2009 செவ்வாய்க்கிழமை |
| திதி: | ஏகாதசி மு.ப. 11.05 வரை |
| நட்சத்திரம்: | சதயம் பி.ப. 12.20 வரை |
| [illegible] | 10.31 - 12.01 |
| ராகுகாலம்: | 03.[illegible] - 04.31 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரும்பிராய் ஆரம்ப மருத்துவப் பராமரிப்புப் பிரிவு
## பணிமனைத் திறப்புவிழா சிறப்பு மலர் - 20.04.2009

### இறையருள் கிடைக்கட்டும்



"சுத்தம் சுகம் தரும்" என்ற கருவிற்கேற்ப இவ்வூர் மக்களின் நலனைக் கருதி, சுகாதாரத்தைப் பேணி மக்களின் நோய், நொடிகளைத் தீர்ப்பதற்காக எமது பிரதேசத்தில் ஆரம்ப சுகாதார மருத்துவப் பிரிவு நிலையத்தைத் திறப்பதையிட்டு மகிழ்ச்சி அடைவதுடன் எல்லாம் வல்ல கற் பக விநாயகரின் அருளுடன் இந்நிலையம் சிறப்பாக செயற்பட, இந் நிலையத்தில் கடமையாற்றும் அனைவருக்கும் எனது ஆசியை வழங்குவதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

" என்றும் மங்களம் உண்டாகட்டும்"
" சத்தம் சோபனம் பவது"

சிவஸ்ரீ இ.நகுலேஸ்வரக் குருக்கள், பிரதம குரு.
உரும்பிராய் ஓடையம்பதி கற்பக விநாயகர் தேவஸ்தானம்.



### அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி



பல்வளங்களும் அமையப் பெற்ற உரும்பிராய் நகரிலே மக்களின் அடிப்படைத் தேவைகளில் மிக அத்தியாவசிய தேவையெனக் கருதப்படும் மருத்துவ சேவையை உள்ளூரிலேயே வழங்கி, உறுதுணையாய் நின்ற உரும்பிராய் ஆரம்ப மருத்துவப் பராமரிப்புப் பிரிவு, இதுகாலவரை இடப் பற்றாக்குறை, அமைதியற்ற அமைவிடம் என்ற பல்வேறு சிரமங்களின் மத்தியிலும் தனது சேவையைத் திறம்பட ஆற்றியுள்ளது. ஆயின் உரும்பிராய் மத்திய மருந்தக அபிவிருத்திச் சபை என ஒன்று நிறுவப்பட்டு, மருந்தகத்திற்கென வசதி, வாய்ப்புக்களோடு கூடிய நிரந்தரமான கட்டடமொன்றை அமைக்கும் முயற்சியில் முனைந்து நின்றவேளை, சமூகநலன் விரும்பி ஒருவரினால் வழங்கப்பட்ட காணி, அமைதியானதொரு அமைவிடத்தைத் தர "நிக்கொட்" நிறுவனத்தின் பெரு நிதியுடன் சகல வசதிகளுடனும் கூடியதொரு ஆரம்ப மருத்துவப் பிரிவிற்கான, நிரந்தரமான கட்டடமொன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளமை மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். குறைந்த வளங்களுடன், நிறைந்த சேவைகளை வழங்கி வந்த உரும்பிராய் ஆரம்ப மருத்துவப் பராமரிப்புப் பிரிவு, நிறைந்த வளங்களோடு கூடிய இக் கட்டடத்தின் வாயிலாக வழங்கப் போகும் சேவை, உரும்பிராய் மக்களுக்குப் புதியதொரு உதயமாய் அமையுமென்பதில் ஐயமில்லை. "முயற்சி திருவினையாக்கும்" என்ற கூற்றிற்கிணங்க, பல்வேறு தரப்பினரதும் தளராத முயற்சியால் இன்று நிமிர்ந்து நிற்கும் இக் கட்டடம், தனது சேவையால் சிறந்து நிற்க, மனமுவந்து வாழ்த்துகின்றேன்.

க.கணேஷ்,
அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலர், யாழ்.மாவட்டம்.

### சேவைகள் தொடரட்டும்



உரும்பிராய் ஆரம்பப் பராமரிப்பு நிலையத்திற்கு புதிய கட்டடம் அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்படுவதையிட்டு மகிழ்ச்சியும் மன நிறைவும் அடைகின்றேன். 60 வருடங்களுக்கு மேலாக இவ்வைத்தியசாலை தனியார் கட்டடங்களிலும், பிரதேசசபைக்கு சொந்தமான கட்டடத்திலும் இயங்கி வந்தது. யாழ்.மாவட்டத்தில் சுகாதார திணைக்களத்தின் கீழ் இயங்கும் வைத்தியசாலைகளுக்கு சொந்தக்காணியில் சொந்தக்கட்டம் அமைக்கப்பட வேண்டும் என்ற திட்டத்தின் கீழ் 10 மில்லியன் ரூபா நிதியுதவியுடன் இவ்வைத்தியசாலை அமைக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களிலும் வாழும் மக்களுக்கு அந்தந்தப் பிரதேசத்திலேயே இயன்றளவிற்கு மருத்துவசேவைகள் கிடைக்க வேண்டும். இந்தக் குறிக்கோளுடனேயே நாம் யாழ்.மாவட்ட சுகாதார சேவைகளை அபிவிருத்திசெய்து வருகின்றோம். அந்த அடிப்படையில் இவ்வைத்தியாலையும் மென்மேலும் வளர்ந்து இப்பிரதேச மக்களுக்கு சிறந்த சேவைகளை வழங்க எனது நல்வாழ்த்துக்கள். இவ்வைத்தியசாலை இப்பிரதேச மக்களின் நீண்டநாள் கனவு. இக்கனவை நனவாக்க உதவிய அனைத்து நல்லுள்ளங்களுக்கும் சுகாதார திணைக்களத்தின் மனமார்ந்த நன்றிகள் காணிக்கையாகட்டும்.

வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன்,
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், யாழ்ப்பாணம்.

### கனவு நனவாகிறது.......



"நமது இன்றைய செயல்களுக்கு நேற்றைய நம் கனவுகளே பொறுப்பு", என்றார். கீட்ஸ் என்ற கவிஞர். அவ்வகையில் உரும்பிராய் வாழ் மக்களின் மிக நீண்ட காலக் கனவு, செயல் வடிவம் பெற்று நனவாகியுள்ளது என்றே கூறவேண்டும்.

மருந்தகத்திற்கென சொந்தக் கட்டடம் இல்லாமல், வசதிகள் குறைந்த வாடகைக் கட்டடத்தில் இயங்கிவந்த நிலையில், யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரினதும் அபிவிருத்திச் சபையினதும் இடையறாத முயற்சியினால் உரும்பிராயைச் சேர்ந்த கனடாவில் வசிக்கும் திரு.திருமதி விக்னேஸ்வரன் தம்பதியினர், ஆறுமுகம் தங்கரத்தினம் ஞாபகார்த்தமாக, செல்வி ரோகினி பேராயிரவர் ஊடாக தமது காணியை நன்கொடையாக வழங்க முன்வந்தனர். 'நிக்கொட்' நிறுவனத்தின் நிதியுதவியுடன் குறுகிய காலத்தில் இன்று அழகிய, வசதிகளுடன் கூடிய கட்டடம் ஒன்று எழுப்பப்பட்டுள்ளது. இதன் மூலம் மேலும் வினைத்திறன்கூடிய சேவையை வழங்க முடியும் என எதிர்பார்க்கிறோம்.

இவ்வேளையிலே எம்மோடு இப்பணியில் இணைந்திருந்த அனைத்து உள்ளங்களையும் நினைவுகூர்ந்து, எல்லாம் வல்ல இறைவனின் ஆசி என்றென்றும் எம்முடன் இருக்கவேண்டி விடைபெறுகின்றேன்.

Dr. (திருமதி) யாழினி யோகேஸ்வரன்,
பொறுப்பதிகாரி, ஆ.சு.ம.பி,உரும்பிராய்.

### கிராம அலுவலரின் வாழ்த்து



மானிட வாழ்க்கைக்கு அத்தியாவசிய காரணிகள் பலவுண்டு. அவற்றில் சுகாதாரம் மிக முக்கிய இடத்தை வகிக்கின்றது.

கூழானாலும் குளித்துக்குடி
கந்தையானாலும் கசக்கிக்கட்டு

என்பது பழமொழி. சுகாதரமின்றி மனிதன் வாழமுடியாதது யாவரும் அறிந்த உண்மை. இந்த நிலையில் உரும்பிராய் மத்திய மருந்தகம் இந்தப் பகுதியில் வாழும் பாட்டாளி மக்களுக்கு நெடுங்காலமாக இரவல் காணியில் இருந்து தனது மகத்தான சேவையை வழங்கி வந்துள்ளது.

தற்போது இப்பகுதி தனவந்தர்கள், கொடையாளிகளின் முயற்சியால் தனக்கென ஒரு சொந்த இடத்தைப் பிடித்து இன்று புதிய கட்டடத்தில் காலடி எடுத்து வைப்பது இப்பகுதி மக்களின் மனதில் புதுத்தெம்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையத்தின் வளர்ச்சிக்கும், செயற்பாட்டுக்கும் எனது நல்லாசிகளைக் கூறி வாழ்த்துகின்றேன்.

செ.செல்வச்சந்திரன்
கிராம அலுவலர் ஜே/265 உரும்பிராய் தெற்கு.

| | |
|---|---|
| காலம் | :- 20.04.2009 திங்கட்கிழமை |
| நேரம் | :- பி.ப.3.00 மணி |
| தலைவர் | :- Dr.திருமதி யாழினி யோகேஸ்வரன் |

**பிரதம விருந்தினர்**
**திரு.ரிச்சாட் வோக்ஸ் அவர்கள்**
இலங்கைகான ஆசிய அபிவிருத்தி வங்கிப் பணிப்பாளர்.

### எண்ணம் ஈடேறியது



உரும்பிராய் மத்திய மருந்தகம், உரும்பிராய் ஆரம்ப சுகாதாரப் பிரிவு என புதுப்பதிவுடன் புதிய மனைத் திறப்பு விழாவை கற்பக விநாயகர் பெருங்கருணையுடன் ஆசீர்வதிக்கிறேன். 14.06.2007 இல் ஆரம்பிக்கப்பெற்ற அபிவிருத்திச் சபையின் துரித முயற்சியால் திருமதி ஆறுமுகம் தங்கரத்தினம் அவர்கள் ஞாபகார்த்தமாக திருமதி பேராயிரவர் சாரதாதேவி அவர்களின் [கனடாவில் வசிப்பவர்] தாராள மனப்பான்மை யினால் ரோகினி பேராயிரவர் மூலம் 16.04.2008 இல் காணி சுகாதாரப் பணிப்பாளர் ஆறுமுகமீ கேதீஸ்வரன் அவர்களிடம் வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி Dr.யோ.யாழினி அவர்கள் தலைமையில் கையளிக்கப்பெற்றது.

கோப்பாய் பிரதேச செயலர், யாழ்.அரசாங்க அதிபர், சுகாதாரப் பணிப்பாளர் ஆகியோரின் ஆலோசனை சிபார்சின் பேரில் நிக்கொட் நிறுவன நிதி 8.3 மில்லியன் ஒதுக்கப்பெற்று 09.10.2008 விஜயதசமி அன்று பதில் சுகாதாரப் பணிப்பாளர் Dr. K.T.சிவபாதம் அவர்களால் அத்திவாரம் வைபவ ரீதியாக இடம்பெற்றது. நிஷா அனர்த்தம் காரணமாக வேலைகள் தடைப்பெற்று பின் ஆரம்பிக்கப்பெற்று முழுமையான வேலைக்கும் தொழில்நுட்ப கட்டட பொறியியலாளர்கள் அனைவரது கண்காணிப்பில் கட்டட ஒப்பந்தக்காரர் திரு.க.கிருஷ்ணமோகன் அவர்களது குழுவினரால் பளிங்கு மாமண்டபம்போல் நிர்மாணிக்கப்பெற்று 20.04.2009 திங்கட்கிழமை பி.ப 3 மணிக்கு வைபவ ரீதியாக திரு.ரிச்சாட் வோக்ஸ் அவர்கள் இலங்கைக்கான ஆசிய அபிவிருத்தி வங்கிப் பணிப்பாளர் மங்கள விளக்கேற்றித் திறந்து வைக்கவுள்ளமை இப்பகுதி மக்கள் அனைவருக்கும் ஓர் பொன்னான நாளாக கணிக் கப்பெறும். நம்முன்னவர் கடந்த 50 ஆண்டுகளுக்கு முன் எண்ணிய எண்ணம் நிறை வேறியுள்ளமை மட்டற்ற மகிழ்ச்சியாகும். புத்தாண்டு வாழ்த்துடன் உளம்கனிந்த நன்றிகள் அனைவருக்கும்.

நல்லையா கணேசலிங்கம் J.P,
செயலாளர், உரும்பிராய், மத்திய மருந்தகம்.

### ஒரு வரலாற்றுப் பதிவு



ஆரம்பமருத்துவப்பராமரிப்புபிரிவானது உரும்பிராயில் சொந்தக் காணியிலே அமைந்த புதிய கட்டடத்திலே இயங்க ஆரம்பிப்பதும் இந்த மலர் வெளியீடும் உண்மையிலேயே ஒரு மகிழ்ச்சிகரமான வரலாற்றுப் பதிவு ஆகும்.

பலரது ஒன்றுசேர்ந்த அயராத முயற்சி இந்தக் கனவை நனவாக்கியிருக்கிறது. குறிப்பாக இந்தக் காணியை நன்கொடையாக தந்துதவிய பேராயிரவர் குடும்பத்தினர், பொறுப்பு வைத்திய அதிகாரி Dr.திருமதி யாழினி யோகேஸ்வரன், நிர்வாகசபை உறுப்பினர்கள், பொதுமக்கள் ஆகியோரின் பங்கு போற்றுதற்குரியது.

இக்கட்டடத்திற்கு தேவையான பெருநிதியை வழங்கிய 'நிக்கொட்' நிறுவனத்திற்கும் இந்த நிதியைப் பெறுவதற்கு பெரிதும் உறுதுணையாக நின்று நல்ல ஆலோசனைகள் வழங்கிய பிராந்திய சுகாதாரப் பணிப்பாளருக்கும் இந்த ஊர்மக்கள் சார்பில் எனது நன்றியையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

Dr.சிவபாலன் சிவஸ்சுதன்,
பொதுவைத்திய நிபுணர்.

### கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரியின் வாழ்த்து



உரும்பிராய் மத்திய மருந்தகம் எனக்குத் தெரிந்த காலம் முதல் சொந்தக் கட்டடத்தில் இயங்கவில்லை. பல காரணங்களால் இந்தக் குறையை நிவர்த்தி செய்ய முடியாமலிருந்தது. இப்பொழுது அந்தக் குறை பதிவு வைத்திய அதிகாரி யாழினி யோகேஸ்வரன் குழுவினர் முயற்சியாலும் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரனின் அயராத ஒத்துழைப்பினாலும் 'நிக்கொட்' நிறுவனத்தினரின் அனுசரணையாலும் நீங்கிவிட்டது.

இது உரும்பிராய்ப் பகுதி மக்களுக்கு ஒரு நீண்டகால தேவையாக இருந்தது. சொந்தக் கட்டடம் இல்லாவிட்டாலும் சேவைகள் நன்றாக நடைபெற்றுக்கொண்டிருந்தன. தற்போது ஏற்பட்டுள்ள வசதியால் மேலும் இங்கு வழங்கப்படும் சேவைகள் முன்னேற்றமடையும் என்பது எனது நம்பிக்கை. அதற்கு எனது மனப்பூர்வமான ஆசிகள்.

வைத்தியகலாநிதி சு.தா.சிவபாதம்,
சுகாதார வைத்திய அதிகாரி, கோப்பாய்.

### பங்குத் தந்தையின் ஆசி



"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்பது முதுமொழியாகும். எப்பொழுதும் ஆரோக்கியமாகஇருப்பது மிகவும் மகிழ்ச்சியான விடயம் ஆகும். கடந்த 60 ஆண்டுகளாக உரும்பிராய் பகுதியில் சொந்தக்காணி இல்லாமலேயே அளப்பரிய சேவையாற்றி இன்று புதுப்பொலிவோடு நிமிர்ந்து நிற்கும் புதிய கட்டடத்தை பார்த்து மகிழ்ச்சியடைகிறோம். ஒவ்வொரு ஊர்களி லும், இப்படியான சேவைகள் ஏழை மக்களோடும், கைவிடப்பட்டவர்கள், வசதியற்றோர் போன்றவர்களுக்கு மிகவும் காத்திரமான பணியாற்றி வருகிறது. இதன் அடிப்படையில் உரும்பிராய் ஆரம்ப மருத்துவப் பிரிவு சிறந்தவகையில் சேவையாற்றி வருகிறது. மருத்து சேவை என்பது தெய்வீக சேவை என்று கூறினால் மிகையாகாது.

இந்தத் தெய்வீக பணியை வைத்திய கலாநிதி திருமதி யாழினி யோகேஸ்வரன் அவர்கள் பொறுப்பதிகாரியாக இருந்து ஆற்றிவரும் சேவை மிகவும் மகத்தானது. எமது பகுதி மக்களுக்கு பெரும் வரப்பிரசாதமானது இவருக்கும் எமது பாராட்டுகள். இந்தப் பாரிய வேலைத் திட்டத்தை செய்வதற்கு காணி வழங்கியவர்களை நாம் மறக்க முடியாது. கட்டடத்தை புதிதாக நிர்மாணித்து மருத்துவ சேவையை இன்னும் வளப்படுத்திய நிக்கொட் நிறுவனத்தினரையும் பாராட்டுகின்றோம்.

எமது ஆசீரும், அருளும் கிடைக்க மன்றாடுகிறோம்.

அருட்தந்தை அ.யூட் நிக்ஸன் பங்குத்தந்தை,
புனிதமிக்கேல் ஆலயம்,உரும்பிராய்.

### நிறுவுனரின் தரிசனம் பணிகளுக்கூடாக வளர்ச்சி அடையும்



அன்னை திரேசா கூறுவார்; எல்லா பாடசாலைகளினதும், வைத்தியசாலைகளினதும், தொண்டு நிறுவனங்களினதும், அத்திவாரங்களில் ஒரு தியாகியின் அர்ப்பணிப்பு மறைந்து கிடக்கிறது. அதை வரலாறு மறந்து விடக்கூடாது என்பார். இக்கூற்றைப் போல உரும்பிராய் ஆரம்ப மருத்துவ பராமரிப்புப் பிரிவை நிறுவுவதற்காக பல வழிகளில்பாடு பட்ட வைத்தியர் திருமதி யாழினி யோகேஸ்வரனுக்கும் அவரின் எண்ணக்கருவை நிறைவேற்ற காணியைக் கொடுத்த கொடை வள்ளல் செல்வி ரோகிணி பேராயிரவருக்கும், கட்டடித்தை அமைக்க உதவிய நிக்கொட் நிறுவனத்திற்கும், இக்கட்டடத்தை அமைக்க தங்கள் உடல் உழைப்பைக் கொடுத்த மேசன், ஓடாவி, தொழிலாளர்கள் அனைவருக்கும் இறை ஆசி கூறுவதோடு, எமக்கு உள்ள இரத்த அழுத்தம், நீரிழிவு, கொலஸ்ரோல், குடல்புண் (Gastric) போன்ற மன அழுத்தங்களால் வரும் நோய்களை ஆரம்பத்திலேயே கண்டறிந்து; ஆலோசனை (Counsel) வழங்கும், போரினால் வாழ்வாதாரங்களை இழந்து, இடம்பெயர்ந்து உலக நாடுகளாலும், உடன்பிறப்புக்களாலும் கைவிடப்பட்டு! நம்பிக்கையற்று! நோய்வாய்ப்பட்டுள்ள! அனைவருக்கும் நோய் தீர்க்கும் நம்பிக்கையைக் கொடுக்கும் இடமாக மலைமேல் உள்ள விளக்கைப் போல ஒளி கொடுக்க எல்லாம் வல்ல இயேசுவை பிரார்த்திக்கிறேன்.

அருட்பணி ஐசக் டானியல் டிக்சன்,
தூய இம்மானுவேல் ஆலயம், உரும்பிராய்.

### பிரதேச செயலாளரின் வாழ்த்து



ஒரு சமூகத்தின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு அச் சமூகத்திடையே காணப்படும் நல்ல சிந்தனைகளே காரணமாகும். அவ் வகையில் நல்ல சிந்தனையோடு நன்கொடையாக வழங்கப்பட்ட காணியில் இப்போது உரும்பிராய் மருந்தகம் அமைக்கப்பட்டது அப்பகுதிக்கு சிறப்பாகும்.

உரும்பிராயின் வளர்ச்சிக்கு உதவப்போகும் இந்த மருந்தகம் மூலம் நோயற்ற ஆரோக்கியமான ஒரு சமூகம் உருவாகக்கூடிய சாத்தியம் தெரிகிறது. தமது இருப்பிடத்துக்குப் பக்கத்தில் ஒரு மருந்தகம் இருக்கின்றது எனும் எண்ணமே மக்களின் வருத்தங்களைப் போக்கிவிடக் கூடிய ஒரு மருந்தாகக் காணப்படுகின்றது. அறுபது வருட காலமாக சிறந்த சேவையை வழங்கி வருகின்ற இந்த மருந்தகம் தற்போது சொந்தக் கட்டடத்தில் இயங்க ஆரம்பிக்கும் இத்தருணத்தில் இதற்கு முன்னின்று உழைத்த Dr.திருமதி யாழினி யோகேஸ்வரன் உட்பட அனைவரையும் பாராட்டுவதோடு அவர்களின் சேவை தொடர என் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிரதேச செயலாளர், சி.மோகன்ராஸ்,
வலி.கிழக்கு, கோப்பாய்.

### கிளை பரப்பட்டும்



உரும்பிராய் மக்களால் பல காலங்களாக எதிர்பார்க்கப்பெற்ற ஓர் தேவை பெரும் உள்ளம் கொண்ட திரு.திருமதி பேராயிரவர் சாரதாதேவி குடும்பத்தினரால் நன்கொடையாகக் கொடுத்த காணியில் ஓர் நிரந்தரக் கட்டடம் கட்டி நிறைவேற்றப்பட்டுள்ளது. எத்தனையோ தசாப்தங்களாக இதன் வளர்ச்சியை அவதானித்துக் கொண்டிருந்தேன். ஓர்காணியை எடுப்பதற்கு எத்தனித்தேன். அன்று அரிவராததுஇன்றுஉரும்பிராய்பலாலி வீதியின் கிழக்கே உதயமாகியுள்ளது. இவ்வாலமரம் கிளைவிட்டு புதிய உப மருத்துவ நிலையங்களை உருவாக்கி சேவை புரிய வேண்டும். நோயாளர்கட்கு மேலதிக சிகிச்சை தேவைப்படும் போது பாவனைக்காக ஓர் அம்புலன்ஸ் வாகனத்தையும் வழங்கி இம் மருத்துவ நிலையம் இந்நிலையப் பொறுப்பதிகாரியாலும் அபிவிருத்திச் சபையின் விடா முயற்சியாலும் யாழ்.நிர்வாக தலைமைத்துவ சுகாதாரப் பணிப்பாளினாலும்(R.D.H.S) மேலும் மேலும் நல்ல முன்னேற்றமடையவும் வாழ்த்துகின்றேன்.

வைத்திய கலாநிதி செ.இந்திரராசா.

### நவீன வசதிகளுடன் வளர்க



வலிகாமம் கிழக்கில் நீர்வளமும், நிலவளமும் ஒருங்கிணைய வளம் கொழிக்கும் சிறப்புமிக்க உரும்பிராய் நகரில் செல்வி ரோகினி பேராயிரவர் அவர்களால் அன்பளிப்புச் செய்யப்பெற்ற காணியில் உரும்பிராய் மத்திய மருந்தகம் திறக்கப்படுவதையிட்டுப் பெருமகிழ்வடைகின்றேன்.

இன்னல்கள் நிறைந்த இக்காலகட்டத்தில் உரும்பிராய் வாழ் மக்களுக்கு நிறைந்த சேவையை வழங்கும் நோக்குடன் 'நிக்கொட்' நிதி உதவியால் இக்கட்டடம் அமையப் பெற்றுள்ளது.

சமூகத்தின் ஆரோக்கியமான வாழ்விற்கு இம் மருந்தகம் நவீன வசதிகளுடன் மென்மேலும் வளர்ச்சியடைந்து மக்களுக்கு சேவையாற்ற வேண்டுமென்று மனமுவந்து வாழ்த்துகின்றேன்.

தம்பையா நடராசா,
செயலாளர், வலி.கிழக்கு பிரதேச சபை, புத்தூர்.


விழாச் சிறப்புற வாழ்த்துவோர்கள்:-

**அ.கமலசேகரம்**
உத்தரவுபெற்ற நில அளவையாளர், A.K.S.கொமினிகேசன்.

**கனடா ஒன்றியம்.**

**வலி.கிழக்கு தென் பகுதி ப.நோ.கூ.சங்கம்**
நீர்வேலி கூட்டுறவு நகர், உரும்பிராய்.

**மக்கள் வங்கி உரும்பிராய் நீடித்த கருமபீடம்**
முகாமையாளர், ஊழியர்.

**தீஞ்சுவை மிக்சர்**

★மதன் ஸ்ரோர்ஸ்.
★சதாகாட்வெயர்.
★ரூபன் களஞ்சியம்.
★கலா களஞ்சியம்.
★கீர்த்திகா ரெக்ஸ்.
★மோகன் ஸ்ரோர்ஸ்.
★கற்பக விநாயகர் ஸ்ரோர்ஸ்.
★பத்திரிகை முகவர்-பூ.மனோகரன்.
★அம்பிகை அமுதம் பல்பொருள் வாணிபம்.
★கணபதி வெதுப்பகம், கணபதி களஞ்சியம்.
★சிவமணி கணனி உதவு
★அம்பாள் இரும்பகம்.
★குகன் ஸ்ரோர்ஸ் ஊரெழு.
★மணியம் பல்பொருள் விற்பனை நிலையம்.
★சண் நகைத் தொழிலகம்.
★அருள் விநாயகர் கொமினிகேசன்.
★நாதன் வெல்டிங்.
★உதயன் பான்சி.
★குகன் சிற்றுண்டி அகம்.
★ராஜா வர்த்தக நிலையம்.
★ஐங்கரன் தொலைத் தொடர்பு சேவை & பிரயாணசேவை.
★பாலா இன்டஸ்ரீஸ்.
★தீஸ் வியாபார நிலையம்.
★பாலா மில்.
★கஜன் ஸ்ரோர்ஸ்.
★இராசமதி மியூசிக் சென்ரர்.
★வசந்தன் கூல்பார்.
★ராஜா பிக்சர் பலஸ்.
★சந்திரன் பந்தல் சேவை.
★ரகு போட்டோ.
★சாந்தன் போட்டோ.

**பிரசாத் நகையகம்**
177/A,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அ.தி.மு.க. கூட்டணியிலிருந்து வைகோ பிரியாமலிருப்பதன் பின்னணி



''முறிந்தது கூட்டணி... வைகோ வழி, தனி வழி!'' என்று ம.தி.மு.க. வட்டாரமே முடிவுக்கு வந்திருக்க... ஏப்ரல் எட்டாம் திகதி மாலை தொடங்கி, ஒன்பதாம் திகதி விடியலுக்குள் மளமளவென சில நிகழ்வுகளால் உரசல்கள் ஒட்டப்பட்டு... அ.தி.மு.க கூட்டணி காப்பாற்றப்பட்டது.

'இரண்டு தொகுதிகள் தருகிறோம்' என்று ஆரம்பித்த பேரம்தான் நான்கில் முடிந்திருக்கிறது.

உண்மையில் நான்கு தொகுதிகளை ஏற்றுக்கொள்ளும் நிலைக்கு ஏழாம் திகதி மாலையே வந்துவிட்டார் வைகோ. ஆனால், விருதுநகர், தஞ்சை, மத்திய சென்னை, நீலகிரி என்று ஜெயலலிதா கொடுப்பதாகச் சொன்ன தொகுதிகளில் விருதுநகர் போக மூன்றுமே வைகோவைக் கசப்படைய வைத்தன. அதுதான் பேச்சுவார்த்தையையும் இழுத்தது.

தா.பாண்டியன் உள்ளிட்ட தலைவர்கள் இதில் தலையிட்டு 'வைகோவை இழப்பது கூட்டணிக்கு நல்லதல்ல' என்று சொன்னதைத் தொடர்ந்தே மத்திய சென்னை வாபஸ் பெறப்பட்டு, வைகோ விரும்பிய ஈரோடு கொடுக்கப்பட்டது. அப்போதும் சமாதானம் அடையாத வைகோவை மாற்றியது, வன்னியில் இருந்துவந்த ஒரு தகவல்தான் என்று நம்பப்படுகிறது.

ஏப்ரல் எட்டாம் திகதி இரவு வைகோவுக்கு ஒரு புதிரான இரவாகத்தான் இருந்தது. சென்னை அண்ணாநகர் வீட்டில் இருந்த வைகோ, போனும் கையுமாகத்தான் இருந்தார். தொகுதிப் பங்கீடு முடிவாகாத நிலையில், மறுநாள் காலை பொதுக் குழுவைக் கூட்ட விருந்ததே காரணம். தேர்தலில் தனித்துப் போட்டி என்பதை அறிவித்து, அதற்கான வியூகங்களைக் கூட்டிக் கழித்துப் பார்க்கத் தொடங்கியிருந்தார் வைகோ. அவருடைய மனஓட்டம் தெரிந்து, டெல்லியிலிருந்து பி.ஜே.பி-யின் மூத்த தலைவர்கள் சிலரும் தொடர்புகொள்ள ஆரம்பித்தார்கள். பி.ஜே.பி., ம.தி.மு.க., சரத்குமார், கார்த்திக், புதிய தமிழகம் கிருஷ்ணசாமி என்று ஒரு புதுக் கூட்டணிக்கான திட்டம் அந்த இரவில் போடப்பட்டு, வைகோவிடம் தெரிவிக்கப்பட்டதாம்!

'பொதுக்குழுவுக்குப் பிறகு என் முடிவைச் சொல்கிறேன்' என்று பிடிகொடுக்காமலே பேசியிருக்கிறார் வைகோ. இதற்குள், 'இலங்கைக்கு எதிராக நடத்திய ஆர்ப்பாட்டத்தில் நீங்கள் பேசிவிட்டு வந்த பேச்சுகளுக்காக உங்கள் மீது தேசிய பாதுகாப்புச் சட்டம் பாய்ந்தாலும் பாயலாம்' என்று நண்பர்கள் சிலர் 'எச்சரிக்கை' செய்ய... தேர்தல் நடக்கும்போது தான் சிறையில் இருக்கவும் நேரலாம் என்று யோசித்த வைகோ... உடனடியாகச் சில முடிவுகளை எடுக்கவேண்டிய நிர்ப்பந்தத்தை உணர்ந்தாராம்.

*அதிகாலை வந்த ஓலை!*

அதைத் தொடர்ந்து, 'தேர்தல் நேரத்தில் இலங்கைப் பிரச்சினை ஒலிக்காத வண்ணம், வைகோவை கைது செய்துவிட திட்டம் தயாராகிறது, அதற்காகவே அவரது பேச்சு குறித்த சட்ட நுணுக்கங்களை அரசு வழக் கறிஞர்கள் ஆராய்ந்து வருகிறார்கள்!' என்ற ஒரு தகவலை கடல்கடந்து அனுப்பி வைத்தார்களாம் இலங்கைத் தமிழ்ப் போராட்ட ஆதரவாளர்கள் சிலர். அதன் விளைவாகத்தான் வன்னிக் காட்டுப் பகுதியிலிருந்து அவருக்கு ஒன்பதாம் திகதி அதிகாலையில் அந்த தகவல் வந்து சேர்ந்ததாம்.

''தன் கட்சியைக் கரைக்கப் பார்க்கும் தி.மு.க. மீது கடும் கோபத்தில் இருந்த வைகோ, தனக்குப் பிரியமானவர்கள் அனுப்பிய தகவலைக் கேட்டு பளிச்சென்று தெளிவாகி விட்டார். கேட்ட தொகுதிகள் அத்தனையும் கிடைக்காமல் போனாலும்... தன் கொள்கைக்கான அரசியல் தீர்வு கிடைத்தால் போதுமென்று முடிவெடுத்தார்! விடிந்தும் விடியாத பொழுதில், அ.தி.மு.க. தரப்புக்குப் போன் செய்து பேசினார். மளமளவென்று தொகுதி உடன்பாட்டுக் கடிதம் தயாராகி வந்தது. அவரும் கையெழுத்துப் போட்டு அனுப்பி விட்டு... தெளிவான மனதோடு பொதுக் குழுவுக்குக் கிளம்பிப் போனார்...'' என்கிறார்கள் வைகோவுக்கு நெருக்கமான சிலர்.

தான் கைதாகலாம் என்ற சிந்தனை அவருக்குள் சுழன்றுகொண்டே இருக்க... 'கொள்கைகளை நாடெங்கும் கொண்டு போக வசதியாக நமக்கென ஒரு டி.வி சேனல் தொடங்கப்படும்' என்று பொதுக் குழுவின் ஆரம்பத்திலேயே அறிவித்தார் வைகோ. அடுத்து தொகுதியின் பெயர்களைச் சொல்லுகையில், கடைசியாக விருதுநகர் பெயரை நிறுத்தி நிதானமாகக் கூற... அதுதான் வைகோ போட்டியிடும் தொகுதி என்று புரிந்து, பொதுக்குழு மண்டபத்தில் கைதட்டல் அடங்க வெகுநேரமானது.

தொகுதிப் பங்கீட்டுப் பூசலில் வைகோ வெளியே வந்துவிடுவார் என்ற நிலை மாறியதில், தி.மு.க. முகாமுக்கு சற்று அதிர்ச்சிதானாம். வைகோவின் மீதான இலக்கை மேலும் கூர்மைப்படுத்தியிருக்கிறதாம் அறிவாலயம்.

'தேசியக் கட்சிகளான பி.ஜே.பி. மற்றும் காங்கிரஸ் மேலிடங்கள் எப்போதுமே வைகோ மீது ஒருவிதப் பரிவுடன் இருப்பதுவழக்கம். எனவே, வைகோ போட்டியிடும் தொகுதியில் மட்டும் காங்கிரஸ்வேட்பாளரை நியமிப்பதில் தாமதம் காட்டும் முயற்சிகூட நடக்கலாம் என்று தி.மு.க-வுக்கு ஒரு சந்தேகம் இருந்தது. அந்த சந்தேகத்துக்குத் துளிகூட இடம் தராத வகையில், காங்கிரஸுக்கு ஒதுக்கியிருக்கும் விருதுநகரை தி.மு.க. திரும்ப வாங்கி, அங்கே தன்னுடைய வேட்பாளரை நிறுத்தக்கூடும். பதிலுக்கு ஆர்.எஸ்.பாரதிக்காக ஒதுக்கிய தென் சென்னை[illegible]ங்கிரஸுக்குக் கொடுக்கக் கூடும். [illegible]ரைக்கு அடுத்து, அழகிரியின் உச்சகட்ட அதிரடிப் பார்வை விருதுநகர் மீதுதான். ஆகவே விருதுநகர் ஒரு போர்க்களம்தான்' - என்று தகவல்கள் வரத் தொடங்கியிருக்கின்றன! ✱

*நன்றி: விகடன்*

# ராசி பலன்

**20-04-2009 முதல் 26-04-2009 வரை**

**பொ.சந்திரலிங்கம்**

**மேஷம்**



அச்சுவினி, பரணி, கார்த்திகை 1.

காரியத் தடை இருக்கும். பிரயாணவாய்ப்பு பாதிக்கலாம். பணம் இருக்கும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல்நலமுண்டு. பகைவிலகும். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. மன அமைதி இருக்கும்.

**இடபம்**



கார்த்திகை 2, 3, 4. ரோகிணி, மிருகசீரிடம் 1, 2

காரியசி[illegible]தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், [illegible]லவர் உதவுவர். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல்நலமுண்டு. பகை நட்பாகலாம். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்கும்.

**மிதுனம்**



மிருகசீரிடம் 3, 4. திருவாதிரை,புனர்பூசம் 1, 2, 3

காரியசித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல்நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு நாமதமாகலாம். புதிய முதலீடுகள் அமையலாம். அதிஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்கும்.

**கடகம்**



புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்

காரியசித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல் நலமுண்டு. பகை நட்பாகலாம். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் விசுவாசமாக இருப்பர். மன அமைதி இருக்காது.

**சிம்மம்**



மகம், பூரம், உத்தரம் 1

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணப் பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்பு தாமதமாகலாம். முதலீடு களால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. மன அமைதி இருக்காது.

**கன்னி**



உத்தரம் 2, 3, 4. அத்தம், சித்திரை 1, 2

காரியசித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் பகை கொள்ளக்கூடும். தாய்நலம். தந்தை நலமில்லை. நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்த்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்கும்.

**துலாம்**



சித்திரை 3, 4. சுவாதி, விசாகம் 1, 2, 3.

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு தாமதமாகலாம். பணம் இருக்கும். உறவினர், அயலவர் விலகி இருக்க விரும்புவர். தாய் நலம். தந்தை நலமில்லை. நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல்நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீகநாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. மன அமைதி இருக்காது.

**விருச்சிகம்**



விசாகம் 4, அனுசம், கேட்டை

காரியத்தடை இருக்கும். பிரயாணவாய்ப்பு பாதிக்கலாம். பணப்பற்றாக் குறை நிலவும். உறவினர், அயலவர் பகை கொள்ளக்கூடும். தாய் நலமில்லை. தந்தை நலம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் போதிய அக்கறை காட்டார். உடல்நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் அதிகரிக்கலாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீகநாட்டம் மேலோங்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்காது.

**தனுசு**



மூலம், பூராடம், உத்தராடம் 1.

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் விலகி இருக்க விரும்புவர். தாய் நலம். நல்ல வீடு, வாகனம் அமையும். மாணவர்கள் கல்வியில் போதிய ஆர்வம் காட்டார். உடல் நலமுண்டு. பகைவிலகும். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் விசுவாசமாக இருப்பர். மன அமைதி இருக்காது.

**மகரம்**



உத்தராடம் 2 ,3, 4. திருவோணம், அவிட்டம் 1, 2

காரியத் தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர்,·அயலவர் உதவுவர்; உதவியை எதிர்பார்ப்பர். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல்நலமுண்டு. பகை விலகும். திருமணவாய்ப்பு தாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீகநாட்டம் மேலோங்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்காது.

**கும்பம்**



அவிட்டம் 3, 4. சதயம், பூரட்டாதி 1, 2, 3

காரியத் தடை இருக்கும். பிரயாணவாய்ப்பு தாமதமாகலாம். பணப் பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் விலகி இருக்க விரும்புவர். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் போதிய அக்கறை காட்டார். உடல்நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. மன அமைதி இருக்காது.

**மீனம்**



பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நல மில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் போதிய அக்கறை காட்டார். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்காது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீங்காத நினைவுகளுடன் ஆண்டவர் அழைப்பின்
## முதலாம் வருட நினைவஞ்சலி



அமரர் பஸ்ரியாம்பிள்ளை
விறாசிப்பிள்ளை பிரான்சிஸ்

அன்னை மடியில்: 06.02.1923
ஆண்டவன் மடியில்: 20.04.2008

நித்திய வாழ்வின் நீண்ட இன்பத்தில் உன்னத கடவுளின் பேரன்பில் உறைந்திருக்கும் உம்மை நீங்காத நினைவுகளோடு இந்நாவில் நினைத்துக் கொள்கின்றோம்.

இவரது ஆன்ம இளைப்பாற்றிற்காகச் சங்கானை புனித பிரான்சிஸ் குசலேசியார் ஆலயத்தில் இன்று (20.04.2009) திங்கட்கிழமை காலை 6.30 மணிக்கு ஒப்புக் கொடுக்கப்படும் இரங்கல் திருப்பலியில் தாங்கள் கலந்து அமரரின் ஆன்ம இளைப்பாற்றிற்காகச் செபிக்கவும்.

அமரரின் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

ஓடைக்கரை வீதி,
சங்கானை. (84456)

## பதினோராம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
08 ★ 07 ★ 1947

மறைவு
21 ★ 04 ★ 1998

**அமரர் கதிரவேலு கந்தையா**
(இரத்தினம் மெக்கானிக்)

அன்பான வார்த்தைகளாலும் அயராத உழைப்பாலும்
அனைவரையும் அரவணைத்து அகிலத்தில்
ஏற்றமுற வைத்த அப்பாவே! பாசத்தின் இருப்பிடமாய்
பொறுமையின் பொக்கிஷமாய் எங்கள் இதயத்தில் என்றும்
அணையாத் தீபமாய் சுடர் வீசும் எங்கள் தெய்வமே!
ஆண்டுகள் பதினொன்று சென்றாலும் ஆறிடுமோ எம் துயரம்.

அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி. (84575)

குடும்பத்தினர்.


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

1080 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

05 24 35 37

மேடம்

17-04-2009

செல்லுபடியாகும் தொடர் இல. 500048001 - 500067216

ஜக்பொட் பரிசு ரூபா. 4,888,100/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 104,533 | 20/- | 2,090,660/- |
| 2 இலக்கங்கள் | 9,559 | 40/- | 382,360/- |
| 1 இல. + லக்கினம் | 9,545 | 60/- | 572,700/- |
| 2 இல. + லக்கினம் | 848 | 200/- | 169,600/- |
| 3 இலக்கங்கள் | 261 | 1000/- | 261,000/- |
| 3 இல. + லக்கினம் | 19 | 10,000/- | 190,000/- |
| 4 இலக்கங்கள் | - | 200,000/- | - |
| 4 இல. + லக்கினம் | 1 | 4,888,100/- | 4,888,100/- |
| மொத்தம் | | | 8,554,420/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 124,771 | | 9,054,420/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 2,000,000/-

2009 ஏப்ரல் 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நீல நிற டிக்கட்டுக்கள் சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| மாத்தளை | 500075241-6-48 |
| திருகோணமலை | 500081171-2-27 |
| நுவரெலியா | 500080194-3-06 |
| ஹம்பாந்தோட்டை | 500072238-7-19 |
| கேகாலை | 500077666-[illegible] |

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை



## தேவை

சிறந்த வகைப் பேனாக்களினதும், பிளாஸ்ரிக் பொருள்களினதும் விற்பனையைப் பெருக்குவதற்கு, யாழ்ப்பாணத்தில் விற்பனை ஊக்குவிப்பாளர்கள் தேவை.
கடின உழைப்பும், நேர்மையும், விற்பனையில் நற்பலனை நோக்காகக் கொண்டவர்கள் தேவை. முன் அனுபவம் அவசியம்.

Camel Plastic Ltd. 545, Sri Sangaraja Mawatha. Colombo 10.E- Mail penpal@eureka.lk


## துயர் பகிர்கின்றோம்

தென்மராட்சிப் பிரதேச செயலகப் பிரிவின் கொடிகாமம் மத்தி கிராம அலுவலராகக் கடமையாற்றும்
**க.சுபாஸ்சந்திரபோஸ்**
அவர்களின் பாசமிகு தாய்
**அமரர் கனகரத்தினம் வள்ளிப்பிள்ளை**
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தவரின் துயரில் நாமும் பங்குகொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அனைத்து நலன்புரிச்சங்க அங்கத்தவர்கள்.

**நலன்புரிச் சங்கம், பிரதேச செயலகம், தென்மராட்சி.** (சி/558127)

## தையல், மனையியல் கண்காட்சியில் உடுவில் மகளிர் அபிவிருத்தி நிலையம் முதலாமிடம்

நல்லூர், ஏப்.20

வடமாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் யாழ்.மாவட்ட மகளிர் அபிவிருத்தி நிலையங்களுக்கிடையில் தையல், மனையியல் பொருள்கள் கண்காட்சியில் இடம்பெற்ற போட்டிகளில் முதலாவது இடத்தை உடுவில் பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த மகளிர் அபிவிருத்தி நிலையம் பெற்றுக்கொண்டது.

இரண்டாமிடத்தை சாவகச்சேரி பிரதேச செயலக பிரிவு மகளிர் அபிவிருத்தி நிலையமும்-

மூன்றாவது இடத்தை கரவெட்டிப் பிரதேச செயலகப் பிரிவு மகளிர் அபிவிருத்தி நிலையமும் பெற்றுக் கொண்டன. (9-111)

## பெருந் திருவிழா ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப்.20

[illegible]ர்வைக் கந்த சுவாமிகோயில் வருடாந்த பெருந்திருவிழா இன்று திங்கட்கிழமை மு.ப. 10 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெறவுள்ளன.

அடுத்த மாதம் 7அம் திகதி தேர்த் திருவிழாவும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (9-224)

## முத்திரை விநியோகம்

நவாலி, ஏப்.20

வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் போசாக்கில்லாத 60 மாதங்களுக்கு உட்பட்ட பிள்ளைகளுக்கு சுகாதார வைத்திய அதிகாரியின் சிபார்சுடன் 200 ரூபா பெறுமதியான பால்மா முத்திரைகள் பிரதேச செயலரின் அனுமதியுடன் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் மூலம் வழங்கப்பட்டு வருகின்றன. (1-100)

## நலன்புரி நிலையங்களில் உள்ள ஆசிரியர்களுக்கு ஏப்ரல் மாதக் கொடுப்பனவுகள்

இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியிருக்கும் ஆசிரியர்களுக்கு ஏப்ரல் மாதத்திற்கான சம்பளக் கொடுப்பனவு நேற்று முன் தினம் வழங்கப்பட்டுள்ளது.

இத்தகவலை மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சாவகச்சேரி, கைதடி போன்ற நலன்புரி நிலையங்களில் தங்கியிருக்கும் இந்த ஆசிரியர்களுக்கான ஏப்ரல் மாதக் கொடுப்பனவினை மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.செல்வரத்தினம் நேரில் சென்று வழங்கியதாக அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (04-9-224)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**டாக்டர் மயில்வாகனம் சிற்றம்பலம்**

அன்னை மடியில்: 27.05.1928 ஆண்டவன் அடியில்: 01.05.2008
திதி: ஏகாதசி (20.04.2009)

ஆண்டொன்று சென்றாலும் அழியவில்லை
உங்கள் நினைவு நிஜமான உங்கள்
அன்புருவம் இப்படி நிழலாய் எம்
இதயத்தில் நிலைத்து விட்டது உங்கள்
ஆன்மா ஆண்டவனுடன் இருக்க
பிரார்த்திக்கும் உங்கள் அன்புள்ள

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

பெரிய அரசடி,
சாவகச்சேரி. (84571)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



**திருமதி மணிவாசகம் பர்வதாபத்தினி**

தோற்றம்: 26.05.1936 மறைவு: 22.03.2009

(21.04.2009)

கடந்த (22.03.2009) இறைபதம் அடைந்த எமது குடும்ப விளக்கின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (21.04.2009) செவ்வாய்க்கிழமை காலை 6 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளன. அத்தருணம் தாங்கள் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கெருடாவில் தெற்கு,
தொண்டைமானாறு. (842110)

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.போதனா வைத்தியசாலையில் தங்கியிருக்கும் அவசர நோயாளர்களுக்கு மட்டுமே 'எக்ஸ்றே' படப்பிடிப்பு

## போதிய பிலிம் வந்து சேராததால் இந்த நிலை

யாழ்ப்பாணம் ஏப்.20

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் எக்ஸ்றே பிலிம்களுக்கு தொடர்ந்தும் தட்டுப்பாடு நிலவுவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கொழும்பில் இருந்து குறைந்த அளவிலான எக்ஸ்றே பிலிம்களே அண்மையில் எடுத்துவரப்பட்டன.

வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் அவசர நோயாளர்களின் தேவைக்கு பயன்படுத்தவே அவை போதுமானவை என்று மேலும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் தினமும் எக்ஸ்றே படப்பிடிப்புக்கள் நடைபெற்று வருவதால், அவற்றிற்கு தொடர்ந்தும் தட்டுப்பாடு நிலவி வருவதாக அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (1- 224)

# நவாலிச் சந்தை மீண்டும் திறப்பு

நவாலி ஏப்-19

மானிப்பாய் பிரதேச சபையினால் நவீன முறையில் புனரமைப்புச் செய்யப்பட்ட நவாலி பிரசாத் சந்தை கடந்த வாரம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இதனால் நீண்ட காலம் பல இன்னல்களை அனுபவித்து வந்த மக்கள் இட நெருக்கடியின்றி இலகுவான முறையில் பொருள்கள் பெற்றுச் செல்வதைக் காணக் கூடியதாகவுள்ளது. (1-100)

# ஜி.சீ.ஈ. (சாதாரண) பரீட்சையில் மேலும் சில பாடசாலை முடிவுகள்

யாழ்ப்பாணம், ஏப்.20

கடந்த டிசெம்பர் மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ(சாதாரண) தரப் பரீட்சை முடிவுகளை மேலும் சில பாடசாலை அதிபர்கள் "உதயனுக்கு" அனுப்பிவைத்துள்ளனர்.

அந்த முடிவுகள் வருமாறு:

**சுதுமலை சிந்மயபாரதி வித்தியாலயம்**

துஸ்யந்தன் - புவனா 6ஏ 3பி, தவராசா-ஜதீபன் 3ஏ 3பி 2சி, அசோக்குமார் - குயிலினி 3ஏ 2பி 3சி,விக்னேஸ்வரன் -சாந்தா 3ஏ 2பி 3சி, மணிவண்ணன் - சௌமியா 3ஏ பி 5சி, மகேந்திரலிங்கம் - வக்சலா 3ஏ பி 3சி எஸ்,யோகநாதன் - கௌதமி 2ஏ 3பி 4சி.

**பிரான்பற்று கலைமகள் வித்தியாலயம்**

ம.பிரேந்திரா - 7ஏ,பி, யோ. கீர்த்திஜா-6ஏ,பி,சி,எஸ், ந. தர்ஷனா-4ஏ,பி, 3எஸ், இ. றேக்கா 4ஏ 2சி 2எஸ், க.மோகனாம்பிகை 3ஏ 3சி 2எஸ், நா.ஜெயந்தினி 2ஏ,2சி, 3எஸ், க. துஷி 2ஏ,4எஸ்.

**கோண்டாவில் இந்துமகா வித்தியாலயம்**

அ.கஜாபனா 4ஏ 2பி 2சி எஸ், க.நதீனா 2ஏ பி 4சி 2எஸ்,ஜெ. தர்சிகா 2ஏ பி 4சி, எஸ், த. தர்மினி 2ஏ பி 3சி 2எஸ், ப. பிரசாந்தி 3ஏ பி 4சி எஸ், அ.அனுசன் 2ஏ பி 2சி 3எஸ், பா. நிமல்ராஜ் ஏ 3பி 3சி எஸ், நிதர்சிகா ஏ பி 4சி எஸ்.

**அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாசாலை**

லோ.நிதர்சன் 3ஏ,3பி,சி,எஸ், கி.புட்கலா 2ஏ பி 5சி எஸ், ஜெ.கௌதமி 2ஏ,பி,3சி, உ. சிந்துஜா ஏ 3பி,3சி,எஸ், அ. பிரசோபிகா ஏ 3பி சி 2எஸ், ம.யுனிக்கா ஏ பி 4சி 2எஸ், இ.லோஜிநாத் ஏ பி 3சி 3எஸ், ர. சுஜித்தா ஏ 5சி 3எஸ், சி. சசிகலா ஏ 2சி 6எஸ், கா. சிவதர்சன் 3பி,3சி,எஸ். (50-9)

# பாடசாலையிலிருந்து இடைவிலகுவோர் எண்ணிக்கை அதிகரிப்பதாகத் தகவல்

## கடந்த வருடம் மட்டும் 458 பேர்

யாழ்ப்பாணம் , ஏப் - 20

யாழ் மாவட்டத்தில் கடந்த ஆண்டு 458 சிறுவர்கள் பாடசாலையில் இருந்து இடைவிலகியுள்ளதாக மாவட்ட சிறுவர் அபிவிருத்தி அலுவலகத்தால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குடும்பத்தில் வறுமைநிலை,பாடசாலையில் வகுப்பேற்றப்படாமை எனப் பல்வேறு காரணங்களால் சிறுவர்கள் பாடசாலையில் இருந்து இடைவிலகியுள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையின் பிரகாரம 14வயதுக்குட்பட்டவர்கள் 262 பேரும், 15-18 வயதுக்குட்பட்டோர் 196பேரும் பாடசாலையில் இருந்து விலகியுள்ளனர்.

பாடசாலையில் இருந்து இடைவிலகிய சிறுவர்களின் விவரம் பிரதேச செயலக ரீதியாக வருமாறு:

யாழ்ப்பாணம் - 49, நல்லூர் - 74,கோப்பாய்- 56, கரவெட்டி- 23. சண்டிலிப்பாய்-70, சங்கானை-30,சாவச்சேரி-13 , தெல்லிப்பழை-28,பருத்தித்துறை-44, உடுவில்-42,நெடுந்தீவு-04,காரைநகர்-20, ஊர்காவற்றுறை-03,மருதங்கேணி-02. (1 - 9)



யாழ், இலக்கிய வட்ட பரிசளிப்புக்கென ஒரு தொகை நிதியை யாழ்,ப.நோ.கூ சங்க தலைவர் ப. கிரிதரன் இலக்கிய வட்டத் தலைவர் செங்கை ஆழியான்,செயலர் எஸ்,சிவதாசன் ஆகியோரிடம் வழங்குவதைப் படத்தில் காணலாம். (படம்- நந்தன்)

# பொலிஸ் நிலையத்தில் குழப்பம் விளைவித்த தாய்க்கும் மகளுக்கும் விளக்கமறியல்

வலி.வடக்கு, ஏப்.20

பொலிஸாரைக் கடமை செய்யவிடாது பொலிஸ் நிலையத்தில் குழப்பம் விளைவித்து சத்தம் போட்ட தாயையும் மகளையும் விளக்க மறியலில் வைக்கும்படி மல்லாகம் மாவட்ட நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டார்.

சுன்னாகம் பொலிஸ் நிலையத்திற்கு பிணக்கு ஒன்று சம்பந்தமாக விசாரணைக்கு அழைக்கப்பட்ட இவர்கள் பொலிஸ் நிலையத்திலும் அவர்களைக் கடமை செய்யவிடாது சத்தமிட்டு, குழப்பத்தை ஏற்படுத்தி பொலிஸாரின் கடமைக்கு பங்கம் ஏற்படுத்தியதாக அவர்கள் மல்லாகம் நீதிமன்றில் சுன்னாகம் பொலிஸாரினால் ஆஜர் செய்யப்பட்டுள்ளார்கள்.

கட்டுவன் பகுதியைச் சேர்ந்த அவர்களை விளக்க மறியலில் வைக்கும்படி பணிக்கப்பட்டுள்ளது (1- 86)

# பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப்.20

சண்டிலிப்பாய் பிரிவில் பொதுச் சேவை ஓய்வூதியர்களின் நம்பிக்கை நிதியத்தின் மூன்றாவது ஆண்டு பொதுக் கூட்டம் எதிர்வரும் 24 ஆம் திகதி இடம் பெறவுள்ளது.

இதற்கான நடவடிக்கையினை சங்கத்தின் செயலாளர் வை.செகராஜசிங்கம் மேற்கொண்டுள்ளார்.

பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் திருமதி ரூபினி வரதலிங்கம்சிறப்பு விருந்தினராக கணக்காளர் ரி.தயாளினியும் கலந்து கொள்ளவுள்ளனர்.

## குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

# உள்ளூராட்சி சபைகளில் பதில் செயலாளர் பதவிக்கான நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டோர் விவரம்

யாழ்ப்பாணம்- ஏப்-20

வடக்கு மாகாணத்தில் உள்ளூராட்சி சபைகளில் வெற்றிடமாகவுள்ள செயலாளர் பதவிகளுக்கு பதில் செயலாளர்கள் நியமனம் செய்யப்படவுள்ளனர்.

வடக்கு மாகாண பிரதம செயலாளர் சி. ரங்கராஜன் இதற்கான அனுமதியை வட மாகாண ஆளுநரிடமிருந்து பெற்றுள்ளார்.

இதனையடுத்து வடக்கு மாகாணத்தில் உள்ள உள்ளூராட்சி உதவியாளர்கள் (LGA) 14பேருக்கும், முகாமைத்துவ உதவியாளர் ( வகுப்பு I) 15 பேருக்கும்,ஆக மொத்தம் 29 பேருக்கு எழுத்து பரீட்சையும், நேர்முகப்பரீட்சையும் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 28,29ஆம் திகதிகளில் திருமலையில் எழுத்துப் பரீட்சைக்கும் நேர்முகப் பரீட்சைக்கும் தோற்றவுள்ள உள்ளூராட்சி உதவியாளர்கள், முகாமைத்துவ உதவியாளர்கள் (வகுப்பு-I) ஆகியோருக்கான அனுமதிக் கடிதங்கள் மாகாண உள்ளூராட்சி நிவாரண மற்றும் புனர்வாழ்வு கூட்டுறவு அமைச்சு செயலாளர் தி.இராசநாயகத்தினால் சம்பந்தப்பட்டவர்களுக்கு திணைக்கள தலைவர் ஊடாக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.


நேர்முகப் பரீட்சையின் போது வரலாற்றுத்தாளின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி, சேவைச்சான்றிதழ், கல்வி தகைமைச் சான்றிதழ்கள்,பிறப்புச் சான்றிதழ்கள், நற்சான்றிதழ்களுடன் சமூகமளிக்குமாறு உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் திரு. இராசநாயகம் கேட்டுள்ளார். உள்ளூராட்சி சபைகளில் பதில் செயலாளர் நியமனத்திற்கு எழுத்துப் பரீட்சைக்கும்,நேர்முகப் பரீட்சைக்கும் அழைக்கப்பட்டோர் விவரம் வருமாறு:-

உள்ளூராட்சி உதவியாளர்கள் (LGA) :-

கு. தவசோதி ( நல்லூர் பிரதேச சபை), திருமதி. ஜெ.சோமராஜ் ( மானிப்பாய் பிரதேச சபை), இ.கிருஸ்ணகுமார் ( மானிப்பாய் பிரதேசசபை), செ.ரமேஷ்- (வேலணை பிரதேசசபை), திருமதி.தா. மதியழகன் -( பருத்தித்துறை பிரதேச சபை),திருமதி. க.யசோதரன் (சுன்னாகம் பிரதேச சபை), திருமதி. ஆ.ஜனனி (சுன்னாகம் பிரதேச சபை),இ.அறிவரசன் ( மல்லாகம் பிரதேச சபை),செ.அல்போன்ஸ் (உள்ளூராட்சி அமைச்சு), க.கனகதுரை ( வடமராட்சி தெ/மே பிரதேச சபை), அ.கமலேஸ்வரசர்மா (யாழ் உ.உதவி ஆ அலுவலகம்),திருமதி.வ. மகாலிங்கம் (சாவச்சேரி பிரதேச சபை), செல்வி. சு.நீலதி ( யாழ் - மாநகரசபை), செல்வி. இ.அமிர்தராணி- (வல்வெட்டி துறை நகரசபை)

**முகாமைத்துவ உதவியாளர்கள் (வகுப்பு-1)**

ஞா.தேவச்சந்திரன் ( மானிப்பாய் பிரதேசசபை),கெ. தவராசா ( சுன்னாகம் பிரதேசசபை),திருமதி சி.தர்மராஜசிங்கம்-(சுன்னாகம் பிரதேசசபை),திருமதி. யோ. காசிலிங்கம் (மல்லாகம் பிரதேச சபை), திருமதி.சி.ஆன்வினோதினி (மன்னார் பிரதேசசபை) திருமதி றொ.குரூஸ் (மன்னார் பிரதேச சபை),ந. செவ்வேள் (வடமராட்சி தெ/ மே பிரதேச சபை),திருமதி. வி. சந்திர யோகன் (வடமராட்சி தெ/ மே பிரதேச சபை),செ. திருஞானசம்பந்தர் (பருத்தித்துறை நகரசபை),திருமதி. ரு. சத்தியாணந்தன் (பருத்தித்துறை நகர சபை), சி. குலசிங்கன் ( சாவச்சேரி நகரசபை), சி. ஆனந்தகுமாரன் ( நல்லூர் பிரதேச சபை), பா. சிவபாலராசா ( வவுனியா நகரசபை), சு. சுந்தரேசன் ( ஊர்காவற்றுறை பிரதேச சபை), திருமதி.சி.யோகராஜ் ( யாழ் மாநகரசபை)



வடமாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தால் மாவட்ட மட்டத்தில் நடத்தப்பட்ட மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் கண்காட்சி 2008 யாழ். இந்துக்கல்லூரியில் நடைபெற்ற போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

யாழ். பிராந்திய ஆணையாளர் திருமதி. ப. சிவலிங்கம் மங்கள விளக்கேற்றுவதையும், யாழ் மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி கண்காட்சியைத் திறந்து வைப்பதையும் முதலிரு படங்களிலும் நெடுந்தீவு மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் சிறுவர்களைப் பாதுகாக்கும் நோக்கம் என்ற பொருளில் வடிவமைக்கப்பட்ட கப்பலையும். காட்சியில் இடம்பெற்ற சிப்பிகளினான கலைப்பொருள்களையும் ஏனைய படங்களில் காணலாம். (படங்கள்:- லக்ஸ்மன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேசத்தின் கவனத்தை ஈர்ப்பதற்காக உயிரைத் தியாகம் செய்யவும் தயார்

## உண்ணாவிரதமிருக்கும் பரமஸ்வரன் உருக்கம்

கொழும்பு, ஏப்.20

தமிழர் தாயகத்தில் அவலப்படும் தமிழ்மக்களுக்கு ஒரு விடிவு கிட்டும்வரை தனது சாகும்வரையான உண்ணாநிலைப் போராட்டத்தை கைவிடப் போவ தில்லை என தெரிவித்துள்ள சுப்பிரமணியம் பரமேஸ்வரன், அனைத்துலக சமூகத் தின் கவனத்தை தனது உயிரை மாய்த்தே ஈர்க்கும் நிலை வந்தால் அதற் கும் தயாராக இருப்பதாக கூறியுள்ளார்.

பிரித்தானியாவில் 11 ஆவது நாளாக சீரற்ற காலநிலைக்கு மத்தியிலும் வீதியின் ஓரத்தில் உண்ணாநிலைப் போராட்டத்தில் இருக்கும் அவர், தனது போராட்டம் குறித்து நேர்காணலில் மேலும் தெரிவிக்கையில்:

எமது மக்களுக்கு ஏதாவது என்னால் முடிந்தவற்றை செய்ய வேண்டுமென நீண்ட நாள்களாக நான் எண்ணியிருந்தேன்.

அதற்கான சந்தர்ப்பம் சாகும்வரையான உண்ணாநிலைப் போராட்டமாக எனக்கு கிடைத்திருக்கிறது.

கடந்த சில நாள்களுக்கு முன்னர் எனது தாயார் மற்றும் சகோதரர்கள் சிறிலங்கா அரசின் தாக்குதலில் உயிரிழந்திருப்பதாக எனக்கு தகவல் கிடைத்தது. மனம் நம்ப மறுத்தாலும் எனது மூளை அதனை நம்ப வைக்கின்றது.

ஏனெனில் அங்கு நடக்கும் நிகழ்வுகள் அப்படிப்பட்டவையே.

சிறிலங்கா அரசாங்கத்திடம் நான் எது வித கோரிக்கையையும் முன்வைக்கவில்லை. அனைத்துலக சமூகத்திடம்தான் நான் எனது கோரிக்கைகளை முன்வைத்திருக்கிறேன்.

இலங்கையில் இன்று நடைபெறும் போரை அனைத்துலக நாடுகள்தான் ஊக்குவித்துக் கொண்டிருக்கின்றன.

சிறிலங்காவால் இந்த போரை நடத்த முடியாது. அவர்கள் தாங்களே இந்தப் போரை நடத்துவதாக தம்பட்டம் அடித்துக் கொள்கிறார்கள். வன்னியில் இடம் பெறும் போரில் நிகழும் வெற்றி தங்களுடையதல்ல என்பது உண்மையில் அங்குள்ள ஒவ்வொரு சிங்கள இராணு வத்தைச் சேர்ந்தவர்களுக்கும் நன்கு தெரியும்.

எனவே நான் இங்கு மேற்கொள்ளும் இந்த போராட்டமானது அனைத்துலக நாடு களுக்கான போராட்டமே.

ஆப்கானிஸ்தானில் நடந்ததையும் ஈராக்கில் நடந்ததையும் நாங்கள் பார்க்க வேண்டும்.

ஈராக்கில் அந்நாட்டு அரச தலைவர் சதாம் உசைனை இராசாயன ஆயுதங்கள் வைத்திருக்கிறார் என்று கூறியே அனைத்துலக சமூகம் அங்கு படை யெடுத்தது. அங்கு நடந்தது என்ன?.

ஆனால் இன்று சிறிலங்கா அரசாங்கம் மேற்கொள்ளும் இத்தகையதொரு ஆயுத பயன்பாட்டுடன் கூடிய இனப்படுகொலைக்கு




எதிராக அனைத்துலக சமூகம் என்ன செய்து கொண்டிருக் கின்றது?.

வன்னியில் இன்று இரண்டு மாதத்திற்குள் 3 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர். 10 ஆயிரத்திற்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர். இன்னும் மக்கள் கொலை செய்யப்பட வேண்டும் என்ற அனைத் துலக சமூகம் எதிர்பார்க்கின்றது?

எனது போராட்டத்தையும் இன்று கொச்சைப்படுத்துகின்றனர். நான் புலிகளால் அனுப்பிவைக்கப்பட்டு உண்ணாநிலைப் போராட்டம் இருக்கும் ஒருவர் என்று கூறுகிறார்கள்.

கடந்த 11 ஆம் நாள் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் சுமார் 2 இலட்சம் தமிழ்மக்கள் இங்கே வந்தனர். அப்படியானால் அவர்கள் அனைவரும் புலிகளால் அனுப்பப்பட்டவர்களா?.

விடுதலைப் புலிகளின் தலைமையைக் காப்பாற்றுவதற்காகவே இத்தகைய உண்ணாநிலைப் போராட்டங்கள் நடத்தப்படுவதாக சிறிலங்கா அரசாங் கம் கூறுகிறது.

விடுதலைப் புலிகளைக் காப்பாற்றத்தான் உண்ணாநிலைப் போராட்டம் இருக்கின்றோம் என்ற தகவலில் உண்மை

இல்லை. விடுதலைப் புலிகளுக்கு தங்களைக் தற்காத்துக்கொள்ளத் தெரியும். தமிழ்மக்களை காப்பாற்ற வேண்டும் என்றுதான் நாங்கள் இங்கே உண்ணாநிலைப் போராட்டம் நடத்துகிறோம்.

விடுதலைப் புலிகள் மக்களைத் தடுத்து வைத்திருப்பதாக சிறிலங்கா அரசாங்கம் கூறுகின்றது. வன்னியில் சில நூறு புலிகளே இருப்பதாகவும் அவர்களில் 90 சதவீதமானோர் காடுகளுக்குள் சென்று விட்டதாகவும் கூறும் சிறிலங்கா இராணுவத்தினர், அங்குள்ள மக்களை விடுதலைப் புலிகளே தடுத்து வைத் திருப்பதாக கூறுகின்றனர்.

லட்சக்கணக்கான மக்களை அரசாங்கம் கூறுவதுபோல சில போராளிகளால் தடுத்து வைத்திருக்க முடியுமா?. இதனை எப்படி நம்ப முடியும்?.

அதாவது, இது அனைத்துலக சமூகத்தை ஏமாற்றுவதற்கு சிறிலங்கா அரசாங்கம் போடும் நாடகமாகும். இந்த நாடகத்தை எதற்காக அனைத்துலக சமூகம் நம்பிக்கொண்டிருக்கிறது என்பது தான் இன்றுள்ள முக்கியமான கேள்வியாகும்.

அதேநேரம், சிங்கள மக்கள் மீது சிறிய குண்டு வீசினால் கூட அத்னை அனைத்துலக சமூகத்திற்கு அவர்களால் இலகுவாக எடுத்துச் செல்ல முடி கிறது. ஆனால் தமிழ் மக்களது நிலை அப் படிப்பட்டதல்ல. எங்களுக்கு அத்தகைய வசதி வாய்ப்புக்கள் இல்லை. எங்களுடைய கருத்தை அனைத்துலகம் கேட்கவும இல்லை.

எனவே போராட்டத்தின் மூலம்தான் அனைத்துலகத்தின் கவனத்தை எங்களால் ஈர்க்க முடிகிறது. எங்களது உயிரை மாய்த்தே அனைத்துலகத்தின் கவனத்தை ஈர்க்க வேண்டுமாயின் அதனையும் நாங்கள் செய்வோம்.

நாங்கள் சாகும் வரையிலான உண்ணாநிலைப் போராட்டத்தை மேற்கொண்டிருக்கின்ற போதும் இங்குள்ள அரசியல்வாதிகள் இன்னமும் முற்று முழுதாக எங்களுடைய இந்த விடயத்தில் கவனம் செலுத்தவில்லை என்பது

மேலும் வேதனையளிக்கிறது. இதுவரை பிரித்தானியாவின் 5 நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்னை இங்கே வந்து

சந்தித்து சென்றுள்ளனர். தமது ஆதரவை தருவதாக அவர்கள் வாக்குறுதி தந்துள்ளனர்.

என்னுடன் இணைந்து சாகும்வரை போராட்டத்தை தொடங்கிய மாணவனுக்கு சில உறுதிமொழிகளை அவர்கள் வழங்கியதன் அடிப்படையிலேயே நாங்கள் நீரை அருந்தியவாறு போராட் டத்தை தொடர்வதற்கு சமமதித்தோம்.

எனினும் எமது இலக்கை அடை யும் வரை போராட்டத்தை நான் தொடர் வேன். எனது வாழ்க்கை இங்கே முடிந்தாலும் இந்த போராட்டம் தொடரப்பட வேண்டும். தமிழ் மக்களுக்கு ஒரு விடிவு வரும் வரைக்கும் இந்தப் போராட்டம் தொடர வேண்டும்.

வன்னி மக்களுக்கு ஒரு செய்தியை நான் கூற விரும்புகிறேன். ஆகக் கூடுதலான துன்பத்தையே தற்போது நீங்கள்

தற்போது அனுபவித்து வருகிறீர்கள். இதற்கு மேல் எந்தவொரு துன்பமும் வரப் போவது கிடையாது. உங்களுக்கு எந்த துன்பமும் இனிமேல் வரக்கூடாது என்பதற்காகவே நாங்கள் இங்கே சாகும் வரை போராட்டம் நடத்துகிறோம் - என்றார் அவர்.

இவரது இந்த உண்ணாநிலைப் போராட்டத்திலும் அங்கு தமிழ்மக்களால் நடத்தப்படும் ஆர்ப்பாட்டத்திலும் நாளாந்தம் இரவு-பகல் பாராது ஆயிரக்கணக்கான மக்கள் குவிந்த வண்ணம் உள்ளனர்.

சிறிலங்கா அரசாங்கத்திற்கு எதிராக தமது கண்டன முழக்கங்களை எழுப்பிய வாறு நிற்கும் அந்த மக்கள் ,

உண்ணாநிலையில் இருந்து உடல் தளர்வுற்றுள்ள பரமேஸ்வரனை கண்ணீர் மல்க இருகரம் கூப்பி வணங்கி வருகின்றனர்.

இவரை பார்வையிடுவதற்காக வெளிநாட்டவர்களும் வருகை தருவது குறிப்பிடத்தக்கதாகும்.

# மக்கள் பாதுகாப்பு வலயம் என்பது கொலைக்களமாவே மாறியுள்ளது

## நாடாளுமன்ற உறுப்பினர் சிறில் குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப்.20

சிறிலங்கா அரசாங்கம் பிரகடனப்படுத்திய பாதுகாப்பு வலயம் தமிழர்களை பலியெடுக்கும் கொலைக்களமாக மாறிவிட்டது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சொலமன் சூ.சிறில் குற்றம் சாட்டியுள்ளார்.

சிறிலங்கா படையினரின் மூர்க்கத்தனமான போர் நடவடிக்கைகளினால் தமிழர்கள் பெரும் இன்னல்களையும் வேதனைகளையும் அனுபவித்து வருகின்றனர் என்றும் கூறியுள்ளார்.

வன்னிப் பெரு நிலப்பரப்பின் தற்போதைய நிலைமைகள் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட போதே சொலமன் சூ.சிறில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

பாதுகாப்பு வலயத்தில் கடந்த முதலாம் திகதி தொடக்கம் கடந்த வியாழக்கிழமை வரையான 16 நாள்களில் 926 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

மஹிந்த அரசு அறிவித்த பாதுகாப்பு வலயத்தில் 3 லட்சத்துக்கும் அதிக மக்கள் வாழ்கின்றனர். ஆனால் அங்கு 70 ஆயிரம் மக்கள் தான் இருக்கின்றனர் என்று படைத்தரப்பை மேற்கோள்காட்டி அரசாங்கம் கூறுகின்றது.

அப்படியானால் ஏனைய மக்கள் எங்கே? சிறிலங்கா அரச படைகள் அவர்களை கொலை செய்துவிட்டதா?

தற்போது 50 ஆயிரம் பேரை படையினரின் பகுதிக்குள் வரவைப்பதற்கு சிறிலங்கா படைத்தரப்பு முயற்சி எடுத்து வருகின்றது.

இந்த 50 ஆயிரம் பேரையும் என்ன. செய்யப்போகின்றீர்கள். அப்படியானால் ஏனைய மக்களை என்ன செய்யப்போ கிறீர்கள்?



ஏனைய மக்களை அதாவது 2 லட்சத்து 50 ஆயிரம் மக்களையும் படுகொலை செய்யப் போகின்றீர்களா? அதனைத்தான் ஏற்கனவே செய்து வருகின்ற னர். இனிமேலும் அதைத் தான் இன்னும் அதிகமாக செய்யப்போகின்றார்களா?.

இதனை உலகம் பார்த்துக்கொண்டிருக்கப்போகின்றதா?.

லட்சக்கணக்கில் மக்கள் படுகொலை செய்யப்படப்போவதை அதற்கான படை நடவடிக்கைகளை சிறிலங்கா மேற்கொள்ளப்போவதை உலகம் ஐ.நா. என்பன பார்த்துக்கொண்டிருக்கப் போகின்றதா?

தமிழினத்தை அழிக்க சிறிலங்காவுக்கு ஜோன் ஹோம்ஸ் போன்ற ஐ.நா. அதிகாரிகள் ஒத்துழைப்புக் கொடுக்கின்றார்களா?.

படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் மக்கள் வரவேண்டும் என்று மீண்டும், மீண்டும் ஜோன் ஹோம்ஸ் சொல்கின்றார். அப்படியானால் சிறிலங்கா அரசின் தமிழின அழிப்புக்கு ஜோன் ஹோம்ஸ் ஒத்துழைப்பு வழங்குகின்ருரா?.

இக்கேள்விகள் தமிழ் மக்களிடம் எழுகின்றன.

61 ஆண்டு காலமாக தமிழர்கள் ஏன் அவலங்களைச் சுமந்து லட்சத்துக்கு அதிகமான உயிர்களை பலி கொடுத்து போராடிக்கொண்டிருக்கின்றனர் என்பதை உலகம் கேட்காதா?

அப்படி ஒரு கேள்வியை உலகம் சிறிலங்காவை பார்த்து கேட்கின்றபோதுதான் தமிழர்களின் அரசியல் பிரச்சினைகளுக்கு தீர்வை காணமுடியும் என்றும் சிறில் சுட்டிக்காட்டியுள்ளார்.

# நம்பியார் வன்னிக்கு வந்திருந்தால் உண்மைநிலை தெரிந்திருக்கும்

## புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் நடேசன்

கொழும்பு, ஏப்.20

பொதுமக்களின் இழப்புகளை தடுக்கும் ஒரே அமைப்பான ஐக்கிய நாடுகள் சபை, வன்னியில் உள்ள மக்களை காப்பாற்ற முடியாதுவிட்டால் யாரால் அவர்களை காப்பாற்ற முடியும் என தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறை பொறுப்பாளர் நடேசன் கேள்வி எழுப்பினார்.

வன்னியில் உள்ள மக்களின் நிலைமையை தெரிந்து கொள்வற்காக இலங்கைக்கு வந்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதி நம்பியாரின் வன்னிக்கான வருகையை இலங்கை அரசாங்கம் தடுக்கக்கூடாது என தமிழீழ விடுதலைப் புலிகள் கோரியுள்ளனர்.

நம்பியார் வன்னிக்கு வந்தால் உண்மை நிலை தெரியவந்து விடும் என்பதற்காகவே இலங்கை அரசாங்கம் அவரின் வன்னி வருகையை தடுத்துள்ளதாக நடேசன் குற்றம் சுமத்தியுள்ளார்.


ஐக்கிய நாடுகள் சபையின் யுத்த நிறுத்தக் கோரிக்கையை இலங்கை அரசாங்கம் நிராகரித்துள்ள நிலையிலேயே தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறை பொறுப்பாளர் இந்த கோரிக்கையை விடுத்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமண வாழ்க்கையை அச்சுறுத்தும் உணர்வுகள்







**கேள்வி:** வயது 40. எனக்கு இரத்த அழுத்த நோய் இருக்கின்றது. ஆனால், சர்க்கரைவியாதியோ - இருதய வியாதியோ இல்லை. கடந்த சில வாரங்களாக எனது பார்வையில் கோளாறு ஏற்பட்டுள்ளது. உருவங்கள் தெளிவில்லை. சிலசமயம் உருவங்கள் இரட்டையாகத் தெரிகின்றன. படிகளில் இறங்கும் போது - படியின் பரிமாணம் தெரியாமல் தடுமாறுகின்றேன். படி அருகில் இருப்பது போல் தெரிகின்றது. அடிவைத்தால் இன்னும் பதிவாக படி இருக்கின்றது. இதனால் படிகளில் இறங்கப் பயமாக இருக்கின்றது. இரத்த அழுத்தத்தால் தலைவலியும் ஏற்படுகின்றது. பொது வைத்தியர், கண் வைத்தியர் என்போர் என்னை பரிசோதித்து - எதுவித பிரச்சினையும் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். என்றாலும் இடது கண் பார்வையில் இடப்புறத்தில் பொருள்கள் இரட்டையாகத்தான் தெரிகின்றன, கண்தசைகள் பலவீனமடைந்து விட்டன என்று கூறி டாக்டர் -Neurobion - என்ற விட்டமின் மாத்திரைகள் தந்துள்ளார். எனக்கு பரிகாரம் கூறவும்.

**பதில்:** உங்கள் இரத்த அழுத்தம் எவ்வளவு என்று நீங்கள் குறிப்பிடவில்லை. உங்கள் டாக்டர் பிரச்சினை எதுவுமில்லை என்று கூறியபடியால் உங்கள் இரத்த அழுத்தம் கட்டுப்பாட்டில் இருப்பதாக வைத்துக்கொண்டு உங்கள் நோய் பற்றிய என்து கருத்துக்களை தருகின்றேன். இரத்த அழுத்த நோயுள்ளவர்கள் - அவர்களது இரத்த அழுத்தம் கட்டுப்பாட்டினுள் இருந்தாலும், கொலஸ்திரோல் அளவை கவனத்தில் வைத்திருக்க வேண்டும். கொலஸ்திரோல் அளவு அதிகமாக இருந்தால் அதற்குரிய சிகிச்சை முறைகள் கைக்கொள்ளப்பட வேண்டும். அதுபோல் இரத்த அழுத்தம் உள்ளவர்கள் - இரத்தத்தின் உறைந்து போதல் தன்மையைக் குறைக்க தினமும் அஸ்பிரின் வகை மாத்திரைகளை உபயோகிப்பது அவசியம். இரத்தம் உறைவதால் - உறைந்த இரத்தக்கட்டிகள் இரத்த சுற்றோட்டத்தில் சென்று- மூளை, கண், சிறுநீரகம் போன்ற இடங்களில் - அடைப்பை - (Thrombus) ஏற்படுத்தும் என்பதை கவனத்திற்கொள்ளவேண்டும். சாதாரணமாக இரத்த அழுத்தத்திற்கு சிகிச்சை அளிக்கும் மருத்துவர்கள் அனைவரும் - நான் மேற்குறிப்பிட்ட முக்கியமான விஷயங்களில் கவனம் எடுப்பார்கள். உங்கள் நிலைமையிலும் - கொழுப்பின் அளவைக் குறைக்கும் மருந்து சிகிச்சை தரப்பட்டிருக்காவிடிலும் - அஸ்பிரின் வகை மருந்து கட்டாயம் தரப்பட்டிருக்கும் என்று நான் ஊகிக்கின்றேன். இந்த அஸ்பிரின் வகை மருந்துகள் - கண்களின் தசைகளை பலவீனப்படுத்தும் குணத்தைக் கொண்டதால் - பார்வையில் இரட்டை உருவங்கள் தெரிவதற்கு வாய்ப்பிருக்கிறது; எனினும், உங்கள் வைத்தியரின் ஆலோசனையுடன் - வேறு வகை அஸ்பிரின் மருந்துகளை உபயோகிப்பது நல்லது. விட்டமின் மாத்திரைகள் உங்கள் பிரச்சினைக்கு தீர்வு தராது.

* * *

**கேள்வி:** பெண். வயது 28. கடந்த ஒரு வருடமாக பயத்துடன் வாழ்கின்றேன். இரண்டு வருடத்திற்கு முன்னர் ஒரு திருமணமான ஆணுடன் தொடர்பு ஏற்பட்டது. அவர் என்னை துரத்தி துரத்திக் காதலித்தார். ஆரம்பத்தில் - ஒதுங்கி நின்ற நான் - நாளடைவில்



அவரைக் காதலிக்க ஆரம்பித்தேன். என்றாலும் இந்தக் காதல் தொடர்பு நிலைக்கும் என்பதில் எனக்கு சந்தேகம் இருந்தது. ஒரு தடவை எமது தொடர்பு, அளவு மீறிப் போகப் பார்த்தபோது - நான் நிலைமையை உணர்ந்து சுதாகரித்துக்கொண்டேன். அதிலிருந்து அவர்மேல் ஒருவித வெறுப்பு ஏற்பட்டது. எனது தொடர்பை முறித்துக்கொண்டேன். கிட்டத்தட்ட 6 மாதகாலத்துக்குள் இவ்வளவும் நடந்துமுடிந்தன. ஆனால், அவர் இதற்கு பின்னர் சும்மா இருக்கவில்லை. எங்கள் இருவருக்கும் பொதுவான நண்பர்களிடமிருந்து என்னைப்பற்றியும், நான் என்ன செய்கின்றேன் என்பது பற்றியும் தகவல்களை அறிந்துகொள்ள முயன்றார். இந்த விஷயம் எனக்குத் தெரிந்ததும் இந்த நண்பர்களிடம் இருந்து நான் ஒதுங்கி விட்டேன். எட்டு மாதங்கள் கழித்து அமெரிக்காவில் உள்ள ஒருவருடன் எனது திருமணம் நடந்தேறியது. தேனிலவு காலத்தின்போது - ஒருதடவை எனது கணவர் - திருமணத்திற்கு முன்னர் எனக்கு Boy Friend இருந்ததா. இருந்திருந்தால் பரவாயில்லை என்று சொன்னார். திருமணத்திற்கு முன்னர் இப்படி எதுவித தொடர்பும் இருந்ததில்லை என்று முற்றாக மறுதலித்தேன். பழையவற்றை கூறி புதுப்பிரச்சினைகள் உருவாகுமா என்று பயந்து புதுவாழ்க்கை தொடங்குவதற்காகப் பொய் சொன்னேன். எனது பழைய காதலர் - எங்கள் தொடர்பை வைத்து திருமணத்துக்கு முன்னர் என்னை Black Mail பண்ணலாம் என்று எண்ணினேன். எப்படியோ எனது திருமண விஷயத்தை அறிந்து எனக்கு Email மூலம் வாழ்த்துக்கள் கூறியிருந்தார். அந்த Email இல் நான் அமெரிக்காவில் வாழவிருக்கும் இடம் குறிப்பிடப்பட்டிருந்தது எனக்கு திகைப்பையும் பயத்தையும் தந்தது. எனக்கு தெரியாமலே, நான் அறியாமலே எனது ஒவ்வொரு அசைவையும் இந்தப் பாவி கவனித்துக் கொண்டிருக்கிறான் என்பது எனக்கு அதிர்ச்சியாக இருக்கிறது. நான் திருமணம் ஆகியிருக்கிறேன் என்பது தெரிந்தும் எனக்கு புதுவருட வாழ்த்துக்கள், பிறந்த நாள் வாழ்த்துக்களை இணையம் மூலம் அனுப்பிக் கொண்டிருக்கிறான் இந்த அரக்கன். நான் இந்த வாழ்த்துகளைத் திறந்து படிப்பது இல்லை. நான் நல்ல ஒரு கணவனோடு வாழ்ந்து கொண்டிருக்கும்போது - எனது கணவர் எனது பழைய காதலனை அறிந்து விடுவாரோ, இந்தப் பாவி எனது கணவருக்கு முன்பு நடந்தவற்றை எல்லாம் சொல்லி விடுவாரோ என்ற பயத்தில் தற்போது அமெரிக்காவில் வாழ்கின்றேன். எனது கணவருக்கு இனிமேல் உண்மையை என்னால் கூற முடியாது. பயத்தினால் எனது வாழ்க்கை பாழாகிறது. பசி, உறக்கம், சிரிப்பு, சந்தோஷம் [illegible] உயிரற்ற [illegible] போல வாழ்கின்றேன். எனது பயத்தைப் போக்க வழிகூறவும்.

**பதில்:** ஒருவருக்கு தெரியாமல் ஒருவரது நடவடிக்கைகளை எந்த வகையிலும் கவனிப்பது ஒரு கிரிமினல் குற்றம். இதனை Stalking என்று கூறுவார்கள். உங்கள் இறந்த கால வாழ்க்கை இரகசியங்கள் பரகசியம் ஆகிவிடுமோ என்ற பயம் உங்களுக்கு. இதனால் பழைய நட்பு முறையில் உங்கள் பழைய காதலர் - இந்த

இலவச மருத்துவ ஆலோசனை பெறுங்கள்
நீங்களும் கேள்விகளை அனுப்பி மருத்துவ ஆலோசனைகளைப் பெறலாம்.
நீண்ட கால அனுபவம் உள்ள பிரபல டாக்டரும் கிறுகதை எழுத்தாளருமான
டாக்டர் எஸ்.அருள்ராமலிங்கம்
பதில் தருகிறார்.
இலவச மருத்துவ ஆலோசனை
உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

வேளையில் மனம் திருந்தி 'எங்கிருந்தாலும் வாழ்க' என்ற நல்லெண்ணத்தில் உங்களை சிநேகிப்பது உங்களுக்கு சந்தேகத்தை வளர்த்து - பய உணர்வை உருவாக்கியுள்ளது. நீங்கள் தந்த விவரங்களின்படி இதுவரை - உங்கள் பழைய உறவைக் காட்டி எதுவித அனுகூலங்களையும் பெற உங்கள் பழைய காதலர் முயலவில்லை என்பது தெட்டத் தெளிவாக விளங்குகிறது. என்றாலும் உங்கள் உள் மனதின் குற்ற உணர்வுகள் - இப்படி நடந்து விடுமோ என்ற பயத்தை உருவாக்கின்றன. உண்மையில் உங்கள் பழைய காதலர் இன்று தனது தவறை உணர்ந்து திருந்தி - உங்களுக்கு தனது நெஞ்சில் ஓர் ஆலயம் எழுப்பி இருக்கலாம். மற்றவர்கள் எங்களை கண்காணிக்கின்றார்கள் என்கின்ற Stalking பயம் - ஒரு நோயின் ஆரம்பமாகக் கூட இருக்கலாம். சில வேளைகளில் இந்த பய உணர்வு, உங்கள் மன இறுக்கத்தின் தற்காலிக பிரதிபலிப்பாக இருந்து பின்னர் இல்லாது போகும். உங்களின் நம்பிக்கையுள்ள சிநேகிதி - சிநேகிதன் அல்லது உங்களை நன்கு புரிந்து கொண்ட உங்கள் குடும்ப உறவினர் என்போரின் உதவியைப் பெறுங்கள். இது மிகவும் அவசியம். முடியுமானால் உங்கள் கணவரோடு இது பற்றி கலந்து பேசுங்கள். கணவரோடு பேசும் இந்த விஷயம் உங்கள் சூழ்நிலையைப் பொறுத்து - நீங்களாகவே எடுக்க வேண்டிய தனி மனித முடிவு என்பது ஞாபகம் இருக்கட்டும்.

எப்படி என்றாலும், மிகவும் இக்கட்டான நேரத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் உங்களது மனம், உணர்ச்சிகள் (Moods) தொடர்ந்தும் இறங்கிப் (Low) போய்க்கொண்டிருந்தால், எந்த நேரமும் - இந்த பய உணர்வு உங்களை வேறெதிலும் சிந்தனை செலுத்த முடியாதபடி வாட்டிக்கொண்டிருந்தால், எந்த செயலிலும், எந்த வேலையிலும் உங்களால் சந்தோஷமாக இருக்க முடியாதிருந்தால் - மற்றவர்கள் உங்களைப் பற்றித்தான் பேசுகின்றார்கள் உங்கள் அசைவுகளை கண்காணிக்கின்றார்கள், உங்களை துன்பப்படுத்தத் திட்டம் தீட்டுகின்றார்கள் என்ற நிலைகள் - சிந்தனைகள், எண்ணங்கள் உங்களுக்கு அடிக்கடி ஏற்பட்டால் நிச்சயம் நீங்கள் விரைவில் - (Mental Health Specialist) மனோ நல சிகிச்சை நிபுணர் ஒருவரின் ஆலோசனையைப் பெற வேண்டும். இம்மாதிரியான நிபுணர்கள் நீங்கள் வசிக்கும் அமெரிக்காவில் நிறைய உள்ளனர். இந்தத் துறையில் அவர்கள் எமது நாட்டு நிபுணர்களைப் போலல்லாது, பல வருட அனுபவம் கொண்டவர்கள். நீங்கள் சொல்லும் உண்மைகளை பரமரகசியமாக (Confidential) வைத்திருந்து சிகிச்சையளிப்பார்கள்.

நீங்கள் கூறிய பய உணர்வு Deprssion என்கின்ற மனத்தாழ்வு நிலை மற்றும் Psychotic Illness என்கின்ற மனப்பிறழ்வு நிலைகளின் நோய் அறிகுறிகளாக இருக்கலாம். மருந்து மற்றும் மனோவியல் சிகிச்சை அல்லது இந்த இரண்டும் கலந்த சிகிச்சை மூலம் நிச்சயம் பலன் பெறலாம்.

* * *

**கேள்வி:** ஆண். வயது 30. எனக்கு அடிக்கடி வயிறு பெருகி, ஊதுகிறது (Bloating). மலம் கழிக்கும் போது சளியாக போகிறது. ஏப்பம், வாயுத் தொல்லை இருக்கின்றது. மலம் இறுக்கமாக இல்லாது குழைவாக போகிறது. பரிகாரம் கூறவும்.

**பதில்:** உங்களுக்கு சமிபாடு சம்பந்தமான கோளாறு ஏதாவது ஏற்பட்டிருக்கும். Duodenal Ulcer என்கின்ற வயிற்றுப் புண், சமிபாடு உறுப்புகளில் அழற்சி அல்லது Irritable Bowel Syndrome என்கின்ற கோளாறு, அமீபியஸீஸ் (Amoebiasis) கோளாறு என்பவை மேற்படி குணங்குறிகளை தரக்கூடியவை. நீங்கள் Gastroenterologist என்கின்ற விசேட மருத்துவ நிபுணரின் ஆலோசனையைப் பெறுவது அவசியமாகின்றது. அவர் மலப் பரிசோதனை, இரத்த பரிசோதனை, Colonoscopy என்கின்ற விசேட பரிசோதனை என்பவற்றை செய்து இதற்கான காரணங்களை கண்டறிவார். உங்கள் வயது இளம் வயதாக இருப்பதனால் - புற்றுநோய் போன்ற கோளாறுகள் உங்களுக்கு ஏற்பட வாய்ப்புகள் குறைவு. Anxiety என்கின்ற மனச்சோர்வு, பதற்றம், பதைபதைப்பு என்பவை இந்த வயதில் கல்வி, தொழில், குடும்பம் போன்ற சூழ்நிலைகளால் ஏற்பட்டு இம்மாதிரி குணம் குறிகளை தரலாம். உங்கள் உணவு பழக்கங்களும் இதற்கு காரணமாக இருக்கலாம். எனினும், நான் மேற்குறிப்பிட்ட விசேட மருத்துவ ஆலோசனை அவசியம் என்பதை மறக்காதீர்கள்.

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும், இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட

### அமரர் கணபதிப்பிள்ளை சண்முகலிங்கம்

கடந்த (22.03.2009) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த அமரர் கணபதிப்பிள்ளை சண்முகலிங்கம் அவர்களின் அந்தியேட்டிக் கிரிகை இன்று (20.04.2009) திங்கட்கிழமை காலை 8 மணிக்கு வில்லூன்றிப் புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை (21.04.2009) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு எமது இல்லத்திலும் நடைபெறும். இந்நிகழ்வுகளிலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மு.மகேந்திரன் (அதிபர்),
139, இராசாவின் தோட்டம்,
யாழ்ப்பாணம். (84585)

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 05 . 06 . 1949



உதிர்வு 01 . 05 . 2008

### திருமதி திலகவதி கனகசபாபதி

(உசன்)

திதி: ஏகாதசி

ஓராண்டு உருண்டதம்மா எம்மை விட்டு ஒதுங்கி இன்று
பாராண்ட மன்னவர்க்கும் பரிதவிப்பு என்று உண்டு
நீராண்ட எங் குடும்பம் நிர்க்கதியாய் போனதம்மா!
ஏராளம் வார்த்தை உண்டு எவரிடம் நாம் சொல்வதவம்மா.
உங்கள் அரவணைப்பே எங்கள் உயிர் நாடி

42, 5/3, ருத்திரா மாவத்தை,
வெள்ளவத்தை,
கொழும்பு-06.

"காவேரி",
உசன், மிருசுவில்.

குடும்பத்தினர். (84466)

## நீங்காத நினைவுகள்

பிறப்பு 20 . 04 . 1928



இறப்பு 18 . 11 . 2008

### அமரர் கந்தையா இராசா

எங்கள் குடும்பத்தின் திருவிளக்காய் இருந்த நீங்கள்
எங்களை விட்டுப் பிரிய எப்படி மனம் வந்தது. சித்திரை 20
என்றவுடன் அப்பாவின் பிறந்த நாள் தான் ஞாபகத்தில்
வரும். எல்லோருடைய தொலைபேசியும் வரும் என்று
ஏங்கியிருப்பீரே
இன்று நாம் யாருடன் பேசுவது நீங்கள் எம்முடன் தான்
இருக்கிறீர்கள் என்று நாங்கள் நினைத்துக்
கொண்டிருக்கிறோம். உங்கள் ஆத்ம சாந்திக்காக
பிரார்த்திக்கின்றோம்.

89A, மத்துமகேலத்த
வீடமைப்புத்திட்டம்
நுகேகொட.

மனைவி, பிள்ளைகள்
50,டிஸ்பென்சறி லேன்,
சுன்னாகம்.

### சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ளவும்

சர்வதேச மனித உரிமைகள்தினத்தை முன்னிட்டு யாழ் மனித உரிமை ஆணைக்குழுவின் அலுவலகத்தால் 2005, 2007,2008 ஆம் ஆண்டுகளில் நடத்தப்பட்ட சுவரொட்டி, கட்டுரை, பேச்சு ஆகிய போட்டிகளில் பங்குபற்றி வெற்றி பெற்று இதுவரை சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ளாத மாணவர்கள் மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் அலுவலக நாள்களில் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுகப் பட்டுள்ளது.

(9- 25)

## திக்கம் பல்நோக்கு மண்டபத்தில் பல திணைக்களங்களின் அலுவலகங்கள்

வடமராட்சி, ஏப்.20

அல்வாய், திக்கம் பகுதியில் நிக்கொட் நிறுவனத்தால் அமைக்கப்பட்ட பல்நோக்கு மண்டபத்தில் பல அலுவலகங்கள் செயற்பட இடமளிக்கப்பட்டுள்ளது.

திக்கம் மத்திய சனசமூக நிலையத்தினால் நிர்வகிக்கப்பட்டுவரும் இப்பல் நோக்கு மண்டபத்தில் கிராம மக்களின் வசதி கருதி, இவர்களுக்குத் தேவையான அலுவலகங்கள் அமைக்க அனுமதிக்கப்பட்டுள்ளதாக நிலையத்தின் செயலாளர் தெரிவித்தார்.

தற்போது திக்கம் உபதபால் நிலையம், கிராம சேவையாளர் அலுவலகம், சமுர்த்தி வங்கிச் சங்கம் ஆகிய அலுவலகங்கள் அம் மண்டபத்தில் இயங்கி வருகின்றன.

அத்துடன் வடமராட்சி வடக்கு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் ஆரம்பிக்கவுள்ள பாற்சாலை ஒன்றும் இம்மண்டபத்திலேயே செயல்பட வைக்க அனுமதிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(1-236)

## தென்மராட்சியில் விபத்துக்களில் ஐவர் காயம்

யாழ்ப்பாணம், ஏப்.20

தென்மராட்சியில் மோட்டார் சைக்கிள் விபத்துகளில் சிக்கி ஐந்து பேர் காயமடைந்தனர்.

பெருங்குளம் பகுதியில் இரு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதிக்கொண்டதில் இதே இடத்தைச் சேர்ந்த கிறிஸ்தோப்பர் ஜோன்சன் (வயது 32) என்பவரும், வரணி படை முகாம் காவலரண் தூண் மீது மோட்டார் சைக்கிள் மோதியதில் இதே இடத்தைச் சேர்ந்த ச.பாலசுந்தரம் (வயது 58) என்பவரும், கச்சாய் பகுதி வீதி வளைவில் மோட்டார் சைக்கிள் சில்லு சறுக்கியதில் தூக்கி வீசப்பட்டு அதே இடத்தைச் சேர்ந்த எஸ். ஞானசக்தி (வயது 30) என்னும் பெண்ணும் மட்டுவில் பகுதியில் வீதி வளைவில் மோட்டார் சைக்கிள் சில்லு சறுக்கியபோது தூக்கி வீசப்பட்ட பெண் மீது எதிரே வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் இதே இடத்தைச் சேர்ந்த எஸ்.பகீரதி (வயது 22) என்பவரும் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(1-207)

## பற்சுகாதார நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், ஏப்.20

ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு மக்களின் பற்சுகாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் போரூட் நிறுவன அனுசரணையுடன் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் ஏற்பாட்டில் பற்சிகிச்சைக்கான சேவைகள் கிடைக்கப் பெறாத பகுதியில் பற்சிகிச்சைக்கான நடமாடும் வைத்திய சேவை நடைபெற்று வருகிறது.

இந்த நடமாடும் வைத்திய சேவை மார்ச் 16ஆம் திகதி வேலணையிலும், மார்ச் 23ஆம் திகதி புங்குடுதீவிலும், மார்ச் 30ஆம் திகதி நயினாதீவிலும், ஏப்ரல் 6ஆம் திகதி நெடுந்தீவிலும் நடைபெற்றது.

இவ் நடமாடும் வைத்திய சேவை எதிர்வரும் 26ஆம் திகதி அனலைதீவிலும், 27 ஆம் திகதி எழுவைதீவிலும் நடைபெறவுள்ளது.

இந்த நடமாடும் வைத்திய சேவையில் சிறார்கள், பாடசாலை மாணவர்கள், வயது வந்தோர் என ஒவ்வொரு பகுதியிலும் சுமார் 300 பேர் பயனடைந்தனர் என்று பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ)



## நீர்வேலி கந்தசுவாமி கோயில் மகோற்சவகால விஷேட உற்சவங்கள்

20.04.2009 திங்கள் முற்பகல் 11 மணிக்கு கொடியேற்ற உற்சவம்
07.05.2009 வியாழன் காலை 6 மணிக்கு வசந்தமண்டபப் பூஜை
காலை 8.30 மணிக்குத் தேர் வீதி உலா
08.05.2009 வெள்ளி முற்பகல் 10 மணிக்கு தீர்த்த உற்சவம்

"துய்யமறை போற்றும் திருநீர்வை நகர் மேவும் செய்ய முருகன் திருவடிகள் போற்றுதுமே"

**விழா சிறப்புற வாழ்த்துவோர்**

**திருமுருகன்**
**திருமண மண்டபமும்**
**பல்பொருள் அங்காடியும்**
(அபிஷேக பொருள்கள்,
வீடியோ, போட்டோ உட்பட)
கரந்தன் வீதி, நீர்வேலி, 060 221 7320
(கந்தசுவாமி கோயில் வடக்கு வீதி).

(84589)

**சாம்பவி**
**பதிப்பகம்**
(சகலவிதமான அச்சுப்
பதிவாளர்கள்)
276, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம் 021 222 4143,
நீர்வேலி 0776184425.

## முகங்காணமுடியாது போன முதலாம் ஆண்டில்

ஆக்கம் 12 . 04 . 1951



அழிப்பு 20 . 04 . 2008

### அமரர் அருட்பணி ம.சே.கருணாரெத்தினம் (கிளி)

குருகுலமே!
குலக்கொழுந்தே!
குருதியில் நனைந்த வெண்புறாவே!
பாசத்தின் இருப்பிடமே!
பலி கொள்ளப்பட்ட செம்மறியே!
பரிதவிக்கின்றோம், எனினும்
பரமனடியில் துயில் கொள்வாய்.

அருட்பணி ம.பெ.ஞானரெத்தினம் (சகோதரன்).

(84587)

## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 18 . 08 . 1933



மறைவு 11 . 05 . 1999

### சதாசிவம் சண்முகம்

திதி: அமரபக்க ஏகாதசி (20.04.2009)

பத்தாண்டுகள் பறந்தோடிப் போனாலும்
பாசமிகு தந்தையின் நினைவுகள்
பசுமையாய் உள்ளது எம்
நினைவுகளில்...
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

"குமரபதி"
மீசாலை மேற்கு, மீசாலை. (84561)

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### மத்தேசுப்பிள்ளை இம்மனுவல் யோசவ் (துரை)

மாதகலைப் பிறப்பிடமாகவும் சிலாபத்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட M.E.யோசவ் (18.04.2009) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மத்தேசுப்பிள்ளை- இசபேற்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற மேரிறோஸின் அன்புக் கணவரும் பாலதாஸ், லூயிஸ் ஆகியோரின் சகோதரனும் J.கெலன் றோஸ் (ஆசிரியை, யா/ மாதகல் சென். தோமஸ்- நிரந்தரம், யா/சென். ஜேம்ஸ் மகாவித்தியாலயம்- தற்காலிகம்), யோ.எ.பங்கிராஸ் (அதிபர், யா/ நவாலி சென்.பீற்றர்ஸ் றோ.க.பாடசாலை) யோ.கிளெனி (தபாலகம்- அரிப்பு), யோ.திபேரி ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற ஜெகசுநாதன் மற்றும் யூலியற், மேவிற்றா, றொக்சி ஆகியோரின் அன்பு மாமனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்க ஆராதனைக்காக இன்று (20.04.2009) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பிரதான வீதி, மாதகல் இல்லத்திலிருந்து மாதகல் புனித தோமையார் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, இரங்கல் திருப்பலியுடன் மாதகல் புனித தோமையார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றக்கொள்ளவும்.

இல.22, சென்.ஜேம்ஸ் ம.ம.வீதி,
குருநகர். (84592)

தகவல்:
யோ.எ.பங்கிராஸ் (மகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தேர்தலில் அ.தி.மு.க. கூட்டணி வெற்றிபெற்றால்

# ஈழத்தமிழரின் மறுவாழ்வுக்கு ரூ. 10 ஆயிரம் கோடி நிதியுதவி

### தேர்தல் பிரசாரத்தில் ஜெயலலிதா தெரிவிப்பு

சென்னை, ஏப். 20

மத்தியில் அ.தி.மு.க. உதவியுடன் அமையும் ஆட்சியில், இலங்கைத் தமிழர்களின் மறு புனரமைப்புக்கு ரூ. 10 ஆயிரம் கோடியில் பெரும் திட்டம் செயற்படுத்தப்படும் - என்று அ.தி. மு.க. பொதுச் செயலர் ஜெயலலிதா கூறியுள்ளார்.

மேலும், இலங்கையில் போரை நிறுத்தாவிட்டால் தூதரக உறவைத் துண்டித்துக் கொள்ள வேண்டும் என்று பிரதமருக்கு முதல்வர் கருணாநிதி தந்தி அனுப்பியுள்ளார் எனக் கூறுவது ஏமாற்று வேலை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

திருநெல்வேலி நகரம் வாகையடி முனையில் சனிக்கிழமை நடைபெற்ற பிரசாரப் பொதுக்கூட்டத்தில் நெல்லை தொகுதி அ.தி.மு.க. வேட்பாளர் கே.அண்ணாமலையை ஆதரித்துப் பேசியபோதே அவர் இவற்றைத் தெரிவித்தார். மேலும் அவர் தெரிவித்தவை வருமாறு -

தமிழ்நாட்டில் நடைபெற்று வரும் குடும்ப ஆட்சியால் மக்கள் பல்வேறு துயரங்களைச் சந்தித்து வருகின்றனர். 2004 தேர்தலில் வெற்றி பெற்று மத்தியில் காங்கிரஸ் அமைத்த கூட்டணி ஆட்சியில் தி.மு.கவும் இடம் பெற்றது. கடந்த 5 ஆண்டுகளில் எந்த நல்ல காரியத்தையும் அவர்கள் செய்யவில்லை. பொருளாதாரச் சீரழிவு, நிதி நெருக்கடி, விலைவாசி உயர்வு, நதிநீர்ப் பங்கீட்டுப் பிரச்சினை, விவசாயிகள் தற்கொலை என்பவைதான் மக்களுக்கு அவர்கள் அளித்த பரிசுகள்.

தமிழ்நாட்டில் மணல் கொள்ளை, அரிசி கடத்தல் என தி.மு.கவினர் செய்த சட்ட விரோதச் செயல்கள் ஏராளம். இவற்றுக்கெல்லாம் முடிவு கட்டும் வகையில் தேர்தலில் நீங்கள் அவர்களுக்குப் பாடம் புகட்ட வேண்டும்.

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் கருணாநிதி ஈழத் தமிழர்களுக்குத் துரோகம் செய்து பெரிய நாடகம் நடத்தி வருகிறார். 2006இல் முதல்வராக அவர் பொறுப்பேற்ற பின் அவர்களுக்காக என்ன செய்தார்? இலங்கையில் உள்ள அப்பாவித் தமிழர்களை அழிக்க அந்நாட்டு அரசுக்கு இந்திய அரசு ஆயுதங்களை அளித்து வருகிறது என வெளியான செய்தியைத் தொடர்ந்து நான் முறைப்பாடு கூறிய பின்னர் கருணாநிதி கண்துடைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

மத்திய அரசை நிர்ப்பந்தம் செய்வது போல் பாசாங்கு செய்கிறார். இலங்கையில் போரை நிறுத்தாவிட்டால் இந்தியா தனது தூதரக உறவைத் துண்டித்துக் கொள்ள வேண்டும் என வலியுறுத்தி (பிரதமருக்கு) தந்தி கொடுத்துள்ளார் எனக் கூறுவதும் ஏமாற்றுவேலைதான்.

இதற்கெல்லாம் மக்கள் ஏமாற மாட்டார்கள். தமிழ், தமிழர், தமிழ்ப் பண்பாடு எனக் கூறி ஆட்சியில் அமர்ந்து கொண்டு தமிழ் இனத் துக்குத் துரோகம் செய்யும் கருணாநிதியைத் தூக்கி எறிய அ.தி.மு.க. கூட்டணிக்கு வாக்களியுங்கள். சேது சமுத்திரத் திட்டம் மீனவர்களுக்குப் பாதகமானது என்பதால்தான் அதை எதிர்க்கிறோம்.

ஈழத் தமிழர்களுக்கு அ.தி.மு.க. என்றுமே ஆதரவுதான் அளிக்கிறது. ஆனால் இலங்கையில் நடக்கும் தீவிரவாதத்துக்கு எதிரான நிலையை நாங்கள் கொண்டுள்ளோம். பிரபாகரனை நாங்கள் ஆதரிக்கவில்லை, எதிர்க்கிறோம். இலங்கைத் தமிழர் மறுவாழ்வுக்கு ரூபா 10 ஆயிரம் கோடி நிதியளிக்க அதி.மு.கவுக்கு வாக்களியுங்கள் - என்றார்.

## இலங்கைத் தமிழர் மூவரிடம் 'கியூ' பொலிஸார் விசாரணை

சென்னை, ஏப். 20

இலங்கைத் தமிழர்கள் 3 பேரிடம் கியூ பிரிவுப் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

லண்டனில் இருந்து செயற்கைக்கோள் தொலைபேசிகள் உள்ளிட்ட கருவிகளை சென்னை வழியாக இலங்கைக்குக் கடத்தவிருந்ததாக இவர்களை கியூ பிரிவுப் பொலிஸார் சென்னையில் கடந்த வாரம் கைது செய்திருந்தனர்.

அவர்கள் தெரிவித்த பதில் முன்னுக்குப் பின் முரணாக இருந்தது. அவர்களிடம் செயற்கைக்கோள் தொலைபேசி உள்ளிட்ட கருவிகளும் இருந்தன.

அவர்கள் விடுதலைப் புலிகளா, புலிகளுக்காகக் கருவிகளைக் கடத்துகிறவர்களா என்ற கோணத்தில் பொலிஸார் விசாரித்து வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## ஈழத் தமிழரின் இன்னல்களுக்கிடையே எனக்குப் பிறந்தநாள் விழா வேண்டாம்!

### நடிகர் அஜித் வேண்டுகோள்

சென்னை, ஏப். 20



இலங்கைத் தமிழர்களின் இன்னல்களுக்கிடையே என் பிறந்த நாளைக் கொண்டாட வேண்டாம் - என்று ரசிகர்களுக்கு நடிகர் அஜீத்குமார் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

சமீபத்தில் தொடங்கப்பட்ட 'அசல்' திரைப்பட தொடக்க விழாவுக்கு நேரில் கலந்துகொண்டும், தொலைபேசி மூலமாகவும், தலைமை இயக்கத்தின் வாயிலாகவும் எனக்கு வாழ்த்து சொன்ன ரசிகர்களுக்கு மனமார்ந்த நன்றி.

மே முதலாம் திகதி என் பிறந்த நாள் வருவதையொட்டி எனது ரசிகர்கள் அனைவரும் அந்த நாளைச் சிறப்பாகக் கொண்டாட ஏற்பாடு செய்து வருகின்றனர் என்ற செய்தி என் கவனத்துக்கு வந்தது. உங்கள் அன்புக்கு நன்றி.

நான் உங்கள் உற்சாகத்துக்கு தடை போடுகிறேன் என எண்ண வேண்டாம். இலங்கையில் நம் சக தமிழர்கள் இன்னல்களுக்கும், இடர்பாடுகளுக்கும் இடையே சிக்கித் தவிக்கின்ற இந்த நேரத்தில் பிறந்தநாள் கொண்டாடுவது, மனித நேயத்துக்கு முரண்பாடானது எனக் கருதுகிறேன்.

தவிர, நாடாளுமன்ற பொதுத் தேர்தல் நடந்துகொண்டிருக்கின்ற இந்த நேரத்தில், நம்மால் எந்த விதமான இடையூறும் இருந்துவிடக்கூடாது எனக் கருதுகிறேன்.

இம்மாதம் இறுதியில் நான் படப்பிடிப்புக்காக வெளிநாடு செல்ல இருப்பதால், ரசிகர்கள் நேரில் வந்து வாழ்த்து சொல்வதைத் தவிர்த்து, நம் நற்பணி இயக்கத்தின் சீரமைப்புப் பணிகளில் ஈடுபட்டு தலைமை இயக்கத்துக்கு ஒத்துழைக்கும்படி கோருகிறேன் - என்றுள்ளது.

## அதிகார நாற்காலியைக் கைப்பற்றவே 3, 4 ஆவது அணிகள்; சோனியா சீறல்



பத்ராக், ஏப். 20

அதிகாரத்தையும், நாற்காலியையும் பிடிக்கவே நாட்டில் புதிது புதிதாகக் கூட்டணிகள் உருவாகின்றன என்று காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி குற்றம்சாட்டியுள்ளார்.

மூன்றாவது மற்றும் நான்காவது அணியை மறைமுகமாகச் சாடிய அவர், இந்தக் கட்சிகளுக்கு கொள்கை, கோட்பாடு எதுவும் கிடையாது. ஆட்சியைப் பிடிப்பது ஒன்றே குறிக்கோள் என்றும் தெரிவித்தார்.

ஒரிசாவில் பத்ராகில் சனிக்கிழமை நடந்த தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் அவர் மேலும் பேசியவை வருமாறு-

புதிது புதிதாக உருவாகியுள்ள அணிகளுக்கு எதிர்காலம் கிடையாது. அந்த அணிகளுக்கு கொள்கையோ, அரசியல் திட்டங்களோ, நெறிமுறைகளோ எதுவும் கிடையாது. நாட்டை முன்னேற்றுவதற்கான திட்டங்கள், மக்கள் நலத் திட்டங்கள் என்று எதுவும் இல்லாமல் ஆட்சியைப் பிடிக்க வேண்டும் என்பதே அவர்களது குறிக்கோள்.

பிரதமர் மன்மோகன் சிங்கையும், ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசையும் விமர்சிக்கும் வகுப்புவாத பா.ஜ.க.வுக்கு சமூகத்தை துண்டாடுவதைத் தவிர வேறு எந்த உறுதியான திட்டமும் இல்லை. ஒரிசா அரசின் வளர்ச்சிப் பணிகளுக்காக மத்திய அரசு வழங்கிய கோடிக்கணக்கான ரூபாவை நவீன் பட்நாயக் அரசு கிடப்பில் போட்டுவிட்டது. இதனால் பாதிக்கப்படுவது மக்கள்தான்.

ஒரிசா அரசு நாளுக்கு நாள் பின்னோக்கிச் செல்கிறது. கடந்த 9 ஆண்டுகளாக அங்கு ஆட்சி செய்துவரும் நவீன் பட்நாயக்கின் திறமையின்மைதான் அதற்குக் காரணம். தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதித் திட்டம், தேசிய ஊரக சுகாதார திட்டம் உள்ளிட்ட பல மக்கள் வளர்ச்சித் திட்டங்களுக்கு மத்திய அரசு அளித்த நிதியை, ஒரிசா அரசு பயன்படுத்தாமல் திருப்பி அனுப்பிவிட்டது - என்றார்.

## தமிழகத்தில் அனல் பறக்கும் பிரசாரம்: தலைவர்கள் சூறாவளி சுற்றுப் பயணம்

சென்னை, ஏப். 20

மக்களவைத் தேர்தல் தமிழகத்தில் சூடு பிடித்துள்ளது. தலைவர்கள் சூறாவளிச் சுற்றுப் பயணம் செய்து வருகின்றனர்.

மக்களவைத் தேர்தல் 5 கட்டங்களாக நடக்கிறது. கடைசியாக தமிழகத்தில் மே 13ஆம் திகதி வாக்குப் பதிவு நடக்கிறது. அதற்கான வேட்பு மனுத் தாக்கல் கடந்த 17இல் தொடங்கியது.

தி.மு.க., அ.தி.மு.க., பா.ஜ.க. கூட்டணிகள் தங்கள் வேட்பாளர்களை அறிவித்து, தமிழகம் முழுவதும் அக்கட்சித் தலைவர்கள் சூறாவளிச் சுற்றுப் பயணம் தொடங்கிவிட்டனர்.

தி.மு.க. கூட்டணி சார்பில், சென்னையில் நேற்றுமுன்தினம் வேட்பாளர்கள் அறிமுகக் கூட்டம் நடந்தது. வேட்பாளர்களை அறிமுகப்படுத்தி தி.மு.க. தலைவர் கருணாநிதி சிறப்பு உரையாற்றினபர். தமிழகக் காங்கிரஸ் தலைவர் தங்கபாலு, விடுதலைச் சிறுத்தைகள் தலைவர் திருமாவளவன் உட்பட அனைத்து கூட்டணிக் கட்சி தலைவர்களும் கலந்துக் கொண்டு சிறப்பு உரையாற்றினர். கருணாநிதியின், பிரசார சுற்றுப்பயணம் ஓரிரு நாளில் இறுதி செய்யப்படவுள்ளது.

அ.தி.மு.க. கூட்டணியில் தலைவர்களும் பிரசாரத்தைத் தொடங்கி விட்டனர். அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா, தனி விமானம் மூலம் நேற்றுமுன்தினம் நெல்லை சென்று அ.தி.மு.க. கூட்டணிக் கட்சி சார்பில் போட்டியிடும் அ.தி.மு.க. வேட்பாளர் அண்ணாமலையை ஆதரித்துப் பேசினார். அடுத்து கன்னியாகுமரியில் சி.பி.எம். வேட்பாளர் பெல்லார்மினை ஆதரித்து பிரசாரக் கூட்டத்தில் பேசினார்.

தமிழகம், புதுச்சேரி உட்பட 40 தொகுதிகளிலும் தே.மு.தி.க. தனித்துப் போட்டியிடுகிறது. இக்கட்சியின் தலைவர் விஜயகாந்த் நேற்றுமுன்தினம் நீலகிரித் தொகுதியில் வேட்பாளர் செல்வராஜை ஆதரித்து பிரசாரம் செய்தார்.

இதேவேளை, பா.ம.க. நிறுவுநர் ராமதாஸ் நேற்றுமுன்தினமிரவு கரூர் அ.தி.மு.க. வேட்பாளர் தம்பித்துரையை ஆதரித்துப் பொதுக் கூட்டத்தில் பேசினார்.

பா.ஜ.க. கூட்டணியில் ஜனதாக் கட்சி, அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி, நாடாளும் மக்கள் கட்சி, ஐக்கிய ஜனதா தளம், திராவிட விழிப்புணர்ச்சி கழகம், பாரதிய பார்வர்டு பிளாக் ஆகிய கட்சிகள் இணைந்திருப்பதை பா.ஜ.க. தலைவர் வெங்கய்யா நாயுடு நேற்றுமுன்தினம் அறிவித்தார். இக்கூட்டணியின் பிரசாரம் இனி சூடு பிடிக்கும்.

கடந்த 2 நாள்களாக அஷ்டமி, நவமி என்பதால், பிரதான கட்சிகளின் வேட்பாளர்கள் வேட்பு மனு தாக்கல் செய்யவில்லை. இன்று முதல் தி.மு.க., அ.தி.மு.க. கூட்டணியில் உள்ள வேட்பாளர்கள் வேட்பு மனுத் தாக்கல் செய்ய தொடங்கவுள்ளதால் தேர்தல் களம் சூடு பிடிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## ஈழத்துக்கென இருப்போம்; உயிரையும் கொடுப்போம்!



இலங்கையில் போர் நிறுத்தம் கோரி சென்னையில் பெண்கள் நடத்திவரும் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம் நேற்று 6ஆவது நாளாகவும் நீடித்தது. அதன்போது....

## 5 குழந்தைகளை உயிருடன் புதைத்து கொன்ற தந்தைக்கு ஆயுள் தண்டனை

சென்னை, ஏப். 20

பெற்ற குழந்தைகள் 5 பேரை உயிருடன் புதைத்துக் கொலை செய்த தந்தைக்கு விதிக்கப்பட்ட ஆயுள் தண்டனையை உயர் நீதிமன்றம் உறுதிசெய்தது.

விழுப்புரத்தைச் சேர்ந்தவர் அப்துல்கரீம். பாதுநிஷா என்ற பெண்ணை 21 ஆண்டுக்கு முன்பு திருமணம் செய்தார். இவர்களுக்கு 5 பெண் குழந்தைகள் பிறந்தன. பின்னர் வெளிநாட்டு வேலைக்கு சென்று அப்துல் கரீம் நாடு திரும்பினார். அதன்பின், மனைவியின் நடத்தையில் அவருக்கு சந்தேகம் ஏற்பட்டது. மகள்கள் இருவர் நடத்தையிலும் சந்தேகம் ஏற்பட்டது.

இதனால் கடந்த 2001ஆம் ஆண்டு மனைவியின் கழுத்தை நெரித்துக் கொலை செய்தார். பின்னர் 5 பெண் குழந்தைகளின் வாயைக் கட்டிக் குழி தோண்டி உயிருடன் புதைத்தார். தகவல் அறிந்து அப்துல்கரீமைப் பொலிஸார் கைதுசெய்து சிறையில் அடைத்தனர். இந்த வழக்கில் பொலிஸார் விழுப்புரம் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகைத் தாக்கல் செய்தனர்.

வழக்கை நீதிமன்றம் விசாரித்து, பெற்ற குழந்தைகளையும் மனைவியையும் கொலை செய்த குற்றத்துக்காக அப்துல் கரீமுக்கு ஆயுள் தண்டனை விதித்தது. இதை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தார். மனுவை நீதிபதிகள் நாகப்பன், சுதந்திரம் ஆகியோர் விசாரித்து, குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது. அவருக்கு விதிக்கப்பட்ட ஆயுள் தண்டனையை உறுதி செய்து, அவரை வாழ்க்கையின் இறுதி வரை சிறையில் இருக்க வேண்டும் என்று தீர்ப்புக் கூறினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதல் போட்டியில் மும்பை அணி அசத்தல் 19 ஓட்டங்களால் சென்னை அணி தோல்வி



ஐ.பி.எல். ருவென்ரி 20 தொடரின் முதல் போட்டியில் டோனி தலைமையிலான சென்னை சுப்பர்கிங்ஸ் அணி, சச்சினின் மும்பை இந்தியன்ஸ் அணியிடம் 19 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அதிர்ச்சித் தோல்வியடைந்தது. துடுப்பாட்டத்தில் அசத்திய சச்சின், அணியின் வெற்றிக்கு பக்கபலமாக இருந்தார்.

இரண்டாவது ஐ.பி.எல். ருவென்ரி 20 கிரிக்கெட் தொடர் தென்னாபிரிக்காவில் நேற்று முன்தினம் ஆரம்பமாகியது.

தொடரின் முதல் போட்டியில், சென்னை சுப்பர்கிங்ஸ், மும்பை இந்தியன்ஸ் அணி கள் மோதின. நாணயச்சுழற்சியில் வென்ற சென்னை சுப்பர்கிங்ஸ் அணித்தலைவர் டோனி, களத்தடுப்பைத் தேர்வுசெய்தார்.

மும்பை இந்தியன்ஸ் அணிக்கு சச்சின், ஜெயசூர்யா சிறந்த ஆரம்பத்தைக் கொடுத்தனர். ஜெயசூர்யா அடித்து ஆட, சச்சின் பொறுமை காத்தார். 5 பவுண்டரி உட்பட 26 ஓட்டங்களைக் குவித்த ஜெயசூர்யா, துஷாரவின் பந்துவீச்சில் ஆட்டமிழந்து வெளியேறினார். அடுத்து வந்த தவான், சச்சினுடன் இணைந்தார். ஆடுகளம் பந்து வீச்சுக்கு ஒத்துழைக்க, அதிவேகப்பந்து வீச்சாளர்களை பந்துவீச அழைத் தார் சென்னை அணியின் தலைவர் டோனி. இதனால் ஓட்டங்க ளைச் சேர்க்க மும்பை அணி தடுமாறியது.

ஆடுகளத்தின் தன்மை அறிந்து ஒவ்வொரு ஓட்டங்களாகச் சேர்த்தார் சச்சின். இவருக்கு தவான் நல்ல ஒத்து ழைப்புக் கொடுத்தார். முதல் 10 ஓவர் முடிவில் மும்பை அணி, 64 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது. தவான் 22 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளி யேறினார். அதிகம் எதிர்பார்க்கப்பட்ட டுமினி (9) நம்பிக்கை அளிக்கவில்லை.

அடுத்து வந்த பிராவோ 5 ஓட்டங்களுடன் வெளியேற, மும்பை அணிக்கு சிக்கல் ஏற்பட்டது. பின்னர் வந்த அபிஷேக் நாயர், போட்டியின் போக்கை மாற்றினார். அதிரடியாக ஆடிய இவர், பிளின்ரொப் வீசிய பந்தில் ஆட்டத்தின் 18ஆவது ஓவரில் 3 சிக்ஸர்கள் உட் பட 21 ஓட்டங்களைச் சேர்த்து அசத்தினார். 35 ஓட்டங்களை அணிக்காக அதிரடியாகச் சேர்த்து பெவிலியன் திரும்ப னார் அபிஷேக்.

மறுமுனையில் பொறுப்புடன் ஆடிய சச்சின், அரைச்சதம் கடந்தார். ஹர்பஜன் (4), சகீர்கான் (2) ஆகியோரும் சோபிக்கத் தவறினர். 20 ஓவர்களின் முடிவில் மும்பை இந்தியன்ஸ் அணி, 7 விக்கெட்டுக்களை இழந்து 165 ஓட்டங்களைச் சேர்த்தது. 7 பவுன்டரிகளுடன் 59 ஓட்டங்களைக் குவித்த சச்சின், ஆட்டமிழக்காமல் இருந்தார்.

சவாலான இலக்கை விரட்டிய சென்னை அணிக்கு, ஆரம்பம் அதிர்ச்சியாக அமைந்தது. ஆரம்ப வீரர் பார்த்திவ் பட்டேல் வந்தவுடன் ஆட்டமிழந்து ஏமாற்றினார். அடுத்து வந்த முன்னணி வீரர் ரெய்னாவும் 8 ஓட்டங்களுடன் வெளியேறினார். இந்நிலையில் 3ஆவது விக்கெட்டுக்கு ஹைடனுடன் இணைந்த பிளின்ரொப் அதிரடி காட்டினார். இந்த ஜோடி ஆட்டத்தை விறுவிறுப்பாக்கிய நிலையில், மும்பை அணி சுழற்பந்து வீச்சைக் கையில் எடுத்தது. இதற்கு நல்ல பலனும் கிடைத்தது. ஹர்பஜனிடம் சரணடைந்தார் பிளின்ரொப் (24).

மறுமுனையில் 6 பவுன்டரிகள் 1 சிக்ஸருடன் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்திக் கொண்டிருந்த ஹைடன் 44 ஓட்டங்களுடன் பெவிலியன் திரும்பனர். அடுத்தடுத்து வந்த ஓரம் (8), பத்ரிநாத் (0) ஆகியோர் ஏமாற்றம் அளிக்க, சென்னை அணி நெருக்கடியில் சிக்கியது. அணித் தலைவர் டோனி தனி ஆளாகப்போராடியும் பலன் கிடைக்கவில்லை. இலங்கை வீரர்லசித் மலிங்கவின் பந்து வீச்சில் டோனி (36) ஆட்டமிழந்தார், நம்பிக்கை தகர்ந்தது. 20 ஓவர்களின் முடிவில் 146 ஓட்டங்களை மட்டுமே எடுத்த சென்னை அணி, 19 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வி அடைந்தது. ஆட்டநாயகன் விருதை சச்சின் வென்றார். இவ்வெற்றியின் மூலம் மும்பை அணி 2 புள்ளிகளை முழுமையாகத் தட்டிச்சென்றது.

வெற்றிக்கு பின்னர் மும்பை இந்தியன்ஸ் தலைவர் டெண்டுல்கர் கூறுகையில், ''ஆடுகளம் ஈரப்பதமாக இருந்ததால் தொடக்கத்தில் முதல் 6-7 ஓவர்கள் துடுப்பெடுத்தாடுவது கடினமாக இருந்தது. கடைசிக் கட்டத்தில் அபிஷேக் நாயரின் ஆட்டம் அற்புதமாக இருந்தது. தொடரை வெற்றியுடன் தொடங்கியிருப்பது மகிழ்ச்சியாக இருக்கிறது. ஆனால் இன்னும் நீண்ட தூரம் போக வேண்டியுள்ளது. எனவே எல்லாமே எளிதாக இருக்கும் என்று எடுத்துக் கொள்ளமாட்டோம் - என்றார்.

சென்னை சுப்பர்கிங்ஸின் தலைவர் டோனி கூறுகையில், இறுதிக் கட்டத்தில் நாங்கள் ஓட்டங்களை விட்டுக்கொடுத்து விட்டோம். அந்த அணியில் ஜெயசூர்யா, டெண்டுல்கர், நாயர் ஆகியோரின் துடுப்பாட்டம் சிறப்பாக இருந்தது. இதேபோல் ஹர்பஜன்சிங்கின் பந்து வீச்சும் அபாரமாக இருந்தது. அவர்கள் எங்களைவிட நன்றாக ஆடினார்கள் என்று நினைக்கிறேன். கடந்த முறை தொடக்கத்தில் எங்களது பந்து வீச்சு சரியாக இல்லை. ஆனால் அதன் பின்னர் சரி செய்து விட்டோம். இந்தப் பகுதியில் நாங்கள் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் - என்றார்.

## ஐ.பி.எல்லில் விளையாடிய நாய்!



ஐ.பி.எல். கிரிக்கெட்டில் 12ஆவது வீரராக நாய் விளையாடி சிறிது நேரம் வேடிக்கை காட்டியது. சென்னை - மும்பை இடையிலான ஆட்டத்தில் 5.1 ஓவர்கள் முடிந்திருந்த போது, திடீரென ஒரு கறுப்பு நிற நாய் மைதானத்திற்குள் ஓடி வந்து விட்டது. நடுவர்கள் அதனை உடனடியாக விரட்ட முயற்சித்தபோதும் அது வெளியேபோக மறுத்தது.

மைதானத்தையே சுற்றிச் சுற்றி வந்தது. சென்னை வீரர் கோனி, பந்தை காட்டியபடி நாயுடன் பேச்சு நடத்தியும் பலன் இல்லை. இதற்குள் பாதுகாப்பு அதிகாரிகள் ஓடி வந்தனர். அவர்களுக்கும் அந்த நாய் தண்ணி காட்டியது. 'சன்விச்'சுக்கும் கட்டுப்பட வில்லை. இறுதியில் இளம் பெண் ஒருவர், ரொட்டித் துண்டைக் காட்டி நாயைப் பணிய வைத்தார். அதன் பின்னர் லாவகமாக நாயை 'கலரி' வழி யாக வெளியேற்றினார்கள்.

சுமார் 10 நிமிடம் நடந்த இந்தக் கூத்தை ரசிகர்கள் மட்டுமின்றி, வீரர்களும் உற்சாக மாக வேடிக்கை பார்த்துக்கொண்டிருந் தனர். ஆட்டத்தில் காலதாமதம் செய்தால் கடும் அபராதம் விதிக்கப்படும் என்று ஐ.பி.எல். எச்சரித்துள்ளது. ஒருவேளை இந்த ஆட்டத் தில் குறிப்பட்ட நேரத்திற்குள் பந்து வீசி முடிக் கவில்லை என்றால், அபராதம் 12ஆவது வீர ரான இந்த நாய்க்கு தான் விதிக்கப்பட வேண்டும்.

## கொல்கத்தா அணியின் தலைவராக மக்கலம்!

ஐ.பி.எல். போட்டிக்கான கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியின் தலைவராக இருந்த கங்குலி நீக்கப்பட்டு அவருக்குப் பதிலாக நியூஸிலாந்து வீரர் மக்கலம் நியமிக்கப்பட்டார். பயிற்சியாளர் புக்கனனின் யோசனையைத் தொடர்ந்து நடிகர் ஷாருக்கானின் ஆதரவுடன் அணி நிர்வாகம் இந்த முடிவை எடுத்தது. முதலில் இந்த முடிவுக்கு எதிர்ப்புத் தெரிவித்த கங்குலி தற்போது தனது மனநிலையில் மாறியுள்ளார்.

இது தொடர்பாக கங்குலி கேப்டவுனில் ஒரு தொலைக்காட்சி நிறுவனத்திற்கு அளித்த பேட்டியில் கூறியவை வருமாறு:-

எனக்கு மட்டும் எப்பொழுதும் இப்படி நடப்பது ஏன் என்று தெரியவில்லை. விளையாட்டு வீரர்கள் சர்ச்சையை எதிர்கொள்வது வழக்கமான ஒன்று தான். எனது வாழ்க்கையில் கடவுள் எனக்கு நிறைய விடயங்களைக் கொடுத்துள்ளார். இந்திய அணிக்கு தலைவராக இருந்துள்ளேன். நீண்ட நாள் தேசிய அணிக்காக விளையாடி இருக்கிறேன். குடும்ப வாழ்க்கையும் மகிழ்ச்சியாக அமைந்திருக்கிறது. கடவுள் என் மீது நிறையக் கருணை காட்டியுள்ளார்.

மக்கலத்தை அணியின் தலைவராகத் தேர்வு செய்தது அணியின் ஒட்டுமொத்த முடிவாகும். அதற்கு நானும் ஆதரவு தெரிவிக்கிறேன். மக்கலம் அதிரடியாக ஆடக்கூடிய சிறந்த வீரர். அவர் சிறந்த அணித்தலைவராக இருப்பார். அவருக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்து கொள்கிறேன். ஓட்டங்களைக் குவிக்க வேண்டும், அணியின் வெற்றியில் முக்கிய பங்குவகிக்க வேண்டும் என்பது தான் எனது முழு நோக்கமாகும். அணிக்கு சிறப்பான பங்களிப்பை அளிக்க முயற்சிப்பேன்.- இவ்வாறு கங்குலி கூறினார்.

## அரையிறுதியில் பயஸ் ஜோடி தோல்வி

உலகின் முன்னணி வீரர்கள் பங்கேற்கும் மான்டே - கார்லோ ரோலக்ஸ் மாஸ்டர்ஸ் ரென்னிஸ் தொடர் மொனாக்கோவில் நடக்கிறது.

நேற்றுமுன்தினம் நடந்த இரட்டையர் அரையிறுதியில் இந்தியாவின் லியாண்டர் பயஸ், செக் குடியரசின் லூகாஸ் லூயி ஜோடி, அமெரிக்காவின் பாப்மைக்பரையான் ஜோடியை சந்தித்தது. விறுவிறுப்பான அரையிறுதியில் முதல் செற்றை பயஸ் ஜோடி 7-6 என போராடிக் கைப்பற்றியது. இரண்டாவது செற்றில் எழுச்சி கண்ட அமெரிக்க ஜோடி 6-3 என பதிலடி கொடுத்தது.

வெற்றியாளரை நிர்ணயிக்கும் இறுதிச் சுற்றில் பரையான் ஜோடி 14-12 என செற்றை தன் வசப்படுத்தியது. இறுதியில் பயஸ் ஜோடி 7-6, 3-6, 12-14 என்ற செற் கணக்கில் அதிர்ச்சித் தோல்வியடைந்து வெளியேறியது.

## அவுஸ்திரேலியாவுக்கு ஆறுதல் வெற்றி!



வெற்றிக் கிண்ணத்துடன் தென்னாபிரிக்க வீரர்கள்...

ஜொகனஸ்பேர்க்,ஏப்.20

தென்னாபிரிக்காவுக்கு எதிரான கடைசி ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் அவுஸ்திரேலிய அணி 47 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ஆறுதல் வெற்றியைப் பெற்றது.

ரிக்கிபொண்டிங் தலைமையிலான அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி, தென்னாபிரிக்காவில் சுற்றுப்பயணம் செய்து விளையாடியது. இரு அணிகளுக்கும் இடையிலான 5 ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் போட்டித் தொடரின் முதல் ஆட்டத்தில் அவுஸ்திரேலியாவும், மறற 3 ஆட்டங்களில் தென்னாபிரிக்காவும் வென்றன. இதனால் தென்னாபிரிக்க அணி 3-1 என்ற கணக்கில் தொடரைக் கைப்பற்றியது.

இந்த நிலையில் இரு அணிகளுக்கும் இடையேயான 5ஆவது மற்றும் கடைசி ஒரு நாள் கிரிக்கெட் போட்டி ஜொகனஸ் பேர்க்கில் நேற்று முன்தினம் நடந்தது.

முதலில் ஆடிய அவுஸ்திரேலிய அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 7 விக் கெட்டுக்களை இழந்து 303 ஓட்டங்களைக் குவித்தது. ஹசி 62 ஓட்டங்களும், மைக்கல்கிளாக் 66 ஓட்டங்களும், பொண்டிங் 40 ஓட்டங்களும், பெர்குஸன் 41 ஓட்டங்களுடனும், மைக் ஹஸி 49 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். தென்னாபிரிக்க அணி தரப்பில் டுமினி 3 விக்கெட்டுக்களையும், வண்டொர் 2 விக்கெட்டுக்களையும், அல்பி மோர்கல் ஒரு விக்கெட்டையும் கைப் பற்றினார்கள்.

304 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய தென்னாபிரிக்கா சார்பில் அதன் தலைவர் ஸ்மித் 20 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். 2ஆவது விக்கெட்டை தென்னாபிரிக்க அணி இழந்த போது ஜோடி சேர்ந்த கிப்ஸ், கலீஸ் ஜோடி சிறப்பாக ஆடியது. 150 ஓட்ட எண்ணிக்கையை எட்டியபோது இந்த ஜோடி பிரிந்தது. கிப்ஸ் 82 ஓட்டங்களை எடுத்த நிலையில் ஆட்டம் இழந்தார். கலீஸ் 64 ஓட்டங்களுடனும், டிவில்லியர்ஸ் 38 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். அதன் பின்னர் வந்த வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர்.

45.5 ஓவர்களில் தென்னாபிரிக்கா 256 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இதனால் அவுஸ்திரேலிய அணி 47 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது. அவுஸ்திரேலியா சார்பில் ஜோன்ஸன் 3 விக்கெட்டுக்களையும், நெதன் பிராக்கன், ஹவுரிட்ஸ் தலா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினார்கள். ஒருநாள் போட்டித் தொடரை தென்னாபிரிக்கா 3-2 என்ற கணக்கில் தன தாக்கியது.

இந்த வெற்றியின் மூலம் அவுஸ்தி ரேலியா தரவரிசையில் 3ஆவது இடத்தில் இருந்து முன்னேறி மீண்டும் 2ஆவது இடத்தைப் பிடித்துள்ளது. 2ஆவது இடத்தில் இருந்த இந்திய அணி 3ஆவது இடத்துக்கு பின் தள்ளப்பட்டது. தென்னாபிரிக்க அணி தொடர்ந்து முதலிடம் வகிக்கிறது.

## கும்ளேயின் சுழலில் சுருண்டது ராஜஸ்தான் பெங்களூர் அணி 75 ஓட்டங்களால் வெற்றி



கேப்டவுன், ஏப்.20

பெங்களூர் அணி வீரர்களான கும்ளே, ராவிட்டின் அபாரமான ஆட்டத்தால் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி அதிர்ச்சித் தோல்வியடைந்தது.

தென்னாபிரிக்காவில் நேற்று முன்தினம் தொடங்கிய ஐ.பி.எல். கிரிக்கெட்டின் 2ஆவது ஆட்டத்தில் ஷேர்ன் வோர்ன் தலைமையிலான நடப்பு சம்பியன் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியும், பீற்றர்ஸன் தலைமையிலான பெங்களூர் ரோயல் சலஞ் ஜர்ஸ் அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய பெங்களூர் அணி 17 ஓட்டங்களை மட்டுமே பெற்ற நிலையில் ரைடர் (0), ரோஸ் ரெய்லர் (0), உத் தப்பா (3), ஆகியோரின் விக்கெட்டுகளை மளமள வெனப் பறிகொடுத்து அதிர்ச்சிக்குள்ளானது. இந்த 3 விக்கெட்டுகளையும் மஸ்கரனாஸ் கைப்பற்றினார்.

இதன் பின்னர் ராவிட்டும், பீற்றர்ஸனும் அணியை சரிவிலிருந்து மீட்டனர். பீற்றர்ஸன் 32 ஓட்டங்களும் (30 பந்து, 4 பவுண்டரி), டிராவிட் 66 ஓட்டங்களும் (48 பந்து, 8 பவுண்டரி, ஒரு சிக்ஸர்) சேர்த்தனர். 20 ஓவர்களில் பெங்களூர் அணி 8 விக்கெட்டுக்களை இழந்து 133 ஓட்டங்களை எடுத்தது. தொடர்ந்து ஆடிய ராஜஸ்தான் அணிக்கும், தொடக்கத் திலேயே பேரிடி விழுந்தது. ஸ்மித் (2), அஸ்னோட்கர் (0) ஆகியோரின் விக்கெட்டுகளை பிரவீன் குமார் வீழ்த்தி வெற்றிக்கு அச்சாரம் போட்டார்.

இதன் பின்னர் கும்ளேயின் மாயாஜால பந்து வீச்சில் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி மிரண்டது. அவரது பந்து வீச்சுக்கு யூசுப்பதான் (11 ஓட்டங்கள்), ரவீந்திர ஜடேஜா (11 ஓட்டங்கள்), வோர்ண் (3 ஓட்டங்கள்), முனாப் பட்டேல் (0), கம்ரன்கான் (3ஓட் டங்கள்) ஆகி யோர் இரையானார்கள். 15.1 ஓவர்களில் 58 ஓட் டங்களுடன் ராஜஸ்தான் ரோயல்ஸ் சுருண்டது. இதன் மூலம் 75 ஓட் டங்கள் வித்தியாசத்தில் பெங்களூர் அணி வெற்றியை சுவைத்தது. கடந்த ஆண்டு 7ஆவது இடத்துக்கு தள்ளப்பட்ட பெங்களூர் அணி இந்தமுறை வெற்றியுடன் தொடங்கியிருக்கிறது.

கும்ளே 3.1 ஓவர் பந்து வீசி 5 ஓட்டங்களை மட்டுமே விட்டுக்கொடுத்து 5 விக்கெட்டுகளைச்சாய்த்தார். அரைச்சதம் அடித்தடிராவிட் ஆட்டநாயகன் விருது பெற்றார்.

ராஜஸ்தான் அணி நேற்றுமுன்தினம் எடுத்த 58 ஓட்டங்களே ஐ.பி.எல். கிரிக்கெட்டில் குறைந்தபட்சமாகும். இதற்கு முன்பு கடந்த ஆண்டு கொல்கத்தா அணி மும்பைக்கு எதிராக 67 ஓட்டங்களில் ஆட்டம் இழந்ததே குறைவான ஓட்டஎண்ணிக்கையாக இருதது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தானில் தற்கொலைத் தாக்குதல்! 27 பேர் உயிரிழப்பு; 62 பேர் காயம்!!

இஸ்லாமாபாத், ஏப். 20

வட-மேற்கு பாகிஸ்தானிலுள்ள பொலிஸ் சோதனைச்சாவடிக்கருகில், சனிக்கிழமை மேற்கொள்ளப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் 27 பேர் பலியாயினர். 62 பேர் காயமடைந்தனர் என பொலிஸ் வட்டாரம் தெரிவித்தது.

வட மேற்கு மாகாணத்திலுள்ள ஹங்கு நகருக்கருகில் அமைந்துள்ள டோபா பகுதியில் இச் சோதனைச் சாவடியுள்ளது. ட்ரக் கொன்றை செலுத்தி வந்த தற்கொலைக் குண்டுதாரி, சோதனைச்சாவடிக்கருகில் குண்டை வெடிக்க வைத்துள்ளார் என்றும் அது குறிப்பிட்டது.

சோதனைச்சாவடிக்கருகில், சோதனைக்காக, அணிவகுத்து நின்ற மக்கள் அணிக்கருகில் இக்குண்டு பயங்கர சத்தத்துடன் வெடித்தது. இதில் மரணித்தவர்களிலும், காயமுற்றோரிலும் பெரும்பாலானோர் பொலிஸாரும், பாதுகாப்புப் படைச் சிப்பாய்களுமாவர் என்றும் அது தெரிவித்தது.

இக்குண்டுத் தாக்குதலில் காயமடைந்தோரில் பலர் ஆபத்தான கட்டத்தில் இருந்தனர். எனவே, உயிரிழப்புகளின் எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும் என சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி பரீக்கான், ரொய்ட்டர் செய்திச் சேவைக்குக் குறிப்பிடுகையில் அச்சம் தெரிவித்தார்.

''காயமடைந்தவர்களில் உள்ளூர் பிரதம பொலிஸ் அதிகாரியும் ஒருவர். இத்தாக்குதலில், சோதனைச்சாவடிக்கருகில் இருந்த பெண்களும், குழந்தைகளும் பலியாகியுள்ளார்கள். காயமடைந்துமுள்ளார்கள். தற்கொலைக் குண்டுதாரியின் வாகனமும் தீச்சுவாலைகளோடு சிதைந்து சிதறியுள்ளது'' என்றும் அவர் கூறினார்.

பாகிஸ்தான் பிரதமர் யூசுப் ராஜா கிலானி, இக்குண்டுத் தாக்குதலை வெகுவாகக் கண்டித்துள்ளார். ''இது பயங்கரவாதத்தின் கோழைத்தனமான ஒரு செயல். இத் தீவிரவாத சக்திகளுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்'' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, பாகிஸ்தான் தலிபான் தலைவர் பைத்துல்லா மெஹ்சூட்டின் பேச்சாளர் ஒருவர், இக்குண்டுத் தாக்குதலை தமது இயக்கமே மேற்கொண்டது எனக் குறிப்பிட்டு, இதற்கு உரிமை கோரியுள்ளார்.

''எங்கள் பிராந்தியம் மீது அமெரிக்க ஆளில்லா வேவு விமானங்கள் ஏவுகணைத் தாக்குதல்களை நடத்துகின்றன. இதுவரை இவற்றில் எங்கள் மக்களில் அநேகர் பலியாகியுள்ளனர். இதற்குப் பதிலடி கொடுக்கும் பொருட்டே இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது'' என்றும் அவர் தொலைபேசி மூலமாக செய்தி நிறுவனங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

''அமெரிக்க ஏவுகணைத் தாக்குதல்களை பாகிஸ்தான் அரசு தடுத்து நிறுத்தவில்லை. இவை நிறுத்தப்படாதவரை, பாதுகாப்புப் படைகள் மீதான எமது இத்தகைய தாக்குதல்கள் நீடிக்கும். அரசின் கவனத்தை ஈர்க்க இதை விட மோசமான தாக்குதல்களும் மேற்கொள்ளப்படும்'' என்றும் இப்பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

வட-மேற்கு மாகாண எல்லையிலுள்ள ஹங்கு மாவட்டத்தில் பழங்குடி மக்களே செறிந்து வாழ்கிறார்கள். இம்மாவட்டத்திலுள்ள டோபா சோதனைச்சாவடிக்கருகில் இடம்பெற்ற இக்குண்டுத் தாக்குதலில், அக்கம் பக்கக் கட்டடங்களும் சேதமடைந்துள்ளன. காயமடைந்தோர் ஹங்கு, பெஷாவர் ஆகிய இடங்களிலுள்ள வைத்தியசாலைகளுக்குக் கொண்டு செல்லப்பட்டனர் என உள்ளூர் அதிகாரி ஒருவர், பி.பி.ஸிக்குத் தெரிவித்தார்.

## பங்களாதேஷில் சூறாவளி; பல இடங்களில் பாதிப்பு

டாக்கா, ஏப்.20

பங்களாதேஷை தாக்கிய பிஜ்லி சூறாவளி அனர்த்தங்களால் இருநூறுக்கு மேற்பட்ட வீடுகள் சேதமடைந்தன. வீடுகள் இடிந்து விழுந்ததில் இரு குழந்தைகள் பலியானார்கள். பலர் காயமடைந்தனர் என அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

சூறாவளியின் தாக்கத்தால் ஆயிரக்கணக்கான ஏக்கர் பயிர்கள் நாசமடைந்துள்ளன. பல இடங்களில் மரங்கள் வேரோடு சாய்ந்துள்ளன. மின்கம்பங்கள் சரிந்துள்ளன. வடகிழக்குப் பகுதியிலுள்ள கோக்ஸ் பஜார் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது என்றும் அவர்கள் விளக்கினார்கள்.

வங்கக் கடலில் உருவான பிஜ்லி என்னும் இச் சூறாவளியின் வலு பின்னர் தளர்ந்து விட்டது. இது சிற்றம் தணிந்த நிலையில், சனிக்கிழமை இரவு, பங்களாதேஷின் தென் கிழக்குக் கடற் பிராந்தியத்தைக் கடந்தது என பங்களாதேஷ் வானிலை ஆய்வு மையத் தொடர்பாளர் பி.டி.ஐ. நிறுவனத்துக்குத் தெரிவித்தார்.

சூறாவளி கடந்து விட்டாலும், கடலின் சீற்றம் அடங்கவில்லை. திங்கட்கிழமை(இன்று) காலைவரை கடலுக்குச் செல்ல வேண்டாமென கடற்றொழிலாளர் எச்சரிக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் கூறினார்.

## சோமாலிய கடற்கொள்ளையரிடமிருந்து இருபதுபேரை மீட்டது நேட்டோ படை

வாஷிங்ரன், ஏப். 20

சோமாலிய கடற்கொள்ளையர்களால் பிடித்து பணயமாக வைக்கப்பட்டிருந்த 20 பேரை ஏடன் வளைகுடாவில் பணியில் ஈடுபட்டிருந்த தமது கடற்படையினர் விடுவித்துள்ளனர் என நேட்டோ தெரிவித்துள்ளது.

அங்கு பணியில் ஈடுபட்ட நேட்டோவின் டச்சு கடற்படையினர் கடற்கொள்ளையர்களை நிர்ப்பந்தித்து, அவர்கள் பிடித்து வைத்திருந்த பெரும்பாலும் ஏமன் நாட்டைச் சேர்ந்த மீனவர்கள் என்று நம்பப்படுகின்ற பணயக் கைதிகளை விடுவித்துள்ளனர் என நேட்டோ பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அந்த கடற்கொள்ளையர்களின் ஆயுதங்கள் களையப்பட்டன. எனினும், டச்சுச் சட்டப்படி அவர்களை கைது செய்வது சட்ட விரோதமாகும். அதனால் அவர்கள் தடுத்து வைக்கப்படவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே இரண்டு பெல்ஜியம் நாட்டவர் மற்றும் ஒரு டச்சுக்காரர் உள்ளடங்கலாக 10 மாலுமிகளுடன் சேர்த்து பெல்ஜியம் கப்பல் ஒன்றை சோமாலிய கடற்கொள்ளையர்கள் பிடித்து வைத்துள்ளார்கள் என பெல்ஜியம் கூறியுள்ளது.

## புருண்டியில் ஆயுதப் போராட்டம் நடத்தியோர் அரசிடம் சரண்

புருண்டி அரசுக்கு எதிராக ஆயுதப் போராட்டம் நடத்திவந்த தேசிய விடுதலைக்கான படையின் தலைவர் அகாதோன் வாசா, தமது ஆயுதங்களை அரசிடம் ஒப்படைத்தார். இக் கையளிப்போடு தமது ஆயுதப் போராட்டம் முடிவுக்கு வருகிறது என்றும் அவர் தெரிவித்துக்கொண்டார்.

இக்கையளிப்பு நிகழ்ச்சி ரூபிரா என்னுமிடத்தில் நடைபெற்றது. தலைநகரான புஜும்புராவின் மேற்கே 20 கிலோ மீற்றர் (12 மைல்) தொலைவில் இந்த இடம் அமைந்துள்ளது. இந் நிகழ்வில் மூவாயிரத்துக்கு மேற்பட்ட இந்த அமைப்பின் தீவிரவாதிகளும் கலந்துகொண்டார்கள்.

புருண்டியில் அமைதி காக்கும் பணியில் ஈடுபட்டுள்ள ஆபிரிக்க ஒன்றியப் படைத் தளபதியிடம் அகாதோன் வாசா தம் ஆயுதங்களை ஒப்படைத்தார். இவரின் தேசிய விடுதலைக்கான படையைச் சேர்ந்த ஏறத்தாழ 20 ஆயிரம் தீவிரவாதிகளும் தங்களின் ஆயுதங்களை அடுத்த வாரம் கையளிக்கவுள்ளார்கள்.

கடந்த 20 வருட காலப் போராட்டத்துக்குப் பின்னர், இந்தத் தீவிரவாதப் படையினர் தற்போது தேசிய நீரோட்டத்தில் சங்கமிக்க முன் வந்துள்ளனர். இப்படையினரில் ஒரு பிரிவினர், பாதுகாப்புப் படையினருடன் சேர்க்கப்படுவர் என் புருண்டி அரசு தெரி வித்துள்ளது.

அதேவேளை, தேசிய விடுதலைக்கான தீவிரவாத படை அமைப்பு, அடுத்த வாரம் பெயர் மாற்றத்தோடு ஓர் அரசியல் அமைப்பாக பதிவு செய்யப்படவுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. புருண்டியில் கடந்த 20 வருட கால இனக் கலவரங்களில் ஏறத்தாழ 3 இலட்சம் பேர் வரை மரணித்துள்ளனர்.

## இந்தியவம்சாவளி இருவருக்கு முக்கிய பதவி; ஒபாமா அறிவிப்பு

வாஷிங்ரன், ஏப். 20

இந்திய வம்சாவளியைச் சேர்ந்த 2 அமெரிக்கர்களுக்குத் தனது அரசில் முக்கிய பதவிகளை வழங்க அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா முன்வந்துள்ளார்.

இதன்படி விவசாயத்துறையின் கல்வி மற்றும் பொருளாதார ஆய்வுகளுக்கான துணைச் செயலராக இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ராஜ்ஷாவையும், முதன்மை செயல் நிறைவேற்றும் அதிகாரியாக பால் சோப்ராவையும் தாம் நியமிக்கவுள்ளார் என வாராந்திர வானொலிப் பேட்டியில் பராக் ஒபாமா கூறியுள்ளார்.

தற்போது வேர்ஜீனியாவின் தொழில்நுட்பப் பிரிவுச் செயலராகப் பணியாற்றி வரும் பால் சோப்ரா, முதன்மை தொழில்நுட்ப அலுவலர் பதவியைப் பயன்படுத்தி பல புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குவார் என ஒபாமா நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இதேபோல் தற்போது பில் மற்றும் மெலிண்டா கேட்ஸ் அமைப்பின் சர்வதேச விவசாய மேம்பாட்டுப் பிரிவின் இயக்குநராகப் பணியாற்றிவரும் ராஜ்ஷா, நாட்டின் விவசாய உற்பத்தியைப் பெருக்க நடவடிக்கை எடுப்பார் என்றும் கூறப்பட்டுள்ளது.

## ஜப்பானில் பூகம்பம்

டோக்கியோ, ஏப். 20

ஜப்பானில் ரஷியாவை ஒட்டியுள்ள குரில் தீவில் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை பூகம்பம் ஏற்பட்டது. வீடுகள், கட்டடங்கள் பயங்கரமாகக் குலுங்கின.

மக்கள் அலறியடித்துக்கொண்டு வெளியே ஓடி திறந்த வெளிகளில் நின்றனர். எனினும், சேத விவரங்கள் உடனடியாக வெளியாகவில்லை.

இப்பூகம்பத்தின் தாக்கம் ரிச்டர் அளவு கோலில் 6.4 புள்ளிகளாகப் பதிவாகியுள்ளது. இது கடலுக்கடியில் மையம் கொண்டிருந்தது என ஜப்பானிய பு[illegible] ஆய்வு மையம் தெரிவித்தது.

எனினும், ஆழிப்பேரலை ஆபத்து இல்லை என அறிவிக்கப்பட்டது.

## மெக்ஸிக்கோவில் பஸ் விபத்து 10 பேர் பலி; 62 பேர் காயம்

மெக்ஸிக்கோ நகர், ஏப். 20

மெக்ஸிக்கோவின் தென் சியாபாஸ் மாகாணத்தில், இரு பஸ்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாயின. இவ்விபத்தில் 19 பயணிகள் பலியாயினர். 62 பேர் காயமடைந்தனர் என பொலிஸ் வட்டாரம் தெரிவித்தது.

இம் மாகாணத்திலுள்ள குவாட்டமலான் எல்லைக்கருகேயுள்ள ஓகாஸோ கொயாயுட்லா நகரில் இக் கோர விபத்து சம்பவித்தது. காயமடைந்த பயணிகளில் பலர் ஆபத்தான கட்டத்திலிருந்தனர் என்றும் அவ்வட்டாரம் குறிப்பிட்டது.

## மின்சார சபை, பெற்றோலியம், துறைமுகம்

# மூன்று தொழிற்சங்கங்கள் இன்று வேலை நிறுத்தம்

கொழும்பு, ஏப்ரல் 20

சம்பள அதிகரிப்புக் கோரி இலங்கை மின்சாரசபை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை துறைமுக அதிகாரசபை ஆகியவற்றின் மூன்று தொழிற் சங்கங்கள் ஒன்றிணைந்து இன்று வேலை நிறுத்தத்தில் ஈடுபடுகின்றன.

இது தொடர்பாக இத்தொழில் சங்கத்தினர் கூறியவை வருமாறு:-

ஏனைய அரச நிறுவனங்கள் போன்று அல்லாது இலங்கை மின்சாரசபை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் துறைமுக அதிகாரசபை ஆகியவற்றில் தொழில்புரியும் ஊழியர்கள் மூன்று வருடங்களுக்கு ஒரு முறை தான் சம்பள உயர்வைப் பெறுகின்றனர்.

அந்த வகையில் இந்த வருடம் எமது சம்பளம் அதிகரிக்கப்படல் வேண்டும். ஆனால், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எதுவித காரணமுமின்றி சம்பள உயர்வை 2010ஆம் ஆண்டுக்கு ஒத்திவைத்துள்ளார்.

நாட்டுக்காகக் கஷ்டப்பட்டு உழைக்கும் எமது சம்பளத்தை அதிகரிக்க இந்த அரசுக்கு விருப்பமில்லை. ஆனால், அமைச்சர்மார்கள் முழு அளவில் சம்பள அதிகரிப்பைப் பெற்று அனுபவிக்கின்றனர்.

அமைச்சர் பௌஸி பெற்றோலிய கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பை வழங்க விருப்பம் தெரிவித்துள்ள போதிலும் ஜனாதிபதி அதை நிராகரித்துள்ளார்.

ஆகவேதான், நியாயமான எமது சம்பள அதிகரிப்பை இந்த வருடம் மேற்கொள்ளுமாறு கோரிக்கை விடுத்து மூன்று தொழிற் சங்கங்களும் இன்று 20ஆம் திகதி வேலை நிறுத்தத்தில் குதிக்கின்றன என்றார். (சி)


## கண்ணீரைக் காணிக்கையாக்குகின்றோம்



எமது நிறுவனத்தின் ஆரம்பகால தமிழ்த் துறை ஆசிரியர் ஐயாத்துரை குமாரதாசன் அவர்களின் பாசமிகு தாயார்

அமரர் கவிஞர் அரியாலையூர் ஐயாத்துரை அவர்களின் துணைவி

ஐயாத்துரை மகாலட்சுமி

அவர்கள் அமரத்துவம் அடைந்த செய்தி கேட்டு அதிர்ச்சி அடைந்தோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் துன்பத்தில் ஆழ்ந்துள்ள உறவினரின் துயரில் கலந்திருக்கவும் இறைவனை வேண்டுகிறோம்.

சயான்ஸ் அக்கடமி,
அரியாலை,
நல்லூர்

இயக்குநர், ஆசிரியர்கள், மாணவர்கள்.


## கணித பாடத்தில் தோற்றாத வன்னி மாணவர் ஜி.சீ.ஈ. உயர்தரத்தை தொடர்வதற்கு அனுமதி

கொழும்பு, ஏப். 20

கடந்த ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையின் போது புதிய பாடத்திட்டத்திற்கேற்ப கணித பாடத்தில் தோற்றமுடியாது போன வன்னி மாணவர்கள் ஜி.சீ.ஈ. உயர்தரப் படிப்பைத் தொடர்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு தோற்றமுடியாதுபோன கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாணவர்கள் 7 ஆயிரம் பேருக்கு ஜி.சீ.ஈ. உயர்தரப் படிப்பைத் தொடர வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த மாணவர்களால் தோற்ற முடியாது போன கணித பாடத்திற்குப் பதிலாக விசேட பரீட்சைகள் நடத்துவதுபற்றி எதுவித தீர்மானமும் எடுக்கப்படவில்லை என்று பரீட்சைகள் ஆணையாளர் அநுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

வன்னி மாணவர்களின் நிலைமைகளைக் கருத்திற்கொண்டே அம்மாணவர்களை ஜி.சீ.ஈ. உயர்தரப் படிப்புக்கு அனுமதிக்கத் தீர்மானிக்கப்பட்டது என்று பரிட்சைகள் ஆணையாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, வவுனியா அகதிமுகாம்களில் தங்கியுள்ள வன்னி மாணவர்களின் கல்வி நடவடிக்கையை மேம்படுத்தும் நோக்கில் அங்கு அவர்களுக்கு நூலகம் ஒன்று அமைத்துக் கொடுக்கப்படவுள்ளது என்று அரசு தெரிவித்துள்ளது. (சி)

## நாவுக்கரசர் குருபூசை

காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் இன்று திங்கட்கிழமை காலை 9 மணியளவில் திருநாவுக்கரசுநாயனாரின் குரு பூசைத்தினம் இடம்பெறவுள்ளது.

★ ★ ★

ஆனைக்கோட்டை ஸ்ரீ வல்லியப்பர் ஆலய இந்து இளைஞர் மன்றத்தினரால் நடத்தபபடுகின்ற திருநாவுக்கரசு நாயனார் குரு பூசைத்தினம் இன்று திங்கட்கிழமை மாலை 5 மணியளவில் நடைபெறவுள்ளது. நிகழ்வில் சைவப்புலவர் நித்தியதசீதரனின் சொற்பொழிவு இடம்பெறும். (1-9)

## அரசியல் கட்சிகளின் செயலாளர்கள் தேர்தல் ஆணையாளருடன் சந்திப்பு

கொழும்பு, ஏப். 20

தேர்தல்கள் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்காவுக்கும் மேல்மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடும் கட்சிகளின் செயலாளர்களுக்குமிடையில் நாளை செவ்வாய்க்கிழமை ராஜ கிரியவில் அமைந்துள்ள தேர்தல்கள் செயலகத்தில் சந்திப்பொன்று இடம்பெற வுள்ளது.

இம்மாதம் 25ஆம் திகதி இடம்பெறவுள்ள மேல்மாகாணசபைத் தேர்தலுக்கு முன்னதான இறுதிச் சந்திப்பு இதுவென்று தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

பிழையான வாக்குப் பதிவுகளைத் தடுப்பது தொடர்பிலும் தேர்தல் வன்முறைகளைத் தடுப்பது தொடர்பிலும் தேர்தல்கள் ஆணையாளர் இச்சந்திப்பின்போது கட்சியின் செயலாளர்களுக்கு அறிவுறுத்துவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோல் தற்போது அதிகரித்துக் காணப்படுகின்றன என்று கூறப்படும் தேர்தல் வன்முறைகளைத் தடுப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு கட்சிகளின் செயலாளர்கள் இச்சந்திப்பின்போது தேர்தல்கள் ஆணையாளரிடம் வேண்டுகோள் விடுப்பர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்



# பிரபா கணேசனின் கருத்துக்கு மறுப்பு

கொழும்பு, ஏப். 20

'சுடர் ஒளி' ஆசிரியர் ந.வித்தியாதரன் கைதுசெய்யப்பட்டமை தொடர்பாக மேல் மாகாணசபையின் முன்னாள் உறுப்பின ரும் ஜனநாயக மக்கள் முன்னணியின் உப தலைவருமான பிரபா கணேசன் தெரி வித்த கருத்துக்கு மறுப்புத் தெரிவிக்கப் பட்டிருக்கின்றது.

கொழும்பிலிருந்து வெளியாகும் ஆங் கில வார இதழ் ஒன்றில் பிரபா கணேச னின் இந்தக் கருத்து சமீபத்தில் வெளி யாகியிருந்தது.

'சுடர் ஒளி' ஆசிரியர் வித்தியாதரன் கடத் தப்பட்டார் என்ற தகவல் வெளியானதும் தமது தலைவர் மனோ கணேசன் உரியதரப் புகளுடன் தொடர்புகொண்டு நடவடிக்கை எடுத்ததன் விளைவாகவே அவர் கடத்தப்பட வில்லை, கைது செய்யப்பட்டார் என்று அறி விக்கப்பட்டது என்ற சாரப்பட பிரபா கணேசன் குறித்த ஆங்கில வார இதழுக்கு வழங்கிய செவ்வியில் குறிப்பிட்டிருந்தார்.

ஆனால், அவ்வாறு மனோ கணேசன் நடவடிக்கை எடுத்திருந்தால், தமது கவ னத்துக்குத் தெரியப்படுத்தியிருப்பார் என் றும், ஆனால் வித்தியாதரனின் கைதுதொடர் பாக மனோ கணேசனோ அவரது கட்சியைச் சார்ந்தவர்களோ தம்முடன் தொடர்பு கொள்ளவில்லை - என்றும் 'சுடர் ஒளி' பத் திரிகையின் நிர்வாக இயக்குநர் மறுப்புத் தெரிவித்துள்ளார்.

பத்திரிகை ஆசிரியர் வித்தியாதரனின் கைதை அரசியல் நோக்கங்களுக்காகப் பயன் படுத்துவது கவலையளிக்கிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (அ-சி)

## புதுமாத்தளனுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுப்பொருள்களை கப்பலில் ஏற் றும் பணிகள் இடம்பெற்றதாகவும், நேற்று முன்தினமும் 1,200 மெற்றிக் தொன் பொருள்கள் அனுப்பி வைக்கப்பட்ட தாகவும் தெரிவிக்கப்பட்டது. (அ-6)

## பிரபாகரன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கையோடுதான் பிரபாகரன் போராட்டத் தைத் தொடங்கினார். புலிகளினதும் பிர பாகரனதும் இலட்சியங்கள் உன்னதமானவை. ஆனால் அவர்களையும் அறியாமல் அதற் குள் பயங்கரவாதம் புகுந்துவிட்டது. அவர் களில் சிலர் பயங்கரவாதிகளாக இருக்கக் கூடும்'' என்று கருணாநிதி குறிப்பிட்டார்.

''பிரபாகரனின் கொள்கை சிறந்தது. ஆனால் அதனை அடைவதற்கான சில வழிகள்தான் தவறானவை. எப்படியிருந் தாலும் பிரபாகரன் எனது நண்பர். இந்தப் போரிலே அவருக்கு ஏதேனும் ஆபத்து நேர்ந்தால் நான் மிகவும் ஆழ்ந்த வருத்த மடைவேன்'' என்று கருணாநிதி மேலும் சொன்னார்.

இதேவேளை -

தமிழக முதல்வர் கருணாநிதி கடந்த மாதம் வழங்கிய செவ்வி ஒன்றில், புலி களின் தலைவர் பிரபாகரனைக் காட்டமாக விமர்சித்திருந்ததுடன், அவரது கொள்கை கள் தவறானவை என்ற சாரப்படவும் கருத்துத் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (அ-சி)

## சர்வதேசத்தின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சில கட்சிகளும் அரசுக்கு வெளியேயுள்ள கட்சிகளும் அரசுக்கு அழுத்தங்கொடுக்கத் தொடங்கியுள்ளன.

குறிப்பாக அரசில் இணைந்துள்ள ஜாதிக ஹெல உறுமய மற்றும் விமல் வீரவன்ஸ வின் தேசிய சுதந்திரமுன்னணி ஆகிய கட்சிகள் இந்த அழுத்தங்களைத் தொடர்ச் சியாகக் கொடுத்து வருகின்றன.

இது ஒருபுறமிருக்க, இலங்கையின் வடக்கில் இடம்பெறும் யுத்தத்தை நிறுத்து மாறு சர்வதேச நாடுகள் பலவும் இலங் கைக்கு அழுத்தங் கொடுத்து வருகின்றன.

இந்த இரண்டு விடயங்கள் தொடர் பான அரசின் நிலைப்பாட்டை வெளி விவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகம இன்று நாடாளுமன்றில் தெரிவிப்பார் என்று நம்பகரமான வட்டாரங்கள் கூறுகின்றன.

## போர் இடை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிழமை அலரி மாளிகையில் ஆயுள்வேத வைத்தியர்கள், சமாதான நீதிவான்கள், விவசாய அமைப் புக்களின் பிரதிநிதிகள் மத்தியில் உரையாற் றுகையிலேயே ஜனா திபதி சர்வதேசத்திடம் மேற்கண்டவாறு கேட்டார்.

அரசாங்க ஆயுதப் படைகள் நடத்தும் இரா ணுவ நடவடிக்கைகள் தமிழ்மக்களுக்கு எதிரானவை அல்ல. படையினர் தமிழ் மக் களை துன்புறுத்துவதும் இல்லை. வேறு வகை கஷ்டங்களுக்கு ஆளாக்குவதும் இல்லை. அவர்கள் பயங்கரவாத அமைப்பு ஒன்றுக்கு எதிராகவே தாக்குதல்களை நடத்துகிறார்கள். என் மீதும் பாதுகாப்புச் செயலர் மீதும் இராணுவத் தளபதி மீதும் சில அரசியல் வாதிகள் மனித உரிமை களை நாம் மீறுவதாகக் குற்றஞ் சாட்டு கிறார்கள். இவ்வாறு குற்றஞ்சாட்டி நாட் டுக்கு நம்பிக்கைத் துரோகம் செய்வதை விட அவர்கள் தூக்கு மேடையை எதிர் நோக்கலாம்.

நாட்டின் நன்மை கருதி எடுக்கப்படும் முடிவுகள் சில ருக்கு பிடித்தமற்ற வையாக இருக்கக் கூடும். ஆனால் மக் களின் நலன்கருதி மிகக் குறிப்பாக இனிப் பிறக்கப் போகும் எதிர்கால சந்ததியினரின் நலன்கருதியே அத்தகைய முடிவு கள் எடுக்கப்படு கின்றன - என்றார். (அ-6)

## இலங்கை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரிட்டனின் வெளிவிவகார அமைச்சர் டேவிட் மில்லிபான்ட் இது தொடர்பாக விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட் டிருப்பவை வருமாறு:-

இலங்கையின் வடபகுதியில் பல ஆயிரக்கணக்கான உயிர்களுக்கு அச் சுறுத்தல் விடுக்கும் வண்ணம் தொடரும் மோதல் குறித்து நான் ஆழ்ந்த கவலைய டைந்துள்ளேன்.

இலங்கையில் உடனடியாக யுத்தநிறுத் தம் கொண்டுவரப்பட வேண்டும். பொது மக்கள் பாதுகாப்பாக வெளியேற அனு மதிக்கப்பட வேண்டும் என்ற வேண்டு கோளை பிரிட்டன் தொடர்ந்து விடுக்கி றது.

இலங்கைக்கு சமீபத்தில் விஜயம் மேற்கொண்டஐ.நா.செயலர் பான் கீ மூனின் பிரதம அதிகாரி விஜய் நம்பி யாரைத் தனது விஜயம் குறித்து பாதுகாப் புச் சபைக்கு உடனடியாக அறிக்கை சமர்ப்பிக்குமாறு பிரிட்டன் வேண்டு கோள் விடுக்கும். மேலும் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதியை ஐக்கிய நாடுகளு டன் ஆலோசிப்பதற்காக பிரிட்டன் உடனடியாக நியூயோர்க் அனுப்புகிறது.

மேலும் உயிரிழப்புகள் ஏற்படுவது துயரத்தை அதிகரிக்கும். ஆர்ப்பாட் டங்களில் ஈடுபடுவோரின் குரல்களை நாங்கள் செவிமடுக்கின்றோம். தொடர்ந் தும் செவிமடுப்போம் - என்று தெரிவிக் கப்பட்டுள்ளது. (அ-சி)

## கடும்மழையின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறுகிய இடைவெளியில் மக்கள் மீது நேற்று காலை 6 மணிவரை படையினர் நடத்திய தாக்குதல்களில் 178-க்கும் அதிக மான அப்பாவி தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளதுடன் 344-க்கும் அதிக மானோர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்று அதிகாலை முதல் மக்கள் பாது காப்பு வலயம் மீது பெரும் எடுப்பில் நடத் தப்பட்ட படையினரின் தாக்குதல்க ளில் முள்ளிவாய்க்கால், இரட்டைவாய்க்கால், வலஞர்மடம், அம்பலவன்பொக்கணை, இடைக்காடு மற்றும் மாத்தளன் பகுதிகள் மீது ஷெல்கள் வீசப்பட்டுள்ளன.

பல்லாயிரக்கணக்கான துப்பாக்கி ரவைகளும் பீரங்கிக் குண்டுகளும் ஏவப் பட்டன. டாங்கிகள் மூலம் 200 வரையான குண்டுகள் ஏவப்பட்டன.

நேற்றுக் காலை 8 மணி தொடக்கம் இரவு 7மணிவரையும் நடத்தப்பட்ட தாக்குதல்களில் 132-க்கும் அதிகமனோர் படுகொலை செய்யப்பட்டும் 198 பேர் காயமடைந்தும் உள்ளனர்.

கடும் மழை பெய்துவரும் நிலையில் இத்தாக்குதல்கள் தொடர்ச்சியாக நடத்தப் பட்டு வந்தமையினால் மக்கள் பெரும் இன்னல்களுக்கு உள்ளாகி அவதிப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இத் தாக்குதல்களில் மாத்தளன் மருத்து வமனையில் 52 பேரும் முள்ளிவாய்க்கால் மருத்துவ சிகிச்சை நிலையத்தில் 42 பேரும் நட்டாங்கண்டல் மருத்துவ சிகிச்சை நிலையத்தில் 54 பேரும் திலீபன் மருத்துவ சிகிச்சைப்பிரிவில் 60 பேரும் சிகிச் சைக்காக அனு மதிக்கப்பட்டுள் ளனர்- என்று விவ ரிக்கப்பட்டுள்ளது.

## பிரிட்டன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தற்கு பிரிட்டனுக்கு எந்தவித உரிமையும் இல்லை-

இலங்கை விவகாரம் தொடர்பாக இடம் பெறும் கலந்துரையாடலுக்கு தனது பிரதி நிதி ஒருவரை அனுப்ப பிரிட்டனுக்கு உரிமை கிடையாது -

பிரிட்டன் அனுப்பியுள்ள பிரதிநிதியை இலங்கை அரசு எப்போதோ நிராகரித்து விட்டது -

சிறிலங்கா பிரிட்டனின் ஆட்சியில் இப்போது இல்லை - என்றார். (அ-1)

## வன்னியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றது. இதனால் மக்களை அந்தப் பகுதி ஊடாக அழைத்து வருவதில் சிக்கல்நிலை உருவாகியுள்ளது என எனக்குச் சொல் லப்பட்டுள்ளது.

தற்போதுள்ள சூழ்நிலையில் இது முடியாது. இதனை நாம் பலமுறை ஆலோ சித்தும் யோசித்தும் உள்ளோம். தரைப் பகுதிகளில் கடும் சண்டை நடைபெறுகி றது. அதனால் அந்த வழியாக மக்களை கப்பலுக்குக் கொண்டு வருவது உசிதமாக இருக்காது என்றே எமக்குத் தெரிவிக்கப் பட்டுள்ளது

சுகாதாரத் துறையினரால் அடையாளம் காணப்பட்டவர்களையே நாம் அழைத்து வருகின்றோம். பெரும் எண்ணிக்கையி லான வயோதிபர்கள் காயமடையா விட்டாலும் நோய்வாய்ப்படாவிட்டாலும் வெளியேற அனுமதிக் கப்பட்டுள்ளனர்.

தற்சமயம் உயிரிழந்தவர்களின் எண் ணிக்கையைக் குறிப்பிட முடியாது. கடந்த வாரங்களில் உயிரிழந்தவர்களின் எண் ணிக்கை பதியப்படவில்லை. சுகாதாரத் துறை யினரால் வழங்கப்படும் அறிக்கையை மட்டும்தான் நாங்கள் பார்க்கிறோம்.

உரிய முறையில் வைத்தியக் கவனிப்பு இல்லாமல் அல்லது மருந்துகள் இல்லா மல் உயிரிழப்போரின் எண்ணிக்கையை மட்டுமே பதிகின்றனர். அங்கு அனைத்து பதிவுகளையும் பார்ப்பதற்கு சந்தர்ப்பம் கிடைப்பதில்லை. உயிரிழந்தவர்களின் சடலங்கள் எங்கு கிடக்கின்றன என்றுகூட எமக்குத் தெரியாது.

எனவே, உயிரிழந்தவர்களின் எண் ணிக்கையை எம்மால் சரியாகக் கூற முடி யாது- என்றார் போல் ஹஸ்ரெலா. (அ-6)

இணையத்தள வடிவமைப்பில் சர்வதேச அங்கத்துவம்(CIW) CIW
XHTML, CSS, JavaScript , PHP, MySQL, XML (RSS,Maps)
Dreamweaver, Photoshop, Flash, Server(Apache and IIS)
Domain Registration,Hosting,Control panel,SearchEngine optimize,Google™ (WebMaster tools, AdSense, Adwords)
E-mail marketing, Affiliate marketing, Merchant tools.
Extra: Introduction ASP, JSP New Batch :22.04.2009 12.00 PM
MCS Supported By UNDP/JRRP விபரங்களுக்கு நேரில் 324, பலாலி வீதி, யாழ்ப்பாணம் பரமேஸ்வரா சந்தி அருகில், Bus Root - 764

நீங்களும் Engineer
★ செயன்முறையுடன் கூடிய விரைவான வகுப்புக்கள்.
★ Microsoft நிறுவன அதிபர் Bill Gatesஇன் கையொப்பத்துடன் கூடிய சர்வதேச தர சான்றிதழ்
★ Network Manager, System Admin., System Engineer போன்ற வருமானம் கூடிய வேலைவாய்ப்பு
★ வெளிநாட்டு விசாவிற்கான மேலதிக புள்ளிகள்.
★ USA,UK, பெங்களூர் பல்கலைக்கழகங்களில்BSc,MSc
★ Student Visa, Work Permit _Carrier guidance
புதிய பிரிவு ஆரம்பம் 22.04.2009 07.30AM
கொழும்புபல்கலைக்கழகத்தின் சிறப்பு விருது பெற்ற நிறுவனம்
விபரங்கள் நேரில் MCS Supported By UNDP/JRRP 324, பலாலி வீதி, யாழ்ப்பாணம் பரமேஸ்வரா சந்தி அருகில், Bus Root - 764

## மரண அறிவித்தல்

### விக்ரர் றொபட்சன் தியாகராஜா

(இளைப்பாறிய உத்தியோகஸ்தர், ஊர்காவற்றுறை பிரதேச சபை)



இல.123/1, சுருவில் வீதி, ஊர்காவற்றுறை யைச் சேர்ந்த விக்ரர் றொபட்சன் தியாகராஜா நேற்று (19.04.2009) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற S.S.M.தியாக ராஜா (இளைப்பாறிய அதிபர், ரயில் நிலையம்), செல்வமலர் ஆகியோரின் அன்பு மகனும் ஞானேஸ்வரியின் அன்புக் கணவரும் பவானி (லண்டன்), ஜோன்சன் (கிராமசேவகர், ஊர்காவற்றுறை), கிருசாந்தி ஆகியோரின் பாசமிகு தந்தையும் அன்ரனி திலிவரின் (லண்டன்), அன்பு மாமனும் டேவிட்சச்சினின் (லண்டன்) அன்புப் பேரனும் காலஞ்சென்ற ஜோன்சன், ஹெக்டர், மாலினி, மொறீன், றெஜினோல்ட், கயசிந், மேளின் ஆகி யோரின் அன்புச் சகோதரனும் றீற்றாவின்சனின் சகலனும் மீரா (சுவிஸ்), கிறிஸ்ரியன்ஸன், முத்துக்குமார், அருள்நேசன், அன்ர னிற்றா, காலஞ்சென்ற ஞானசேகரன், மேரிகிறேஸ் (லண்டன்), பீற்றர், ஞானேந்திரன், ஞானசீலி, ஞானதீபன், ஞானரூபன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (21.04.2009) செவ் வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடை பெற்றுபூதவுடல் ஊர்காவற்றுறை அந்தோனியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

123/1, சுருவில் வீதி,
ஊர்காவற்றுறை.

தகவல்:
V.R.C. ஜோன்சன் (மகன்)

இணையற்ற சேவையினூடு நிகரற்ற சாதனையாளர்களை உருவாக்கிய நிறுவனத்தில்
O/L DAY CLASS பகல் நேர வகுப்பு
அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
அதிபர்.
The Express Institute Irupalai, Kopay.

யாழ். நகரில் No.1, கல்வி நிறுவனம்
எடிசன் அக்கடமி
*யாழ்ப்பாணம், *வட்டுக்கோட்டை, *சண்டிலிப்பாய் ஆகிய மூன்று இடங் களிலும்.
O/L DAY CLASS
காலை 8.00 மணி முதல் பிற்பகல் 1 மணிவரை.
ஆரம்பம்:- 20.04.2009

புவியியல் N.BABU
A/L 2010 வரைபடங்கள் Tue,Thu-4.00pm
A/L 2011 செய்முறைப் புவியியல் Tue,Thu-5.00pm
ஆரம்பம்: 21.04.2009(Tue)
நாவலர் ஆனைப்பந்தி, யாழ்.

SHAMROCK ஈச்சமோட்டை யாழ்.
O/L DAY CLASS
(Best Staff)
Spoken Eng.& Sinhala.

IBS சுண்டுக்குளி
O/L DAY CLASS
இன்று (20.04.2009) 12 மணிக்கு ஆரம்பம்.

ஐடியல் அக்கடமி
சிரணிச் சந்தி, சண்டிலிப்பாய். இடைப்பிட்டி, காரைநகர். நீராவியடி, யாழ்.நகர். அந்தோனியார் கோயில் அருகில், மானிப்பாய்.
இன்று ஆரம்பம்
O/L Day Class
எமது நான்கு கல்வி நிறுவனங்களிலும் நாள் வகுப்புகள்
O/L Day Class, A/L 2011
கலை, வர்த்தக பிரிவுகள் இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகின்றன.
A/L 2011

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20.04.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org